பக்கங்கள்-16 06.மார்.2022 விலை–40.00




# தினப்புயல்

THINAPPUYAL
තිනප්පුයල්
REGISTERED AS A NEWS PAPER AT THE DEP. of . N.A :- RBN/4/3/06




மலர்-01 Tel&Fax- 0242227558, Hot line: 0711850885. Email:thinappuyal2014@gmail.com, www.thinappuyalnews.com இதழ் –371




## இலங்கை மீனவர் விவகாரத்தில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் இரட்டை வேடம்



## பொருளாதார நெருக்கடிக்குள் இருந்து அரசாங்கம் மீழ்ச்சி பெறுமா?



## 13வது திருத்தச்சட்டமும் முருங்கை மரம் ஏறும் வேதாளங்களும்

01.02.2022அன்றையதினம்மருதங்கேணி பிரதேச செயலகத்தை முடக்கி போராட்டத்தில் ஈடுபட்ட கடற்றொழிலாளர்களைச் சந்தித்த மீன்பிடித்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களிடம் தங்களது பிரச்சினைகள் குறித்தும், அதற்கானத் தீர்வுகள் குறித்துப் பேசிய கடற்றொழிலாளர்கள், எங்களுடைய இழப்பு ஈடுபடுவதற்கு ஏதுவாக எடுக்கும் எந்த முயற்சிக்கும் நாங்கள் தடையில்லை. ஏனென்றால் அதற்காகத் தான் நாங்கள் வந்திருக்கிறோம். ஐந்து வருடமாக இந்த முயற்சி தொடர்ந்திருக்கிறது. இவ்வளவு காலம் எடுத்த முயற்சிகளில் இன்றைக்கும் நீங்கள் ஒரு கருத்தினை கூறிக்கொண்டு வருகிறீர்கள். அதை நாங்கள் கட்டாயம் நம்பத்தான் வேண்டும்.

பெற்றுக்கொடுக்காததன் காரணமாக அவர் மீது ஆத்திரமடைந்த அப்பகுதி மக்கள் அமைச்சரை தகாத வார்த்தைகளால் திட்டித்தீர்க்கின்ற சம்பவம் பதிவாகியிருக்கிறது. அது மட்டுமல்லாமல் அவரது வாகனத்தை மறித்து அவரைப் பின்தொடர்ந்து அதாவது அவரது நடவடிக்கைகள் எதனையும் செய்யவிடாது தடுத்த சம்பவமும் நடந்திருக்கிறது. இதனது பின்னணியில் என்னதான் நடைபெறுகிறது என்பதைப் பார்க்கவேண்டும். அமைச்சர், ஊடகவியலாளர் சந்திப்பிலும் கடற்றொழிலாளர்களையும் சந்தித்துப்பேசுகின்றபோது ஆத்திரமடைந்த வீடியோக்களும் சமூக வலைத்தளங்களில் பகிரப்பட்டு வருகின்றது. உண்மையில் இந்த மீனவர்களுக்கானத் தீர்வு என்ன?.



# இலங்கை மீனவர் விவகாரத்தில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் இரட்டை வேடம்

நம்புகிறோம். ஆனால் தீர்க்கப்படாத நேரத்தில் நீங்கள் கடற்படையை விட்டு நாங்கள் கதைப்போம் என்று கூறுகின்றீர்கள். கதைக்காத சந்தர்ப்பத்தில் நாங்கள் எங்களுடைய எதிர்ப்பையும் அவர்களுக்குக் காட்டுவதற்கு நீங்கள் அனுமதிக்கவேண்டும். அவர்களைக் கொணர்ந்து எங்களை திருப்பி உடனேயே அனுப்பிவிடக்கூடாது. நாங்கள் அழைத்ததற்கிணங்க நீங்கள் வந்திருக்கிறீர்கள். நாங்கள் இதுவரை மாவட்டச் செயலகம், பிரதேச செயலகம் எனப் பலரிடம் கூறியும் எங்களுக்கு எந்த முடிவும் வரவில்லை. இப்போது நீங்கள் உயிர் பறிபோனதற்குப் பிறகு வந்திருக்கிறீர்கள். நீங்களும் பிடிப்பம் அல்லது பிடியுங்கோ என்று கூறுகிறீர்கள். எங்களுக்குப் பிடிப்பது பெரிய வேலை இல்லை. அப்படிப் பிடிக்கப்போகும் எங்களுக்கு இந்தக் கரையில் எந்தவொரு இராணுவத்தாலோ அல்லது கடற்படையாலோ எந்தவொரு பிரச்சினையும் இல்லை என்று கூறினால் நாங்கள் இந்த இடத்திலேயே உங்களுக்கு உறுதிமொழியளிக்கின்றோம் இந்த ரோலர் இங்கு வராது. இந்த உறுதிமொழியினை நீங்கள் எங்களுக்கு வழங்கினால் எல்லாம் சரி. ரோலர் வரும்போது எங்களிடம் கூறிவிட்டு வருவதில்லை. நாங்களும் ரோலரைத் தேடிப் போவதில்லை. நீங்கள் இங்கு நிற்கும் போது வந்தால் உங்களிடம் அறிவிக்கலாம். அதன் பின்னர் ரோலர் படகுகள் இங்கு வந்தால் நாங்கள் யாரிடம் அறிவிப்பது? இலங்கை கடற்பரப்பிற்குள் அத்துமீறி நுழைகின்ற அந்நிய நாட்டின் படகுகளை பிடிப்பதற்கு கடற்படைக்கு அதிகாரம் உண்டு. ஏன் அவர்களை அதனைச் செய்வதில்லை. அந்த அதிகாரத்தினை நீங்கள் வழங்கத்தானே வேண்டும். நீங்கள் வழங்கிய இந்த உறுதிமொழிகளை எழுத்துமூலம் எங்களிடம் தரவேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டபோதிலும் மீன்பிடித்துறை அமைச்சர் அதற்கு இணக்கம் தெரிவிக்காமல் அவ்விடத்திலிருந்து புறப்பட்டுச் சென்றமை குறிப்பிடத்தக்கது.

தொடர்கின்ற வடபகுதி மீனவர்களினுடைய பிரச்சினையானது, இன்று அவர்களுடைய ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன. மீன்பிடித்துறைக்குப் பொறுப்பான அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் சரியானதொரு தீர்வினைப்



மீனவர்களின் பிரச்சினை பூகோளப் பிரச்சினையாக மாறியுள்ளது. இப்பிரச்சினை இன்று நேற்று முளைத்தது அல்ல. எனினும் தற்போது கடற்றொழில் அமைச்சராக இருக்கின்ற டக்ளஸ் தேவானந்தா அவர்கள் இரட்டைவேடம் தரிப்பவராகத் தான் செயற்பட்டு வருகின்றார். காரணம் அரசின் நிகழ்ச்சி நிரலை மீறி முப்படைத் தளபதியாக இருக்கின்ற ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அவர்களின் பேச்சை மீறி குறித்த அமைச்சரால் எதனையும் செய்ய முடியாத அளவிற்குத் தான் அவரது பதவி இருக்கிறது. அதாவது பல்லுப்பிடுங்கிய பாம்பு அல்லது முதுகெலும்பில்லாதவர்கள் என்றெல்லாம் கூறுவார்களே அவர்களைப் போலத்தான் இவர்களும். இவர் மாத்திரமல்ல இலங்கையின் எந்த அமைச்சராக இருந்தாலும் ஜனாதிபதியின் சொல்லைத்தான் கேட்கவேண்டும். உண்மையில் அவர் அரசாங்கத்தில் இருந்தாலும் அரசாங்கத்தை மீறி எதனையும் செய்ய முடியாத நிலையில் இருக்கிறார்.

நாம் தொலைபேசியின் ஊடாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களைத் தொடர்புகொண்ட போது, யாழ் மாவட்டத்தைப் பொறுத்தவரையில் அங்கிருக்கும் தமிழ் அரசியல் கட்சிகள் தான் குழப்பங்களை ஏற்படுத்தி மக்கள் ஆத்திரமடைய வைப்பதாகவும், இதற்கானத் தீர்வினை தான் பெற்றுக்கொடுப்பதாகவும் கூறியிருந்தார். இந்த குழப்பநிலைகளுக்கு மத்தியில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் உடனடியாக அவ்விடத்திலிருந்து தனது வாகனத்தில் புறப்பட்டுச் சென்றுவிட்டார். அதாவது கடற்றொழிலாளர்கள் கேட்ட உறுதிமொழியினை எழுத்து மூலம் வழங்குவதற்கு அமைச்சர் அவர்கள் தயாராகவும் இல்லை. வெறுமனே வாயால் உறுதிமொழி வழங்கியதை அவர்கள் ஏற்கவில்லை.

இத்தனை வருடகாலங்களாக பலரின் வாயால் வழங்கிய உறுதிமொழிகளை நன்கு கேட்டவர்கள் அவர்கள். ஆதலால் அவர்களின் இத்தீர்மானம் குறித்து அமைச்சர் நன்கு சிந்தித்து பதில் வழங்கியிருக்கவும் வேண்டும். ஏனெனில் தொடர்ச்சியாக இந்திய மீனவர்களின் அத்துமீறல் இலங்கைக் கடற்பரப்பிற்குள் நடந்து வருகிறது. எமது மீனவர்களின் வாழ்வாதாரம் பாதிப்படைகின்றது என்பது உண்மைதான். இன்று உயிர் பறிபோகும் அளவிற்கு நிலைமை மோசமடைந்துள்ளதால் மக்கள் ஆத்திரப்படுவதில் ஒன்றும் தவறில்லையே. மக்களது துயரங்களை செவிமடுத்து தீர்வு வழங்கவேண்டிய நிலையில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் இல்லை என்கிற அளவிற்கு மக்கள் கருத்துக்களை முன்வைக்கிறார்கள். அதேநேரம் அமைச்சர் அவர்கள் கூறுவதை அந்த மக்கள் ஏற்றுக்கொள்ள முடியாத அளவிற்கு சூழ்நிலை காணப்பட்டது. கடற்படையிடம் முறையிட்டால் தங்களுக்கு இந்திய மீனவர்களைப் பிடிக்க உத்தரவு வரவில்லை என்று கூறுகின்றார்கள் என அந்த மக்கள் அவ்விடத்தில் கூறினார்கள். இன்னொரு பக்கம் இந்திய மீனவர்களின் மீது கைவைக்கின்ற போது அது இலங்கை - இந்திய நாடுகளுக்கிடையில் பாதிப்பினை ஏற்படுத்தும். பூகோள ரீதியாகவும் தாக்கத்தினை ஏற்படுத்தும். இந்திய - இலங்கை நட்புறவுப்பாலம் சிதைக்கப்படும் என்கிற கோணத்திலும் இலங்கை அரசாங்கம் வடபகுதி மீனவர்களின் பிரச்சினைகள் தொடர்பில் கரிசனை காட்டாமல் இருக்கலாம் என்றும் கருத்துக்கள் முன்வைக்கப்படுகின்றது. அதாவது இரட்டைவேடம் போடுகின்ற நிலைமைதான் இந்த மீனவர்களின் பிரச்சினையிலும் கையாளப்படுகின்றது என்பதை உணரமுடிகின்றது.

இன்னொரு பக்கம் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களின் பதவிக்காலத்திலேயே இந்தப் பிரச்சினைக்கானத் தீர்வினைப் பெற்றுத்தருவார் என்றும் மக்கள் காத்திருக்கும் இந்த சூழலில், அவரால் தீர்வினைக் கொடுக்க முடியாத நிலை ஏற்பட்டிருக்கிறது. இதே யுத்த காலத்தில் இப் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டிருந்தால் பலர் சுட்டுக்கொல்லப்பட்டிருப்பார்கள் என்றும் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் ஒரு துரோகி என்றும் கோசமிடப்பட்டுள்ளது. அங்கு இரண்டு உயிர்கள் பலியாகியிருக்கிறது. அவர்களுக்கு பதில் வழங்குவது யார்?. அவர்களது குடும்பங்களின் நிலை?. தீர்வுக்காக மக்கள் இன்று வீதிகளில் இறங்கிப்போராடுகின்றார்கள். எங்களுக்கானப் பாதுகாப்பிற்கு உத்தரவாதத்தினைத் தாருங்கள் அமைச்சர் அவர்களே. நாங்கள் கடலில் இறங்கி அத்துமீறிவரும் ரோலர் படகுகளைப் பிடித்து உங்களிடம் ஒப்படைக்கின்றோம் என்று. வடமராட்சி மீனவர்கள் உணர்வுபூர்வமானவர்கள். தாயகம், தேசியம், சுயநிர்ணய உரிமை என்கின்ற கொள்கை ரீதியில் வாழ்ந்த அந்த மக்கள் அவர்கள் வீரம் செறிந்த மீனவர்கள். படகுகளை தடுத்துநிறுத்துவதற்கான அனுமதிக்காக எழுத்துமூலம் தாருங்கள் எனக்கேட்க அமைச்சர் அவர்கள் நகர்ந்து செல்கின்றார்.

தமிழீழ விடுதலைப்புலிகளின் ஆயுதப்போராட்டம்இடம்பெற்றுக்கொண்டிருந்த காலத்தில் கடல், வான், தரை வளங்களைத் தம்வசம் வைத்திருந்தார்கள். தற்போது சர்வதேச நாடுகள் பல இலங்கைக்குள் கால் வைத்திருக்கிறார்கள். கடற்படையால் கடல்வளத்தை பாதுகாப்பாக வைத்திருக்கவேண்டும். அதற்குப் பொறுப்பானவர்கள் ஜனாதிபதியும், கடற்படையினரும் தான். இன்று பல தமிழர்கள் கடல் தொழில் செய்கின்றார்கள். விடுதலைப்புலிகளின் காலத்தில் இலங்கையின் கடற்பகுதி பாதுகாக்கப்பட்டு வந்தது. எனினும் தற்போது இலங்கையின் கடற்பகுதிகள் இந்திய மீனவர்களால் ஆக்கிரமிக்கப்படுகின்றது. சர்வதேச நாடுகளின் கண்காணிப்புக்கு உள்ளாக்கப்பட்டிருக்கின்றது. இலங்கையின் கடல் வளங்கள் பறிபோய்க்கொண்டிருக்கிறது. மீன் வளம் பாதிக்கப்படுகின்றது. மீன்களின் தொடர்ச்சியான இனப்பெருக்கத்திற்கும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. ரோலர் படகுகளை அதிகளவில் இந்திய மீனவர்கள் பயன்படுத்தி வடபகுதிக்குள் அத்துமீறி மீன்களைப் பிடித்துச் செல்கின்றனர். முருகைக்கற்பாறைகள் சிதைவுறுகின்றன. மீன்களின் உணவுக்கும் சிக்கல் ஏற்பட்டுள்ளது. எமது மீனவர்களின் வலைகள் அறுக்கப்படுகின்றன.

இலங்கையின் கரையோரப் பகுதிகள் சீனாவின் வசமாகிவிடும் என்கிற ரீதியில் இந்தியாவும், இலங்கையின் கடற்பரப்பினை அவதானித்து வருகின்றது. தனது நாட்டின் பாதுகாப்பிற்குப் பிரச்சினை ஏற்பட்டுவிடும் என்பதில் இந்தியா அக்கறையுடன் இருக்கிறது. சீனாவும் இரு நாட்டு மீனவர்களையும் மோதவிடுவதையே விரும்புகின்றது. இந்தியாவும் தமிழ் மக்களுக்கு எதனையும் செய்யவில்லை. சீனாவும் தமிழ் மக்களுக்கு ஒன்றையும் செய்யப்போவதில்லை. அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் இப்புதிய அரசு தனக்கான அதிகாரங்களை வழங்கவில்லை என்பதை ஒத்துக்கொண்டு பதவியினைத் துறந்து மக்களோடு போராட வேண்டும். வெறுமனே பதவியில் இருந்துகொண்டு பிரச்சினைகளைத் தீர்க்காமல் காலத்தை இழுத்தடிப்பது என்பது வீணான வேலையாகும். எத்தனை வருடங்களாக மீனவர்களின் பிரச்சினைகள் தொடர்கின்றது. கடற்படைக்கு உத்தரவிடும் அதிகாரமும் அமைச்சர் டக்ளஸ் அவர்களுக்கு இல்லை என்பது உண்மை.

வடபகுதி கடற்படைக்கான அதிகாரங்கள் அதிகமாக்கப்படவேண்டும். கடற்படை அத்துமீறிவரும் இந்திய மீனவர்களைச் சுட்டாலும் சீனாவுக்கு மகிழ்ச்சியே. இதனைத்தான் அந்நாடு விரும்புகின்றது. தமிழர்களையே தொடர்ந்தும் இலங்கை பகடைக்காய்களாகப் பயன்படுத்துகின்றது. வடபகுதிக்கான சீன அதிகாரியின் திடீர் விஜயம் இந்தியாவிற்கு அழுத்தத்தையே கொடுத்திருக்கிறது. தமிழ்நாட்டிலும் இந்திய மீனவர்களை வைத்தே அரசியல் செய்கின்றார்கள். அவர்களும் அத்துமீறுகின்ற செயற்பாட்டில் இருந்து பின்வாங்கவில்லை. வடபகுதி மீனவர்கள் துணிச்சல்மிக்கவர்கள். இன்று களத்தில் இறங்கியிருக்கிறார்கள். தமக்கான தீர்வை தாமே பெற்றுக்கொள்ளவேண்டும் எனத் துணிந்துள்ளார்கள். மக்கள் புரட்சி மலர்ந்துள்ளது. இப்புரட்சியின் மூலமே எமது கடல் வளத்தை பாதுகாத்துக்கொள்ள முடியும். தீர்வுகளைப் பெறமுடியும்.

**இரணியன்**

தினப்புயல்
ஆசிரியர் பீடம்
இல:154, 6வது ஒழுங்கை
தேக்கவத்தை,
வவுனியா.

## சுதந்திரதினமும், மக்கள் படும் அவலமும்

பெப்ரவரி. 04 ஆம் திகதி இலங்கையின் 74வது சுதந்திர தினக் கொண்டாட்டங்கள் கொழும்பு சுதந்திர சதுக்க வளாகத்தில் நாட்டின் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அவர்களின் தலைமையில். சுகாதார வழிகாட்டுதல்களைப் பின்பற்றி நடைபெற்றது. இந்நிகழ்வில் நாட்டின் பிரதமர். சபாநாயகர். ஆளுந் தரப்பின் அமைச்சர்கள். இராஜாங்க அமைச்சர்கள். பாராளுமன்ற உறுப்பினர்கள். முப்படைப் பிரதானிகள். உயர் அதிகாரிகள். பாதுகாப்புப் பிரிவின் உயர் அதிகாரிகள் எனப் பலர் கலந்துகொண்டனர். எனினும் இலங்கைத் திருநாடு சுதந்திரமடைந்து 70 வருடங்களைக் கடந்துவிட்டபோதிலும். நாட்டு மக்கள் சுதந்திரக்காற்றைச் சுவாசிக்க முடியாமல் திணறி வரும் அவல நிலையினைக் காண்கிறோம். அதிலும் குறிப்பாக தமிழ் மக்கள் 30 வருடகாலப் போராட்டத்தின் பின்னரான இன்றைய நாட்களிலும் அடக்குமுறைகளாலும். தீர்க்கப்படாதப் பிரச்சினைகளாலும். உறவுகளைத் தேடி வீதியோரங்களில் கொட்டகைகளை அமைத்துப் போராட்டம் நடத்தி வருகின்றனர். இந்நாட்டில் இடம்பெற்ற மனித உரிமை மீறல் சம்பவங்களின் பின்னணியில் உள்ளவர்களுக்குத் தண்டனைகளை வழங்க இந்த அரசு உடன்படாத வகையில் சர்வதேச நீதிமன்றத்தின் வாயிற் கதவுகளைத் தட்டிக் காத்திருக்கின்றனர் தமிழ் மக்கள். இன்னொரு பக்கம் உலகையே உலுக்கிக்கொண்டிருக்கும் கொவிட் என்கிற வைரஸ் தொற்றின் காரணமாக இலங்கையும் பெரும் பாதிப்பினைச் சந்தித்துள்ளது. பொருளாதார ரீதியாக வீழ்ச்சியடைந்துள்ள இலங்கை சர்வதேச நாடுகளை நம்பியே நாட்டின் அனைத்துத் துறைகளையும் இயக்கவேண்டிய நிதியினை வாங்கவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக இலங்கையின் அத்தியாவசியப் பொருட்களுக்கானத் தட்டுப்பாடும். விலையேற்றமும் விண்ணைத் தொட்டுள்ளது. வேலைவாய்ப்பின்மை பிரச்சினை தலையெடுத்துள்ளது. இச்சுமை மக்களை வெகுவாகப் பாதித்துள்ளது. இன்று வெளிநாட்டு வேலைவாய்ப்பினைத் தேடிச் செல்லும் இளைஞர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

கோவிட் வைரசின் பரவல் அதிகரித்துவரும் சூழலில். புதிய திரிபான ஒமிக்ரோன் வேகமாக இலங்கையில் பரவி வருவதாக எச்சரிக்கப்பட்டுள்ளது. எனவே எதிர்வரும் நாட்கள் மிகவும் ஆபத்தானவை என்கின்றனர் சுகாதாரத்தரப்பினர். சுகாதாரவழிகாட்டல்களை கடுமையாக பின்பற்றுமாறு கோரிக்கை விடப்பட்டுள்ளது. மற்றொரு பக்கத்தில் முஸ்லீம் மக்களும் பாதிப்பினை எதிர்கொண்டுள்ளனர். தீர்க்கப்படாத பிரச்சினைகள் அவர்களுக்கும் இருக்கிறது. அதேவேளை இன்றைய நாட்டின் அரசிலும் குழப்பங்கள் ஏற்பட்டுள்ளது. இனப்பிரச்சினைக்கானத் தீர்வினை வலியுறுத்திவரும் தமிழ் மக்கள். ஒருபோதும் இலங்கையின் சுதந்திர தினத்தினைக் கொண்டாடுவதில்லை. தாயகம். தேசியம். சுயநிர்ணய உரிமை என்கிற கோட்பாடுகள் தொடர்ந்தும் தமிழினத்தின் அரசியலில் முன்னிலைப்படுத்தப்படுகின்றன. இந்த நாட்டில் பல இன்னல்களையும் கொடுமைகளையும் சந்தித்து அனுபவித்த இனமாக தமிழினம் திகழ்கின்றது. பல போராட்டங்கள் வெடித்தது. வடகிழக்கு இணைந்ததுதான் தமிழர்களின் தாயகம் என்பதை ஏற்க அரசு மறுத்து வருகிறது. தமிழர் நிலங்கள் இன்றும் பறிபோய்க்கொண்டுதான் இருக்கின்றன. இன்றும் வடபகுதி மீனவர்களால் போராட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. புதிய அரசியலமைப்பு தமிழ் மக்களுக்கு ஒன்றையும் வாரி வழங்கப்போவதில்லை. எனவே. தொடர்ச்சியாக இந்நாட்டினை படுபாதாளத்திற்குள் தள்ளும் செயற்பாட்டில் அரசு ஈடுபட முடியாது. விலையேற்றங்களால் மக்களை அவதியுறச் செய்ய முடியாது. அரசின் கொள்கைத் திட்டங்களில் மாற்றங்களை ஏற்படுத்தி. உள்நாட்டு உற்பத்தியினை அதிகரித்து. மக்களை அல்லல் படும் நிலையிலிருந்து மீட்கவேண்டிய நடவடிக்கைகளைச் செய்யவேண்டும்.

# 176 உலக வரலாற்றில் குறுஞ்சமர்



பெற்றுக்கொள்ளப்பட்ட அனுபவம். அறிவு. படைகளை நிர்வகிக்கும் திறன். ஆளணியில் ஒவ்வொருவரதும் சமர்த்திறன் ஆகியன ஆயுதந்தரித்த கிளர்ச்சியை அடக்க உதவியது மாத்திரமன்றி. கெரில்லா எதிர்ப்பு நடவடிக்கையைக் கணிசமான அளவு வினைத்திறன் மிக்கதாக வளர்ச்சியடையச் செய்யவும் உதவியது. இவ்விடயம் பற்றி சமர் புரிந்த தரப்பினரின் இழப்புக்களின் ஆய்வு தெளிவுபடுத்துகின்றது. 1943 ஆம் ஆண்டில் உட்துறையமைச்சுப் படைகளின் இழப்பு கெரில்லாக்களின் இழப்போடுஒப்பிடுகையில்மூன்றிலொரு பகுதியாக இருந்ததென்றால். இறுதியாண்டுகளில் இந்த விகிதாசாரம் பத்து மடங்காகவும் அதற்குக் கூடுதலாகவும் குறைவடைந்தது.

ஆனால். சமர் நடவடிக்கைகளின் வினைத்திறனை வெளிப்படுத்துகின்ற பிறிதொரு காரணி. நடவடிக்கையின் ஒட்டுமொத்த விளைவைக் கணிப்பதாகும். இதனைக்கொண்டு பின்வரும் முடிவுக்கே வரலாம். அதாவது. நடவடிக்கைகளின் கணிசமானளவு பகுதி எதுவித பயனற்ற முறையிலேயே முடிவடைந்தன. எடுத்துக்காட்டாக 1946 ஆம் ஆண்டு உட்துறையமைச்சுப் படைகளால் மேற்கொள்ளப்பட்ட கிட்டத்தட்ட மூவாயிரம் நடவடிக்கைகளில் 30 வீதத்திற்கு மேற்பட்டவை விளைவுகளற்றதாகவும் பிசகிய நடவடிக்கைகளாகவும் இருந்தன. எதிரியைப் பூரணமாக அழிக்கும் வரை திடமான நடவடிக்கையைத் தொடரும் கோட்பாடு ஒரு போதும் கடைப்பிடிக்கப்படவில்லை. ஏனெனில் அடிக்கடி மேற்கொள்ளப்படுகின்ற பின்தொடரலைப் படைகள் இரவு வந்ததும் அல்லது தடயத்தைத் தொலைத்ததும் முடித்துக்கொள்கின்றன. அல்லது தமது நேரடி நடவடிக்கைப் பிரதேச வரையறைக்குள் மட்டுப்படுத்திக்கொள்கின்றன.

தனியான படைப்பிரிவுகள் கெரில்லாக்களின் தாக்குதலுக்குள் தாங்களாகவே அகப்பட்டுக்கொண்டன அல்லது நகர்வுப் பாதையில் அவர்களால் ஒழுங்குபடுத்தப்பட்ட பதுங்கித் தாக்குதலுக்குள் சிக்கிக்கொண்டன. நடவடிக்கையின் போது உருமறைப்பு ஒழுங்கு விதிகளைக் கடைப்பிடிப்பதில் அசட்டைத்தனமான போக்குகள் அவதானிக்கப்பட்டன. இதன்விளைவால் போராளிகளுக்குத் துணைபுரிபவர்கள் (நன்றாக உருமறைக்காதவர்கள் நடைபெறவுள்ள நடவடிக்கை பற்றிய பூரணத் தகவல்களை அவர்கள் அறிய வழிசெய்கின்றார்கள். இவ்வாறான சம்பவங்களும் நடந்துள்ளன. அதாவது தொலைபேசி மூலம் போராளிகள் பொய்யான அழைப்புக்களைப் படைகளுக்கு ஏற்படுத்தி அவர்கள் வருகின்ற பாதையில் பதுங்கித் தாக்குதல்களை ஒழுங்குபடுத்தி மேற்கொண்டார்கள். தனது பரப்பு. தொடர்ச்சிப்போக்கு. தீவிரம் போன்றவற்றாலும் அமைப்பின் செழிப்பாலும் சோவியத் நாட்டின் மேற்குக் குடியரசுகளில் கிளர்ச்சி அமைப்பு. அதனுடனான போராட்டம் ஆகியன நவீன காலத்தின் தனித்துவமான பிராந்திய நிகழ்வாக இருந்தன. ஒவ்வொரு தரப்புக்களதும் செயற்பாட்டு முளைகளைப் போன்ற இந் நிகழ்வின் பண்புகள். கூடுதலாக இருபதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் உலகின் பிற பிராந்தியங்களின் இராணுவ அரசியல் சம்பவங்களினது இயங்கல் நிலையை முன்னரேயே தெரியப்படுத்திவிட்டன. கிளர்ச்சியாளர்களுடனான போராட்ட உலக அனுபவத்தின் ஒரு பகுதியாக எதிர்காலத்தில் திகழவுள்ள சோவியத் ரசியாவின் செயற்பாட்டனுபவம் நாட்டின் வெற்றிகரமான படைதிரட்டலினதும் படைகளை ஒழுங்குபடுத்துவதனதும் தெளிவான எடுத்துக்காட்டைத் தந்துள்ளது. தலைமைத்துவ வல்லரசுகளின் பெரியளவிலான தோல்விகளின் பின்னணியில் இந்த அனுபவம் இன்று மிகவும் போதனை தரக்கூடியதாகவும் முக்கியமானதாகவும் விளங்குகின்றது. குறிப்பாக சோவியத் ரஷ்யாவைப் போலின்றி சமர் புரிகின்ற தேசியவாதம் மற்றும் பிரிவினைவாத அமைப்புக்களினால் தனது பிராந்திய ஒருமைப்பாட்டிற்கும் அரசுரிமைக்கும் உண்மையான அச்சுறுத்தலை கொண்டிருக்கின்ற ரஷ்யாவிற்கு முக்கியமானதாகும்.

அதே நேரத்தில் கிளர்ச்சியை அடக்குவதற்கான இராணுவ நடவடிக்கை என்னும் கண்ணாடிக்கூடாக மாத்திரம் இந்த அனுபவத்தை பார்க்கக்கூடாது. கிளர்ச்சியின் பங்கையும் முக்கியத்துவத்தையும் (எப்பொழுதும் அவசியமானது. ஆனால் குறித்த காலகட்டங்களில் தீர்க்கமான முக்கியத்துவத்தைக் கொண்டது). குறையவிடாமல். கிளர்ச்சியாளர்கள் தொடர்ச்சியாக கொண்டிருக்கின்றதும் தோன்றியுள்ளதுமான சமூக அரசியல் சூழலில் ஒட்டுமொத்த மேம்பாட்டின் விலைவாகச் சூழ்நிலை திடத்தன்மையடைதல் சாத்தியமாகின்ற என்ற விடயத்தை கருத்தில் கொள்ள வேண்டும். இதற்கும் முந்திய தருணங்களில். பல்தலை நாகம் (பண்டைய கிரேக்க கதைகளில் வருகின்றது). போன்ற ஆயுத எதிர்ப்புப் போராட்டம் மிகவும் கடினமான இழப்புக்களுக்குப் பின்னரும் மிக இலகுவாகத் தனது ஆரம்ப வலிமையை பெற்றுக்கொண்டதுடன். அடுத்துவருகின்ற ஒவ்வொரு கட்டங்களிலும் மிக மிக கூர்மையடைகின்றது. இவ்வாறான நிலைமைகளில் நாட்டின் இராணுவப் படை புதியதொரு எதிரியைக் கொண்டிருப்பதைப் போல. போரிடுவதற்காக ஆராயப்படாத புதிய உத்திகளைக் கற்றுக்கொண்டு. இப்பிரச்சனையை தீர்ப்பதற்காகவும் அதற்காக வெள்வேறு வழிகளில் துரிதப்படுத்தப்பட்ட அடக்குமுறையை தேடுவதற்காகவும் கூடிய பிரயத்தனத்தைச் செலவு செய்து. பிணக்கின் வரிசைக்கிரமமான அடுத்த கட்டங்களுக்குள் இறங்குகின்றது.

### காட்டு இருளில் போர்

கிளர்ச்சிக் கெரில்லா அமைப்பு - இது நகருக்கு வெளியேயிருக்கின்ற ஆயுத எதிர்ப்புப் போராட்டத்தின் வடிவமாகும். கெரில்லாப் போரில் தடை செய்யப்பட்ட உத்திகள் எதுவுமில்லை. ஆரம்பத்திலோ அல்லது முடிவிலோ அது பயங்கரவாத முறையைப் பாரியளவில் கடைப்பிடிக்கின்றது. இந்தத் தீயதுடனான போரை அரசாங்கம் ஒரே நேரத்தில் இரண்டு முறைகளில் மேற்கொள்கின்றது. நடவடிக்கை - முகவர்களாலும் இராணுவப் படைகளாலுமாகும். மோசமான தவறுகளை விடாமலிருப்பதற்காகவும் தேவையற்ற வேலைகளை மேலதிகமாகச் சேர்த்துச் செய்யாமலிருப்பதற்காகவு மெனப் படைகளும் நடவடிக்கைக்காரர்களும் எவ்வாறானதுடன் (எவ்வாறான எதிரி) வேலையைக் கொண்டிருக்கின்றார்கள் என்பதைத் தெரிந்திருக்க வேண்டும். ஆரவாரமின்றித் தோன்றுகின்ற எதிர்ப்பியக்கம். அரச படைகளால் கடுமையான முறைகளில் பிரதேச மக்களுக்கு இழைக்கப்படுகின்ற நியாயமற்ற அடக்கு முறைகளாலும் அநியாயங்களாலும் பல்மடங்காகப் பலமடைகின்றது என்பதை இராணுவம் நினைவில் கொள்ள வேண்டும். ஸ்டாலினின் மிகவும் கொடூரமான கட்டளைகளில் ஒன்றாக ஜேர்மனியர்கள் கைப்பற்றிய மாநிலங்களில் பொதுமக்கள் மீதான அடக்கு முறைக்குப் பதிலடியாகப் பாதிக்கப்பட்டவர்களின் முன் அடக்கு முறையாளர்களைச் சுடுதல் என உத்தரவிட்டது விளங்குகின்றது. முன்னேறிச் செல்கின்ற படைகளின் பின்புலத்தில் கெடுதலான எதிர்பாராத சம்பவங்கள் எதனையும் தலைவன் விரும்பவில்லை.

மக்கள் பகுதியினரைப்பற்றி எவ்வளவுக்குக் கூடுதலாக அறிய முடியுமோ அவ்வளவுக்கு நடவடிக்கையாளர்கள் அறிந்திருக்க வேண்டும். ஏனெனில் நடவடிக்கையாளர்கள் அதனைப் பின்னர் சாகுபடி செய்ய வேண்டி ஏற்படுகின்றது. எதிரியின் உளவியல் பற்றிய அறிவு நடவடிக்கை நிகழ்வை வேகப்படுத்துவதுடன் அதனை மிக வினைத்திறன் மிக்கதாகவும் மாற்றுகின்றது. கெரில்லா அமைப்பில் வெவ்வேறு காரணங்களால் ஆட்கள் சேர்ந்துகொள்கின்றனர். அதில் மத வெறியர்கள் இருப்பார்கள் தமது சொந்தங்களை இழந்தவர்கள் (கொல்லப்பட்டமையால் அல்லது சொத்துக்களை இழந்தவர்கள் இருப்பார்கள். இவர்கள் அனைவரும் எச்சூழ்நிலையிலும் சாகும்வரை நின்றுபிடிப்பார்கள். பிரச்சினைக்குரியவர்கள். அத்துடன் கொள்கையளவில் உல்லாசப் போக்குடையவர்கள் போன்றோர் கெரில்லா அமைப்பில் நின்று நிலைப்பதில்லை.

**தொடர்வான்....**

**நெற்றிபொறியன்**

# பொருளாதார நெருக்கடிக்குள் இருந்து அரசாங்கம் மீழ்ச்சி பெறுமா?




உலகளாவிய ரீதியில் பரவியிருக்கும் கொவிட் தொற்றின் பின்னர் இலங்கையின் பொருளாதாரம் பாரியளவில் வீழ்ச்சி கண்டிருப்பதாக அரச தரப்பு பகிரங்கமாகக் கூறியிருக்கிறது. இந்தப் பொருளாதார வீழ்ச்சி என்பது இலங்கைக்கு ஒன்றும் புதிதல்ல எனினும் இன்று ஏற்பட்டிருக்கும் பொருளாதார வீழ்ச்சி இலங்கை போன்ற அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளை திக்குமுக்காட வைத்துள்ளது எனலாம். ஒருபக்கம் கொவிட் வைரஸ் தாக்கத்தினால் அதிலிருந்து நாட்டைப் பாதுகாக்கவேண்டிய நிலையும் மறுபக்கத்தில் வேலைவாய்ப்பின்மை பிரச்சினையும், அத்தியாவசியப் பொருட்களுக்கானத் தட்டுப்பாடும், விலைவாசி உயர்வும் என அரசை மாத்திரமல்லாமல் நாட்டு மக்களையும் பாதித்துள்ளது.

இலங்கைக்கு வருமானத்தை ஈட்டித்தருகின்ற வழிகளான சுற்றுலாத்துறை பாரிய வீழ்ச்சி அடைந்திருக்கின்றது. ஆடை உற்பத்தியிலும் கடந்த காலங்களை ஒப்பிடும் போது வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. பெருந்தோட்டப் பயிர்களின் ஏற்றுமதிகளும் உற்பத்திகளும் கூட இன்று பாதிக்கப்பட்டுள்ளது. அந்நிய செலாவணியின் கையிருப்பு குறைவடைந்தமையே இவ் நெருக்கடிக்கு முக்கிய காரணம்.

இலங்கைக்கு வரும் மற்றும் இலங்கையின் விமானப் போக்குவரத்துக்களில் ஏற்பட்ட தடை தற்போது ஓரளவுக்கு நீக்கப்பட்டுள்ளது. எனினும் பல நாடுகளில் இத்தடை இன்னமும் அமுலில் இருக்கிறது. சுகாதார நடைமுறைகள் இறுக்கமாகப் பின்பற்றப்படுகின்றன. தடுப்பூசிகளைச் செலுத்திக்கொண்டவர்களுக்கு விமானப் போக்குவரத்துக்கள் இலகுபடுத்தப்பட்டுள்ளன. கொவிட் தொற்றிய நபர்கள் வெளிநாடுகளில் தனிமைப்படுத்தலுக்கும் உட்படுத்தப்படுகிறார்கள்.

ஐரோப்பிய நாடுகளில் புதிதாக ஒமிக்ரோன் என்கிற வைரஸ் தீவிரமாகப் பரவி வருவதாக உலக சுகாதார நிறுவனம் எச்சரிக்கை விடுத்துள்ளது. மக்களை உரிய முறையில் சுகாதார வழிகாட்டுதல்களை கடைபிடிக்குமாறும் இன்னும் கொவிட் வைரஸ் திரிபடையலாம் என எதிர்வும் கூறப்பட்டுள்ளது. இந்நிலையில் இலங்கையிலும் ஒமிக்ரோன் வைரசின் தாக்கம் சடுதியாக உணரப்படுகின்றது. பல மாவட்டங்களில் இவ் வைரஸ் தொற்றியவர்கள் நடமாடக்கூடும் எனச் சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது. கொவிட் வைரஸ் தொற்றுக்குள்ளாவோரின் எண்ணிக்கை திடீரென இலங்கையில் தற்போது ஆயிரத்திற்கும் மேல் பதிவாகி வருகின்றதுடன், மரணங்களின் எண்ணிக்கையும் குறைவடையவில்லை. 20 பேரை அண்மித்ததாகவே மரணங்கள் பதிவாகுவதைக் காண்கிறோம். பலர் ஒமிக்ரோன் வைரஸ் தொற்றுக்குள்ளாகி இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளதால் மக்களை அவதானமாக செயற்படுமாறு மருத்துவத் துறையினர் கூறி வருகின்றனர்.

இலங்கையைப் பொறுப்பெடுத்த கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசு, தேர்தல் விஞ்ஞாபனத்தில் கூறியவையைக் கூட நிறைவேற்ற முடியாமல், செய்வதறியாது தடுமாறி வருகின்றனர். ஏதிர்பாராத விதமாக கொவிட் சூழலில் சிக்கிக்கொண்ட அரச தரப்பினர், நாட்டில் விமர்சிக்கப்படும் தரப்பாக இன்று மாறியுள்ளனர். ஆட்சியை விட்டுவிலகுங்கள் என்று எதிர்த்தரப்பு கூறுகின்ற அளவிற்கு நிலைமைகள் மோசமாகியுள்ளது. இத்தரப்பினர் சீனா சார்ந்து செயற்படுவதனால் மேலும் தென்னிலங்கை மக்கள் அதிருப்தியடைந்துள்ளனர். நாட்டைத் தாரைவார்க்கும் வணங்கள் அந்நிய நாடுகளுக்கு கையளிக்கும் வகையில் அரசு செயற்பட்டு வருவதாக குற்றச்சாட்டுக்கள் வலுப்பெற்று வருகிறது.

அரசு இவ் இக்கட்டான பொருளாதார சரிவிற்கு மத்தியிலும் உர இறக்குமதிக்கானத் தடையினை விதித்தது. இதனால் இலங்கைக்கு ஏற்பட்ட இலாபம் என்ன? பாரிய நெருக்கடி நிலைதான் ஏற்பட்டது. இயற்கை உர உற்பத்தி மக்களின் ஆரோக்கியத்திற்கு உகந்தது என்பது உண்மைதான். மண் வளம் பெறும் என்பதும் உண்மை தான். ஆனால் திடீர் திடீரென மாற்றங்களை நிகழ்த்துவது சாத்தியமற்றது. அதுவும் பொருளாதார இக்கட்டான இச்சூழலில் உற்பத்திக்கு பாதிப்பினை ஏற்படுத்தும் வகையில் அரசு முட்டாள்த்தனமாக செயற்பட்ட விதம் குறித்து மக்கள் இன்று விசனமடைந்துள்ளனர். அரசுக்கு எதிராக இன்று தென்னிலங்கையில் இருந்தே குரல்கள் ஓங்கி ஒலிக்க ஆரம்பித்துள்ளன. நாட்டின் நெல் உற்பத்தி இதனால் வெகுவாகப் பாதிப்படைந்துள்ளது. கடந்த காலங்களுடன் ஒப்பிடுகையில் நெல் உற்பத்தியில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. விவசாயிகள் நெல் வயல்களைக் கைவிடும் அளவிற்கு வந்துள்ளனர். இதற்கு மாற்றீடாக அரசு வெளிநாடுகளில் இருந்து அரிசியினை இறக்குமதி செய்கின்றது. இவ்வரிசி இயற்கை உரத்தினைப் பயன்படுத்தியா விளைந்தது என்றால் கேள்விக்குறிதான். படிப்படியாக மாற்றங்களை ஏற்படுத்துகின்ற போது அது நாட்டுக்கும் நாட்டு மக்களுக்கும் ஆரோக்கியமாக அமையும்.

இவ் உரஇறக்குமதித்தடையால் மரக்கறிகளின் விலைகள் உயர்வடைந்தமையும், பெருந்தோட்ட உற்பத்திக்கு பாரியளவில் பாதிப்பு ஏற்பட்டதால் மலையக மக்கள் வேலையில்லாப் பிரச்சினையினையும் எதிர்கொண்டனர். இவ் உற்பத்தியின் வீழ்ச்சி இலங்கையின் பொருளாதாரத்திற்குப் பாரிய பாதிப்பினை ஏற்படுத்தியது. இன்று நாட்டில் சமையல் எரிவாயு தட்டுப்பாடு, மருந்துப் பொருட்களுக்குத் தட்டுப்பாடு, மின்சாரத் தடை, வாகன எரிபொருளுக்குத் தட்டுப்பாடு. அனைத்துப் பொருட்களுக்கான விலையுயர்வு என மக்கள் அல்லல்படுகின்றனர். அரசு சர்வதேச நாடுகளிடம் கடனாகப் பொருட்களை வாங்கவேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளது. நாட்டில் பொருட்களுக்கானத் தேவை இருக்கிறது. அதனை வாங்குவதற்குத் தேவையான டொலர் அரசிடம் கைகளில் இல்லை. இதனாலேயே சீனாவிடமிருந்து மில்லியன் கணக்கில் தொடர்ச்சியாக கடனைப் பெறவேண்டிய நிலையும், இந்தியாவிடம் இருந்து டொலரைக் கடனாகப் பெறவேண்டிய நிலையும், எரிபொருளைப் பெறவேண்டிய நிலையும் ஏற்பட்டுள்ளது. கடந்தகாலங்களை விட இன்று அதிகூடிய கடன் சுமை இலங்கை மக்கள் மீது சுமத்தப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் இலங்கையை ஆட்சி செய்த அரசுகளின் முறையற்ற அபிவிருத்தித் திட்டங்களும், கொள்கைகளும் இன்றைய இலங்கையின் பொருளாதார வீழ்ச்சிக்கு தொடர்ந்தும் பாதிப்பினை ஏற்படுத்துகின்றன என்கின்றனர் அவதானிகள். கடனுதவியுடன் தேவையற்ற முறையில் நிர்மாணிக்கப்பட்டிருக்கும் கட்டடங்கள், நிலையான அபிவிருத்திக்குத் தேவையான வேலைத்திட்டங்கள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படாமை போன்ற விடயங்களும், உள்நாட்டில் ஏற்பட்ட யுத்த சூழல்களுமே இலங்கையின் இன்றைய நிலைக்குக் காரணம். ஒரு காலத்தில் நெல் உற்பத்தியில் தன்னிறைவுடன் திகழ்ந்த நாடு இன்று வெளிநாடுகளிடம் இருந்து உரங்களையும், கிருமிநாசினிகளையும், அரிசியினையும் கொள்வனவு செய்து வருகின்றது.

அரச ஊழியர்களுக்கு வழங்கப்பட வேண்டிய கொடுப்பனவுகளை வழங்குவதில் கூட அரசாங்கம் பாரிய சவால்களை எதிர்நோக்க நேர்ந்துள்ளது. எனவே சர்வதேச கடன்களை பெறவேண்டிய கட்டாயம் எமக்கு ஏற்பட்டுள்ளது. இலங்கையில் பணம் அச்சடிப்பது குறித்து சில கருத்துக்கள் முன்வைக்கப்பட்டுள்ள நிலையில் அதற்கான விமர்சனங்களும் எழுப்பப்பட்டு வருகின்றது.

இலங்கை பொருளாதாரத்தை கருத்தில் கொண்டு புலம் பெயர்ந்து வாழும் தமிழர்கள் புலம் பெயர்ந்த நாடுகளில் பொருளாதாரத்தில் செழிப்பான நிலையில் இருப்பதனால், மீண்டும் இலங்கைத் திரும்பி தமது வணிக நடவடிக்கைகளைத் தொடரவும் அழைப்பு விடுக்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. தற்போது வெளிநாட்டு பணியாளர் ஊடான வருவாயே இலங்கை பொருளாதாரத்தின் பிரதான அங்கமாகியுள்ளது. கல்வி கற்காதோர் முதல், உயர் தரம் கற்றோர் வரை ஆண் மற்றும் பெண் இருபாலருக்கும் எளிதாக தொழில் வாய்ப்பை பெற்றுக்கொள்ளக்கூடிய ஒரு துறையாக வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைந்துள்ளப் படியால், பெரும்பாலானோரின் தெரிவு வெளிநாட்டு வேலை வாய்ப்பாகவே மாறி வருகின்றது. உள்நாட்டில் தொழில் புரிவோரும் அத்தொழில்கள் ஊடாக போதிய வருவாயை ஈட்ட முடியாத நிலையும், இலங்கையில் தொடர்ந்து ஏற்பட்டுவரும் விலைவாசி அதிகரிப்பிற்கு முகம் கொடுக்க முடியாத நிலையும் வெளிநாட்டு வேலை வாய்ப்பிற்கு முக்கியத்துவம் கொடுக்கும் சமூகமாக இலங்கை சமூகம் மாற்றமாகி வருகிறது.

இந்த வெளிநாட்டு வேலை வாய்ப்பில் பெரும்பாலானோர் வீட்டுப் பணியாளர்களாகவே தொழில் புரிகின்றனர். மத்தியக் கிழக்காசிய நாடுகளில் இலட்சக் கணக்கானோர் வீட்டு பணியாளர்களாகவே தொழில் புரிகின்றனர். மத்திய கிழக்காசிய நாடுகளைத் தவிர உலகின் பல்வேறு நாடுகளிலும் வீட்டுப் பணியாளர்களாக இலங்கையர் தொழில் புரிகின்றனர். இவ்வாறான வெளிநாட்டு வேலை வாய்ப்பின் ஊடாகவே தற்போதைய இலங்கையின் பிரதான பொருளாதாரம் ஈட்டப்படுகின்றது.

எனவே பொருளாதாரக் கொள்கைகளில் மாற்றங்களைக் கொண்டுவருவதன் மூலம் மட்டுமே இலங்கையினது பொருளாதாரத்தினை வீழ்ச்சியிலிருந்து உயர்த்த முடியும். தொடர்ச்சியான கடன்களால் நாடு மூழ்கிப்போகும் நிலை உருவாகும். நாட்டில் உள்நாட்டு உற்பத்திகள் அதிகரிக்கப்படவேண்டும். எல்லாவற்றிற்கும் சர்வதேச நாடுகளை நம்பியிருக்காமல் மாற்றுவழிகள் கண்டுபிடிக்கப்படவேண்டும். சர்வதேச சந்தையில் போட்டி நிலவுவதால் எமது உற்பத்திப் பொருட்களின் தரம் மேம்படுத்தப்படவேண்டும். எனினும் தற்போது இலங்கையின் அரசியலிலும் தளம்பல் போக்கு நிலவுகின்றது. முற்கூட்டியே தேர்தல் ஒன்று நடாத்தப்படுவதற்கான வாய்ப்புகள் இருப்பதாக தகவல்கள் கசியவிடப்பட்டுள்ளன.

மாகாண சபைத் தேர்தலை நடாத்துவதற்கான வாய்ப்புகள் மிகக் குறைவாக இருப்பதாகவும் உள்ளூராட்சி மன்றங்களுக்கானத் தேர்தலை நடாத்திவிட்டு நேரடியாக பொதுத்தேர்தல் ஒன்றிற்கு முகங்கொடுக்க வேண்டிய சூழல் ஏற்படலாம் எனத் தெரிகின்றது. மாகாண சபைகளுக்கானத் தேர்தலை நடாத்த அரசுக்கு விருப்பமும் இல்லை. மாகாண சபை முறைமை தொடர்பிலும் அரசுக்கு உடன்பாடு இல்லை. ஒருவேளை புதிய அரசியலமைப்பு எதிர்வரும் மூன்று வருடங்களுக்குள் வந்தால் இம் மாகாண சபை இல்லாதொழிக்கப்படவும் வாய்ப்புகள் இருக்கிறது. அரசின் தற்போதைய நெருக்கடியில் மாகாண சபைத் தேர்தல் பிரச்சினையாக அமையும் சூழல் நிலவுகிறது. அது எதிர்க்கட்சிக்கு வாய்ப்பாகவும் அமையலாம். ஒரு பக்கம் நாட்டின் பொருளாதாரத்தை உயர்ச்சி நோக்கிக் கொண்டுசெல்லவும், கொவிட் தொற்றிலிருந்து நாட்டைப் பாதுகாக்கவும், நாட்டின் அரசியலை ஸ்திரமாகப் பேணவும் வேண்டிய நிலையில் அரசு சிக்கியுள்ளது. இதற்கான தீர்வுகளை அரசே வகுக்கவும் வேண்டும்.

–நெற்றிபொறியன்–

# 13வது திருத்தச்சட்டமும் முருங்கைமரம் ஏறும் வேதாளங்களும்

13ஐ ஆதரிக்கின்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார்ந்த மற்றும் இதர தமிழ்க் கட்சிகள் தமிழீழ விடுதலைப்புலிகள் நிராகரித்த இந்த 13ஐ இந்தியாவினுடைய செயற்பாடுகளை மீண்டும் அவர்கள் தூசுதட்டி எடுக்கின்ற சூழல் தற்போது வெளிக்காட்டப்பட்டிருக்கின்றது. இந்த பூகோள அரசியலை நாம் புரிந்துகொள்ளாது தமிழ் மக்களை ஏமாற்றுகின்ற அரசியலையே தமிழ்க் கட்சிகள் நிலைப்பாடாக எடுத்துள்ளார்கள். இதை நாங்கள் தமிழ் மக்களுக்கு தெளிவுபடுத்தவேண்டிய சூழல் இருக்கிறது. இந்த தமிழ் அரசியல்வாதிகள் என்னவெல்லாம் கூறுகிறார்கள் எவற்றைக் கொண்டு தமிழ் மக்களை தொடர்ந்தும் ஏமாற்றுகிறார்கள் என்கின்ற விடயங்கள் தொடர்ச்சியாக அவதானிக்கப்பட்டுக்கொண்டிருக்கின்றன. ஆகவே தமிழினத்தின் செயற்பாடுகள் அனைத்தும் 13க்கு எதிராக அல்லது 13 நிறைவேற்றும் விதமாக இவர்கள் செயற்படும் விதம் குறித்து ஆராய்ந்த பின்னர் நாம் இவ்வாறான முடிவினை எடுத்திருக்கின்றோம். தொடர்ந்தும் மக்களுக்கு துரோகம் செய்ய முடியாது. தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியும் ஜனாதிபதியுடன் இணைந்துதான் செயற்படுகின்றதா என்கிற கேள்வி எழுந்துள்ளது. ஏனெனில் அரசும் 13ஐ எதிர்க்கிறது. தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியும் எதிர்த்து வருகின்றது. இதனாலேயே இவ்வாறான கேள்விகள் கேட்கப்படுகின்றது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இணைந்து செயற்படுகின்ற கட்சிகளின் கருத்துக்களும் பதிவாகியிருக்கின்றன. அவற்றை நாம் பார்க்கின்றபோது.

இந்திய பிரதமர் நரேந்திர மோடி அவர்களுக்கு தமிழ் தேசிய பரப்பிலே தீவிரமாக செயற்பட்டுக்கொண்டிருக்கும் 6 தமிழ் அரசியல் கட்சிகள் ஒன்றாக இணைந்து கூட்டான ஒரு கோரிக்கையை சில தினங்களுக்கு முன்னர் இந்திய நாட்டின் இலங்கைக்கான தூதுவர் ஊடாக சமர்ப்பித்ததை நீங்கள் அனைவரும் நன்கு அறிந்திருப்பீர்கள். இன்றைய நிலையிலே தமிழ் மக்கள் எதிர்நோக்கி நிற்கின்ற துன்பங்கள் துயரங்கள் அனைத்திற்கும் மேலாக பாராதூரமான சவால்களை கருத்தில் கொண்டு உடனடியாக சில நடவடிக்கைகள் இவ் விடயங்கள் தொடர்பாக எடுக்கப்பட வேண்டிய அவசியத்தையும் அவசரத்தையும் உத்தேசித்து இந்த நடவடிக்கை தமிழ் கட்சிகளால் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இலங்கையினுடைய அரசியல் சாசனத்திற்கு 1987 ஆம் ஆண்டு ஆடி மாதம் 29 ஆம் திகதி அன்றைய இந்திய பிரதமர் மறைந்த ராஜீகாந்தி அவர்களுக்கும்அன்றையஇலங்கைஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்தன அவர்களுக்கும் இடையிலே செய்துகொள்ளப்பட்ட இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் விளைவாக அந்த வருட இறுதியிலே இலங்கையினுடைய அரசியல் சாசனத்தில் 13 வது திருத்தம் முன்வைக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டது என்பது வரலாறு. அந்த திருத்தத்தின் கீழ் தான் அதுவரையில் இலங்கையின் ஒரே ஆட்சி மொழியாக பிரகடனப்படுத்தப்பட்டு கோலோச்சிக்கொண்டிருந்த சிங்களத்தோடு சேர்த்து தமிழும் ஒரு அரசாங்க மொழி என்பது அரசியல் சாசன ரீதியாக கொண்டுவரப்பட்டிருந்தது. அதற்கு மேலதிகமாக இந்திய இலங்கை ஒப்பந்தத்திலே திட்டவட்டமாக சொல்லப்பட்ட ஓர் உண்மையின் அடிப்படையிலே இலங்கையினுடைய வடகிழக்கு மாகாணங்கள் தமிழ் மக்களுடைய வரலாற்று வாழ்விடம் என்று ஏற்கப்பட்ட அந்த உண்மையின் அடிப்படையிலே தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளை ஓரளவுக்காவது மீண்டும் சொல்ல விரும்புகின்றேன் ஓரளவுக்கேனும் தீர்த்து வைக்கும் நோக்கத்தோடு மாகாண சபைகள் திட்டமும் அரசியல் சாசனத்தின் ஊடாக கொண்டுவரப்பட்டது.



இந்த 13 வது திருத்தத்தின் பிரகாரம் மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்ட அதிகாரங்கள் எமது மக்களினுடைய பிரச்சனைகளை பொறுத்தவரையில் ஒரு பொழுதுமே நிரந்தரமான தீர்மானத்தை தரமாட்டாது தர முடியாது என்பது அப்போதே தமிழ் தரப்பினாலே திட்டவட்டமாக கூறப்பட்டிருந்த நிலையிலும் கூட அந்த மாகாண சபைகள திட்டத்தை அப்போதைக்காவது நடைமுறைப்படுத்திப் பார்க்க வேண்டிய ஓர் கட்டாயமான அறிவுபூர்வமான அரசியல் அணுகுமுறையினை தமிழ் தரப்பு மேற்கொண்டது ஆயினும் மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்ட காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களை பொறுத்தவரையில் அவற்றை வழங்குவதற்கு அப்போதிருந்த அரசாங்கமும் சரி அதற்கு பிறகு ஆட்சிக்கு அடுத்தடுத்து வந்த அரசாங்கங்களும் சரி கடந்த 33 வருடங்களாக பிடிவாதமாக மறுத்துவந்திருக்கின்றன. இலங்கையினுடைய தேசியப் பிரச்சனையாக தேசிய கேள்வியாக கொள்ளப்படுகின்ற தமிழ் தேசிய இனத்தினுடைய பிரச்சனைக்கு அரசியல் தீர்வு என்பதை கொண்டுவருவதிலே பௌத்த சிங்கள மேலாதிக்க சிந்தனையின் அடிப்படையில் செயற்பட்டுவந்திருக்கின்ற இலங்கை குடியரசின் அத்தனை அரசாங்கங்களும் தொடர்ந்து தவறியிருக்கின்ற சூழலிலே இப்போதுள்ள தமிழ் மக்கள் சந்தித்துக்கொண்டிருக்கின்ற அரசியல் சாவால்களை உத்தேசித்து 13 வது திருத்தம் முழுமையாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்கின்ற ஓர் அணுகுமுறையை ஓர் தற்காலிக ஏற்பாடாக தமிழினம் சந்திக்கின்ற சவால்களுக்கு ஈடு கொடுக்கக்கூடிய ஓர் அரசியல் நிர்வாக ஏற்பாடாக அழுத்திருக்க வேண்டிய கட்டாய சூழ்நிலை ஏற்பட்டிருக்கின்ற காரணத்தினால் தான் இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் கீழ் இந்திய நாடு தனக்குள்ள கடமைகளை தட்டிக்கழிக்க முடியாது. இந்திய நாடு எங்களுக்களித்த வாக்குறுதிகளை நம்பித்தான் அன்று ஆயுதம் ஏந்தி தமிழ் மக்களுடைய அரசியல் அபிலாசைகளை முன்னிறுத்தி செயற்பட்ட அத்தனை தமிழ் தேசிய அரசியல் விடுதலை இயக்கங்களும் தங்கள் ஆயுதங்களை கையளித்தன என்ற அந்த அரசியல் பின்னணியை மறக்காதவர்களாக இந்திய அரசாங்கத்திற்கு இந்த நிலைமையிலே இருக்கின்ற கடமைப்பாட்டினை சுட்டிக்காட்டி இந்த வேண்டுகோள் 6 தமிழ் கட்சிகளினாலேயே கூட்டாக விடுக்கப்பட்டிருக்கின்றது.

இலங்கை தமிழ் மக்களை பொறுத்தமட்டிலே எங்களுடைய அரசியல் அபிலாசைகளை தீர்த்து வைக்கக்கூடிய ஒரேயொரு ஏற்பாடு இலங்கைத் தீவுக்குள்ளேயே அமையவேண்டுமானால் அமையமுடியுமானால் அது சர்வதேச ரீதியாக பல்வேறு இனங்கள் வாழ்கின்ற எத்தனையோ நாடுகளிலே இப்பொழுதும் நிலை கொண்டு நின்று பிடித்துக்கொண்டிருக்கின்ற சமஷ்டி என்றழைக்கப்படுகின்ற இணைப்பாட்சி அரசியல் நிர்வாக ஏற்பாட்டின் கீழ் தான் சாத்தியமாகும் சாத்தியமாக முடியும் என்பதனை மனதில் கொண்டு அதனையும் நாங்கள் எங்களுடைய கடிதத்திலே திட்டவட்டமாக அழுத்தி கூறியிருக்கின்றோம். இருந்தாலும் இப்பொழுது என்ன நடந்துகொண்டிருக்கின்றது.

ஒரு அரசியல் புரளியை கிளப்பி தமிழ் மக்களுடைய அரசியல் அபிலாசைகளை வரப்போகின்ற அரசியல் திட்டத்திற்குள்ளே 13வது திருத்தத்தின் அடிப்படையிலே முடக்குகின்ற ஓர் அரசியல் சதி முயற்சியிலே இப்பொழுதும் சரி எப்பொழுதும் சரி ஒற்றையாட்சி அரசியல் அமைப்புக்குள்ளே தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளை நாங்கள் ஒருபொழுதும் நிலைநாட்ட முடியாது என்பதிலே நாங்கள் மிக உறுதியாக இருக்கின்றோம். என்ன சந்தர்ப்பத்திலும் ஒற்றையாட்சியை அடிப்படையாகக்கொண்ட எந்தவொரு அரசியல் சாசனமும் தமிழ் தேசிய இனத்தினாலேயே கனவில் கூட கருத்தில் கொள்ளப்பட மாட்டாது என்பதை தமிழ் தேசிய அரசியல் சக்திகளாகிய தமிழ் தேசிய அரசியல் கட்சிகளாகிய நாங்கள் அனைவரும் ஈடுபட்டிருக்கின்றோம் என்ற அபாண்டமான அநியாயமான அடிப்படை அற்ற ஓர் குற்றசாட்டினை இங்கே எமது மக்கள் மத்தியிலே செயற்பட்டுக்கொண்டிருக்கின்ற ஒரு அரசியல் கட்சி தமிழ் தேசிய மக்கள் முன்னணி என்ற பெயரிலே இயங்கிக்கொண்டிருக்கின்ற அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சி ஒரு எதிர்ப்பியக்கத்தை நடாத்தப்போகின்றதாக பிரகடனப்படுத்தியிருக்கின்றது. அது போதாது என்று வெளிநாடுகளிலே செயற்பட்டுக்கொண்டிருக்கின்ற சில அரசியல் நடவடிக்கையாளர்கள் இந்த விடயத்திலே தமிழ் தேசியத்தின் பாதுகாவலர்கள் என்ற பாவனையோடு இதே மாதிரியான ஒரு நிலைப்பாட்டினை எடுத்திருக்கின்றார்கள்.

ஆனால் எங்களுக்கு நன்றாக தெரியும் இலங்கையில் வாழ்கின்ற தமிழ் மக்களும் சரி புலம் பெயர்ந்து வாழ்ந்தாலும் உணர்வுகளால் நினைவுகளால் இங்கே தங்கள் தாயகத்தோடு தினமும் உறவாடிக்கொண்டு இருக்கின்ற புலம்பெயர் தமிழ் உறவுகளும் சரி எங்களுடைய நிலைப்பாட்டிலே குற்றம் காணவில்லை காணமாட்டார்கள் என்பது எங்களுக்கு நன்றாக தெரியும். இருந்தாலும் கூட ஒரு பொய் திரும்ப திரும்ப மீண்டும் மீண்டும் சொல்லப்படுகின்றபொழுது அதற்குரிய சரியான பதிலை நாங்கள் கொடுக்கதவறினால் காலப்போக்கிலே அந்த பொய் உண்மையாக மக்கள் மனங்களிலே விதைக்கப்பட்டுவிடும் என்பதனை உணர்ந்தவர்களாக நாங்கள் இங்கே மேற்கொள்ளப்படுகின்ற இந்த பொய் பிரசாரத்திற்கு திட்டவட்டமான பதிலடியை கொடுப்பதற்காக தான் இந்த ஊடகவியலாளர் சந்திப்பை ஏற்படுத்தியிருக்கின்றோம்.

என்ன காரணத்திற்காக இப்பொழுது நாங்கள் 13வது திருத்தம் முழுமையாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்று கூறுகிறோம் என்பதை விளக்கி கூறுவதற்கும் வருமா வராதா என்று யாருமே யாரிடமும் கூறமுடியாத இந்த புதிய அரசியல் சாசனம் ஒன்று கொண்டுவரப்படும் போது கடந்த கால அனுபவங்களின் பின்னணியிலே ஒருபொழுதும் சிங்கள பௌத்த மேலாதிக்க சிந்தனை கொண்ட ஆட்சிபீட அதிகார சக்திகளினாலே கொண்டுவரப்படக்கூடிய அந்த அரசியல் சாசனம் நிச்சயமாக எமது அரசியல் அபிலாசைகளை உள்ளடக்கமாட்டாது என்பதை உணர்ந்துகொண்டவர்களாக நாங்கள் கோரி நிற்கின்ற இணைப்பாட்சி என்பதனை வென்றெடுக்க வேண்டுமானால் அதற்கு பரந்துபட்ட ஒரு மக்கள் போராட்டமும் அகில உலக ரீதியிலான பிரச்சார நடவடிக்கைகளும் மிகத் தீவிரமாக முன்னெடுக்கப்பட்டு துணிச்சலும் தியாகங்களும் நிறைந்த ஓர் வெகுஜனப் போராட்டம் அதை குறிவைத்து முன்னெடுக்கப்பட்டு ஓர் உகந்த சூழ்நிலை இங்கே உருவாக்கப்பட்டால் மாத்திரமே அது சாத்தியமாக முடியும் என்பதை உணர்ந்துகொண்டவர்களாக தான் நாங்கள் இந்த வேண்டுகோளை விடுத்திருக்கின்றோம்.

நாங்கள் இந்த சந்தர்ப்பத்திலே பிரகடனப்படுத்தியிருக்கின்றோம். இருந்தாலும் கூட நாங்கள் எதிர்நோக்கியிருக்கின்ற சவால்கள்எமதுதாயகம்தினசரிசிங்களபௌத்த குடியேற்றத்தினால் ஊடுறுவப்படுகின்ற அந்த சதியையும் சவாலையும் முறியடிக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டிருக்கின்ற சூழ்நிலையிலேயே பல்வேறு விதமான முயற்சிகள் தமிழ் தாயகத்தை கூறுபோடுவதற்காக இன்றைய அரசாங்கத்தினாலேயே தொடர்ந்தும் மேற்கொள்ளப்படுகின்ற சூழ்நிலையிலேயே கையில் கிடைத்திருப்பதை உபயோகிக்க வேண்டிய ஒரு கட்டாயத்தின் காரணமாகத் தான் இந்த வேண்டுகோள் விடுவிக்கப்பட்டிருக்கின்றது.

எங்களுக்கு எந்தவிதமான பெருமைகளும் கிடையாது அரசியல் சாசனம் வரும் என்பதில் கூட எங்களாலேயே திட்டவட்டமான எதுவும் கூறமுடியாது. வந்தாலும் கூட எதுவும் நடக்காது எங்கள் பிரச்சனையிலே என்பது எங்களுக்கு நன்றாக தெரியும். இந்த நிலைமையிலே இப்பொழுது எங்களுக்கு முன்னால் உள்ள தெரிவு என்ன எங்கள் தாயகம் காப்பாற்றப்பட வேண்டும் தாயகம் இருந்தால் மாத்திரம் தான் நாங்கள் அதில் நிமிர்ந்து நின்று கொண்டு என்றோ ஒருநாள் எமது சுயநிர்ணய உரிமையின் அடிப்படையிலே எமது ஆட்சியை நிலைநாட்ட முடியும். கடந்த கால தியாகங்கள் துன்பங்கள் துயரங்கள் இப்பொழுதுபடுகின்ற அத்தனைதுன்பங்கள் துயரங்களுக்கும் ஈடு கொடுக்கக்கூடிய திட்டவட்டமான அரசியல் நிர்வாக ஏற்பாட்டை இணைப்பாட்சியின் அடிப்படையிலே நாங்கள் எமது தாயகத்திலே ஏற்படுத்திக்கொள்ள முடியும். இதை மக்களுக்கு திட்டவட்டமாக தெரிவித்து இந்த ஊடகவியலாளர்கள் மகாநாட்டிலே முதலிலே தனது கருத்துக்களை முன்வைக்குமாறு தமிழ் மக்கள் தேசிய கூட்டணியின் தலைவரும் தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவரும், முன்னாள் உயர் நீதிமன்ற நிதியரசரும் பாராளுமன்ற. உறுப்பினருமான மதிப்பிற்குரிய விக்னேஸ்வரன் அவர்களை தாழ்மையாக அழைக்கின்றேன்.

**சி.வி.விக்னேஸ்வரன்**

ஒரு பொய்யை திரும்ப திரும்ப சொன்னீர்காளனால் மக்கள் அதனை உண்மை என்று ஏற்றுக்கொள்வார்கள் என்பர். எங்களுடைய தமிழ் கட்சிகளில் ஒருகட்சி ஶ்ரீகாந்தாவை முன் உதாரணமாக கொண்டு அவர் சொல்வதை இங்கே திரும்ப திரும்ப சொல்வதற்கு ஆயத்தமாகின்றார்கள். அதில் ஒரு வியப்பு என்னவென்றால் எங்களைக்கொண்டு இந்தியாவுடன் பேசி 13வது திருத்த சட்டத்தின் கீழ் வடமாகாண சபையை கொண்டுவருவதற்கு நாங்கள் ஆயத்தம்செய்யும் பொதுழு அவர்கள் அதற்கு எதிராக இவ்வாறான பொய் பேசும் கூட்டத்தொடர்களை நடத்த தொடங்கியுள்ளார்கள்.

தொடரும்...




# இலங்கையில் "றோ, சீ.ஐ.ஏ, மொசாட், MI5,ISI" தலையீடு - என்.சரவணன்

1980களில் ஒரு புறம் ஜே.ஆர் இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு முயற்சி மேற்கொள்வதற்கு தள்ளப்பட்டிருந்து. இந்தியாவின் அழுத்தப் பிடியில் இருந்து விடுபட முடியாதபடி சிக்கியிருந்தது ஜே.ஆர். அரசாங்கம். அதேவேளை ஜே.ஆரால் பட்டைத் தீட்டப்பட்ட இனவாத சக்திகள் எதிர்க்கட்சியுடன் சேர்ந்து ஜே.ஆருக்கு எதிராக ஐக்கியப் படத் தொடங்கின. குறிப்பாக "மவ்பிமே சுரகீமே வியாபாரய" (தேசத்தைப் பாதுகாக்கும் இயக்கம்) தொடங்கப்பட்டது. அரசாங்கத்தின் தீர்வு முயற்சிகளை எதிர்த்து போராடுவது. சிங்கள மக்களை "தமிழ் பயங்கரவாதத்துக்கு" எதிராக அணிதிரட்டுவது என்பனவே அதன் பிரதான நோக்கமாக இருந்தது.

இதே நோக்கத்துக்காக அப்போது தலைமறைவாக இருந்த ஜே.வி.பி தமது முன்னணி அமைப்புகளில் ஒன்றாக "தேஷப்பிரேமி ஜனதா வியாபாரய" (தேசபக்த மக்கள் இயக்கம்) எனும் அமைப்பை இயக்கி வந்தது. ஆனால் மகா சங்கத்தைச் சேர்ந்த "சோபித்த தேரர்" போன்றோர் அவர்களின் கொள்கைகளுடன் சற்று வேறுபட்டு இருந்தனர். (ஆம் சாட்சாத் மைத்திரிபால தலைமையிலான "நல்லாட்சி அரசாங்கத்தை கொணர்வதில் பிரதான பாத்திரம் வகித்த அதே சோபித்த தேரர் தான்.) ஆக "சிங்கள பல மண்டலய" (சிங்கள அதிகாரச் சபை), சிங்கள வீர விதான, தேசிய சங்க சபை, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, ஜே.வி.பி மட்டுமன்றி ஐ.தே.க அரசாங்கத்திற்குள் இருந்த சிறில் மெத்தியு போன்றோரும் கூட ஒன்றிணைந்தனர். இந்த இயக்கம் மிகவும் வேகமாக தென்னிலங்கையில் பலமடைந்து வந்தது. ஓரளவு மத்தியஸ்த நிலைப்பாடு கொண்ட பிக்குகள் என்று அறியப்பட்டவர்கள் கூட இதில் தம்மை இணைத்துக் கொண்டனர். இவர்கள் அனைவரும் "இணைப்பு சி" திட்டத்தை தோல்வியடையச் செய்வதற்காக முழுமூச்சுடன் செயற்பட்டனர்.

ஜனாதிபதி ஜே.ஆரும், பாதுகாப்பு அமைச்சர் லலித் அத்துலத் முதலியும் 1984 ஜனவரியில் ஜே.ஆர். சர்வகட்சி மாநாட்டைக் கூட்டியபோது டில்லியில் ஒப்புக்கொண்ட "இணைப்பு - சி" திட்டத்தை அல்ல முன்வைத்தார். தமிழர்களின் அரசியல் அபிலாஷைகளுக்கு ஒவ்வாத திரிக்கப்பட்ட பல அம்சங்களை மாற்றியிருந்தார். இந்தியாவையும், இந்திராவையும் அப்படி அதிருப்திகொள்ளச் செய்வதற்கான உளப்பலம் ஜே.ஆருக்கு எங்கிருந்து வந்தது? இதன் விளைவுகளை அவர் அறிந்துதான் வைத்திருந்தாரா? சர்வகட்சி வட்டமேசை மாநாடு என்பதானது வெறும் கண்துடைப்புக்காகத்தான் நடத்தினாரா? இது போன்ற கேள்விகளுக்கு பதிலை அன்று நிலவிய சர்வதேச சதிவலைப்பின்னலையும், அதற்கான பிராந்திய மற்றும் சர்வதேச அரசியல் சூழலையும் சேர்த்துத் தான் விளங்கிக் கொள்ளவேண்டியிருக்கிறது. பிராந்திய அரசியலின் செல்வாக்கு சோவியத் யூனியன், அமெரிக்கா ஆகிய முகாம்களுக்கு இடையில் நிகழ்ந்துகொண்டிருந்த பனிப்போரில் இந்தியா சோவியத் முகாமைச் சார்ந்திருந்தது. இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் அமெரிக்க தலையீட்டை கட்டுப்படுத்துவதற்கான சோவியத் யூனியனின் கருவியாக இந்தியா தொழிற்பட்டது. இந்தியாவின் நிலைப்பாடும் அமெரிக்க எதிர்ப்பாகத் தான் இருந்தது. இந்த நிலையில் டில்லியில் செப்டம்பர் மாதம் அணிசேரா நாடுகளின் மாநாடு டில்லியில் நிகழ்ந்தது. அணிசேரா மாநாட்டின் தலைவியாக இந்திரா அப்போது இயங்கினார். அங்கு அமெரிக்காவுக்கு எதிரான தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன. செப்டம்பர் 28 அன்று இந்திரா காந்தி ஆற்றிய உரை மிகவும் முக்கியமானதொரு உரை. அந்த மாநாட்டுக்கு வந்திருந்த அமெரிக்க எதிர்ப்பாளர்களான பிடல் காஸ்ட்ரோ. யாசிர் அரபாத் போன்றோர் இந்திராவுக்கு நெருக்கமாகவும், ஆதரவாகவும் இருந்தார்கள். அது போல அதே ஆண்டு 1983 நவம்பர் 23-29 வரையான நாட்களில் பொதுநலவாய நாடுகளின் தலைவர்களின் மாநாடு நடந்தது. இந்திரா காந்தி அதற்கு தலைமை வகித்தார். அந்த மாநாட்டில் அமெரிக்காவுக்கு எதிரான தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன. கிரெனடா நாட்டின் மீதான அமெரிக்க ஆக்கிரமிப்புகெதிரான தீர்மானம் பிரதான தீர்மானங்களில் ஒன்று. 1984 செப்டம்பரில் நியுயோர்க்கில் நிகழ்ந்த ஐக்கிய நாடுகள் சபையின் கூட்டத்தொடரின் போது இந்திரா காந்தி சந்தித்த இரு தமிழ் டொக்டர்களிடம் இலங்கையின் மீது படையெடுக்க இந்திய இராணுவத்தை தயார் நிலையில் வைத்திருந்ததாகவும் ஆனால் அங்கிருக்கும் இந்தியத் தோட்டத் தொழிலாளர்களின் நலன் கருதி தான் தயங்குவதாகவும் தெரிவித்திருக்கிறார். இது பற்றிய விபரங்களை "இலங்கை தமிழ் தேசியம்" (Sri Lankan Tamil Nationalism) என்கிற நூலில் ஏ.ஜே. வில்சன் குறிப்பிடுகிறார்.

அமெரிக்கா இந்தியாவுக்கு எதிராக இந்தியாவின் அயல் நாடுகளை சரிகட்டி தம் பக்கம் ஈர்த்துவைத்திருந்தது. 1977 ஆம் ஆண்டு ஜே.ஆரின் அரசாங்கத்தின் திறந்த பொருளாதாரக் கொள்கை, அமெரிக்க சார்பு வெளியுறவுக் கொள்கை என்பன அமெரிக்காவின் ஆசீர்வாதத்துடன் நிகழ்ந்தவையே. இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் இந்தியாவை பகைத்துக் கொண்டு ஆட்சிசெய்ய முடியாத ஒரு நிலை அயல் நாடுகளுக்கு இருக்கவே செய்தது. ஆக இந்தியாவையும் அமெரிக்காவையும் ராஜதந்திர ரீதியில் கவனமாகக் கையாளும் நிலை இலங்கைக்கு இருந்தது.

அமெரிக்காவில் ஜே ஆர். இந்தியாவின் தலையீட்டை ராஜதந்திர ரீதியில் கட்டுப்படுத்த ஜே.ஆர் அமெரிக்காவுக்கு ஓடினார். 1984 யூன் மாதம் 18 ஜே.ஆரை அமெரிக்க ஜனாதிபதி ரொனால்ட் ரேகன் வெள்ளை மாளிகையில் பலமான வரவேற்பளித்து விருந்து கொடுத்தார்.

வெள்ளை மாளிகைக்கு வெளியில் ரோநால்ர் ரேகனின் உரைக்கு அடுத்ததாக ஜே.ஆரால் உரை நிகழ்த்தப்பட்டது. அவ்வுரையில் இலங்கையில் தலைதூக்கியுள்ள "தமிழ் பயங்கரவாதத்தையும்", இந்தியாவின் தலையீடு பற்றியும் போட்டுக்கொடுக்க தவறவில்லை. ஜே.ஆரின் பேச்சின் மைய நோக்கமும் அதுதான்.

**"இலங்கையின் வடக்குப் பகுதியில் பிழையாக வழிகாட்டப்படும் தமிழ் பயங்கரவாத குழுக்கள் ஐக்கிய இலங்கையை பிரிப்பதற்காக இயங்கிவருகிறார்கள். இந்த பயங்கரவாத குழுக்கள் மிகவும் சிறியவை. அவர்கள் கொள்ளைகளிலும், கொலைகளிலும் ஈடுபட்டுவருகிறார்கள். அவர்கள் மாக்ஸிய தேசமொன்றை உருவாக்குவதும் அவர்களின் இலக்கு. இலங்கையையும், இந்தியாவையும் சேர்த்துக் தான். தமிழ் நாட்டிலிருந்து அதனைத் தொடங்குகிறார்கள். இதுவரை 147 அப்பாவிகளைக் கொன்றுள்ளார்கள். ஜனாதிபதி அவர்களே உங்கள் நாடு பயங்கரவாதத்துக்கு எதிரத்து சர்வதேச ரீதியில் நடவடிக்கை எடுத்து வருவதையிட்டு மகிழ்ச்சியடைகிறேன். ஐ.நாவும் தங்கள் நாடும் இணைந்து வளர்ந்துவரும் நாடுகளில் தலைதூக்கிவரும் பயங்கரவாதத்துக்கு எதிராக இயங்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்"**

என்று அந்த உரையில் தெரிவித்தார். அமெரிக்காவின் பிடியில் இலங்கை இந்தியாவின் தலையீடு அதிகரிக்கும் போதெல்லாம் இந்தியாவுக்கு எதிரான, அமெரிக்காவுக்கு சார்பான நாடுகளிடம் இலங்கை அரசு உதவிகோரி மண்டியிட்டது இந்த போக்கின் விளைவுகளால் தான். ஜெயவர்த்தனா 80களின் ஆரம்பத்தில் அமெரிக்காவுக்கும், இங்கிலாந்துக்கும் இஸ்ரேலுக்கும், பாகிஸ்தானுக்கும், சீனாவுக்கும் ஒட வைத்ததும் இந்தியாவைத் தாக்குபிடிப்பதற்கான பலத்தை அதிகரிப்பதற்காகத் தான். இதன் விளைவால் தான் இந்தியா தம்மீது படையெடுக்கப்போகிறது என்கிற பிரச்சாரம், பாதுகாப்பு அமைச்சின் உருவாக்கம், புதிய ஆயுதக் கொள்வனவு, படைப்பெருக்கம் அனைத்தையும் துரிதமாக மேற்கொண்டது. இந்த பயம் என்பது மனப்பிரமையால் வந்ததல்ல.

1985 டிசம்பரில் ஜே.ஆர் பாகிஸ்தான் சென்று அந்நாட்டுத் தலைவர் ஜெனெரல் சியாவை சந்தித்த போது நேரடியாகவே பல இராணுவ உதவிகளை வழங்குவதாக அறிவித்தார். அதற்கு முன்னர் அளித்துவந்த இராணுவப் பயிற்சியை மேலதிகமாக விஸ்தரிப்பதற்கு அவர் உடன்பட்டார். பாதுகாப்பு அமைச்சராக லலித் அத்துலத் முதலி பதவியேற்றதும் "பயிற்சியளிக்கப்பட்ட ஒவ்வொரு புலிக்கும் நூறு இராணுவத்தினர் இங்கே பயிற்சியளிக்கப்படுவார்கள் என்று இந்தியாவுக்கு எச்சரிக்கை விடுத்தார். அதேவேளை தமிழகத்தில் ஈழ ஆதரவு சக்திகள் இலங்கைத் தமிழர்களுக்கு பலமான ஆதரவை வழங்கினார்கள். எதிர்க்கட்சிகளும், ஆளுங்ககட்சியும் கூட தொடர்ச்சியாக பல போராட்டங்களை முன்னெடுத்தன. இலங்கை அரசுக்கு அமெரிக்கா ஆயுத உதவிகள் வழங்குவதைக் கண்டித்து 12.10.1983இல் நிகழ்ந்த பேரணியின் இறுதியில் தமிழக முதல்வராக இருந்த எம்.ஜீ.ஆர். அமெரிக்க தூதுவர் கான்சல் ரோய் விட்டேக்கரிடம் மனுவையும் அளித்தார்.

வேர்ணன் வோல்ட்டர் 83இன் இறுதியில் அமெரிக்க தூதரகத்தில் இருந்துகொண்டு இயங்கிய சீ.ஐ.ஏ. உளவுப்பிரிவின் பிரதித் தலைவர் தான் வேர்ணன் வோல்டர் (Vernon A. Walters) கொழும்பிலேயே தங்கியிருந்து இலங்கை அரசாங்கத்துக்கு ஆலோசனை வழங்கி வந்தார். பிற்காலத்தில் அவர் அமெரிக்காவுக்கான ஐ.நா பிரதிநிதியாகவும், ஜேர்மன் போன்ற நாடுகளுக்கான தூதுவராகவும் இருந்தவர். இஸ்ரேலிடமிருந்து இராணுவ உதவிகளைப் பெறும்படி ஆலோசனை வழங்கியதும் அவர் தான். அமெரிக்க ஜனாதிபதியின் சிறப்புத் தூதுவரான வேர்ணன் வோல்ட்டர் இஸ்ரேலுக்கும் இலங்கைக்கும் இடையிலான ஒப்பந்தத்தை வரைவதற்கு வழிகாட்டியிருக்கிறார். அதனைத் தொடர்ந்து தான் இஸ்ரேல் இராணுவ நிபுணர்கள் இலங்கை வந்தடைந்தார்கள். இலங்கைக்கான இஸ்ரேல் தூதுவருக்குப் பதிலாக அவசர அவசரமாக புதிய ஒருவர் மாற்றப்பட்டார்.

இந்த நிலைமைகளால் மாதுறு ஓயா திட்டத்திற்கு சவூதி அரேபியா வழங்கவிருந்த நிதியுதவியை நிறுத்தியது. இலங்கையிடமிருந்து தேயிலையை கொள்வனவு செய்து வந்த முதன்மை நாடுகளில் ஒன்றான ஈராக் கொள்வனவை குறைத்துக்கொண்டது. எகிப்தும் தேயிலை ஏலச் சந்தையிலிருந்து விலக்கிக்கொண்டது. குவைத் இலங்கையிலிருந்து வரும் தொழிலாளர்களை மட்டுப்படுத்தியது. ஜோர்தான் வெளியுறவு அமைச்சர் இஸ்ரேலுடனான இலங்கை உறவைப் பற்றி பரிசீலிக்குமாறு எச்சரித்தது. ஈரான் புதிதாக அனுப்பியிருந்த இலங்கைக்கான தூதுவரை விலக்கி ஈரானுக்கு திருப்பி அழைத்துக்கொண்டது. சிரியா, பாலஸ்தீன் மற்றும் ஒபெக் நாடுகளின் அமைச்சர்கள் இலங்கைக்கு எதிரான நடவடிக்கை குறித்து ஆராயவேண்டும் என்றனர்.

ஆனால் இத்தனையையும் மீறி இலங்கை அரசாங்கம் அமெரிக்காவின் வழிகாட்டளின் கீழ் இருப்பதே பாதுகாப்பானது என்று எண்ணியதால் இஸ்ரேலுடனான உறவை பகைத்துக் கொள்ளவில்லை. அதற்கு கொடுத்த விலை அரபு நாடுகளுடனான பகை. அதே வேளை இந்த சூழலைப் பயனடுத்தி ஜே.ஆருடன் "அமெரிக்காவின் குரல்" (Voice Of America) நிலையத்துக்கு 1000 ஏக்கர்களை வழங்கும் ஒப்பந்தத்தை அமெரிக்கா செய்துகொண்டது. "இணைப்பு சி" திட்டத்தை றேகன் நிர்வாகம் எதிர்த்ததும் கூட அத்திட்டத்தின் மீதான ஜே.ஆரின் உதாசீனத்துக்கு காரணங்களில் ஒன்று. திருகோணமலை தமிழர் கைகளுக்குப் போனால் அது இந்தியாவின் செல்வாக்குக்குள் சென்று விடும் என்கிற ஒரு அச்சமும் அதற்கான காரணம். இத்தனைக்கும் "இணைப்பு சி" திட்டத்தில் திருகோணமலை துறைமுகம் மத்திய அரசின் கட்டுப்பாட்டுக்குள் இருக்கும் வகையிலேயே தயாரிக்கப்பட்டிருந்தது.

அதேவேளை இந்தியாவின் இராணுவ ஆக்கிரமிப்புக்கான வாய்ப்புகள் அதிகமிருப்பதாக ஜே.ஆரை எச்சரித்ததும் அவர் தான். டெல்லிக்குச் சென்று அவ்வாறானதொரு இராணுவ ஆக்கிரமிப்பை செய்ய முற்படக்கூடாது என்று கேட்டுக்கொண்டதாக கே.எம்.டி.சில்வாவின் "பிராந்திய அதிகாரமும் சிறிய அரசுகளின் பாதுகாப்பும் , இந்தியா - இலங்கை 1977-1990" என்கிற நூலில் விளக்குகிறார். இந்தியாவில் தமிழ் இயக்கங்களுக்கு பயிற்சி வழங்கப்பட்ட தளங்கள், முகாம்கள் பற்றிய புகைப்படங்களை இலங்கை அரசுக்கு கொடுத்து உறுதிப்படுத்தியவரும் வேர்ணன் வோல்டர் தான். வேர்ணன் வோல்டர் இலங்கையில் இருந்த போது திருகோணமலை படைத்தளத்தைப் பற்றி இந்திய அதிகாரிகளுடன் பேசி அவர்களை பீதிக்குள்ளாக்கிய சம்பவங்களும் நிகழ்ந்திருக்கின்றன. அமெரிக்கா திருகோணமலையில் தளத்தை அமைக்கக்கூடும் என்கிற பயம் இந்தியாவுக்கு இருந்தது. "வொய்ஸ் ஒப் அமெரிக்கா" என்கிற பெயரில் அமெரிக்கா திருமலையில் நிலைகொள்ள முயற்சித்ததும் உண்மை தான். இந்தியாவின் இந்த பயத்தை 1983 இணைப்பு சி, மற்றும் 1987 இலங்கை - இந்திய ஒப்பந்தம் ஆகியவற்றில் திருகோணமலை விவகாரம் தீர்வு யோசனைகளில் ஒன்றாக உள்ளிடப்பட்டிருந்தமை என்பவற்றின் மூலம் நாம் உணரலாம்.

11ஆம் பக்கம் பார்க்க...

# தமிழ் மக்களுக்கு எதிரான சிறிலங்கா அரசின் இனப்படுகொலைகள்!

இலங்கைத்தீவின் வரலாறு அரசியலமைப்புச் சட்டத்தின் ஊடாக பௌத்த மதத்துக்கு முதலிடம், புத்தசாசன அமைச்சினூடாகப் பஞ்சசீலக் கொள்கைகளுக்குப் பிரத்தியேக இடமும் கொடுக்கப்படுவதாகக் கூறப்படுகின்ற போதிலும் அது நடைமுறையில் பெருமளவுக்கு படுகொலைகளால் அறியப்படும் வரலாறாகவே இருந்துவருகிறது. இந்ததவிர்க்கமுடியாததும் சகிக்க முடியாததுமான துர்ப்பாக்கியமான நிலைக்கான அத்திவாரம், இலங்கை சுதந்திரம் பெறுவதற்கு முன்பான காலத்திலேயே இடப்பட்டு இருக்கின்றது. அப்போதிலிருந்தே இந்த நாட்டை ஆளத் தலைப்பட்ட சிங்களத் தலைவர்கள், சிங்களபௌத்ததேசியம்கொண்ட ஒரு நாடாகவே இலங்கையை வைத்திருக்க முயன்றிருக்கின்றார்கள். அதனை நடைமுறையில் பேணுவதற்கு சிறுபான்மை இனங்களை அச்சுறுத்தி வைத்திருத்தல் என்ற உத்தியைக் கையிலெடுத்திருக்கின்றார்கள். இது 1883இல் ஆரம்பித்தது. வர்த்தகத்தில் ஈடுபட்ட மலையாளிகளுக்கு எதிராக இந்த நிலைப்பாட்டை அநாகரிக தர்மபாலா, ஏ.ஈ.குணசிங்கா போன்ற சிங்கள பௌத்த பேரின வாதத்தின் பிதாமகன்கள் முன்னெடுத்துச் சென்றார்கள்.

அதனை பின்வந்த சிங்களத்தலைவர்களும் தொடர்ந்தார்கள். அதற்காக அவர்கள் பிரயோகித்த மிகப் பயங்கரமான ஆயுதமாக இனப் படுகொலைகளே அமைந்தன. அதனை இலங்கை வாழ் தமிழ்பேசும் இனத்தை அச்சுறுத்திப்பணியவைக்கும் தந்திரமாகவே கையாண்டனர். ஆனால் அந்தப் படுகொலைகளை நிகழ்த்திய அரச பயங்கரவாதத்தை, தமிழ் மக்கள் ஆயுதம் ஏந்திய போராட்டம் மூலம் எதிர்கொள்ளத் தொடங்கியபோது, சிங்களத் தலைமைகளின் திட்டங்கள் ஆட்டம் கண்டன. இலங்கை என்ற நாட்டுக்குள் தமிழ் மக்கள் இணைந்து வாழமுடியாது என்ற முடிவை எடுக்கவேண்டி ஏற்பட்டபோது அதற்கு அரசியல் உரிமைகள் மறுக்கப்பட்டமையும் (வேர்கள் இணையம் தட்டச்சு செய்து காலத்தின் தேவை கருதி மீள் வெளியீடு செய்கின்றது ஒரு காரணமாக முன்னின்றது. அதனை எதிர்கொள்ளவோ ஜீரணிக்கவோ திராணியற்ற சிங்களத் தலைமைகள் இன்னும் இன்னும் இனப்படுகொலைகளையே பல்வேறு வடிவங் களில் முன்னெடுத்தன. வயலில், கடலில், தொழிலில் ஈடுபடும் போது தரைவழி, கடல்வழி போக்குவரத்தில் ஈடுபடும்போது, சொந்தக் குடியிருப்புக்களில், இடம்பெயர்ந்தோர் முகாம்களில் தங்கியிருந்த போது என பல்வேறு வகையிலும் இனப்படுகொலைகள் இடம்பெற்றன.

இனப் படுகொலைகளின் தொடக்க கால அரசுத் தலைவராக இருந்த டி.எஸ்.சேனநாயக்கா அவரைத் தொடர்ந்து வந்தடட்லி சேனநாயக்கா, சேர்.ஜோன் கொத்தலாவல, எஸ்.டபிள்யூ. ஆர்.டி.பண்டார நாயக்கா, சிறிமாவோ பண்டாரநாயக்கா, ஜே.ஆர்.ஜெயவர்த்தனா, ஆர்.பிரேமதாசா, டி.பி.விஜயதுங்க, சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க ஆகிய அனைத்துத் தலைவர்களினது காலங்களிலும் தமிழினப் படுகொலைகள் இடையறாது நிகழ்ந்திருக்கின்றன. இலங்கை அரசின் நிகழ்ச்சிநிரலில் பிரதானமானதாக இருந்து வந்த படுகொலையினை ஒவ்வொரு தலைவர்களும் தத்தமதுகால, சூழ்நிலைகளுக்கு ஏற்ப நிகழ்த்தியுள்ளனர். ஆயினும், அவை ஒருவரை விஞ்சியதாக மற்றவர் காலத்தில் நடந்திருப்பது தமிழ் மக்கள் எதிர்கொண்ட மிகப்பெரும் சவாலாகும்.

சிறிலங்கா அரசு கட்டவிழ்த்துவிட்ட இப் படுகொலைகள் ஒரு அரசபயங்கரவாதமாக பரிணாமமடைந்தபோது இதனை எதிர்கொள்ள, தமிழ்மக்கள் மேற்கொண்ட போராட்டங்கள் பயங்கரவாத நடவடிக்கைகளாகச் சித்தரிக்கப்பட்டன. அதற்கான சட்ட உருவாக்கங்களும் சிங்களப் பிரதிநிதித்துவத்தை பெரும்பான்மையாகக் கொண்ட பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டன. 1979ஆம் ஆண்டு தமிழ்த்தேசிய விடுதலைப் போராட்டத்தை அரச பயங்கரவாதத்தினூடாக ஒடுக்குவதற்கும் தமிழினப்படுகொலையைப் பல்வேறு தளங்களில் விரிவாக்குவதற்கும் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை ஜே.ஆர்.ஜெயவர்த்தனா தனக்கிருந்த பெரும்பான்மைப் பலத்தைப் பயன்படுத்தி நிறைவேற்றினார். அது தொடர்ந்தும் இற்றைவரை நடைமுறையில் உள்ளது. பேரினவாதக் கட்சிகள் மாறிமாறி ஆட்சியைக் கைப்பற்றினாலும் இந்தச் சட்டத்தின் கீழ் எந்த மாற்றமும் நிகழவில்லை. இந்தச் சட்டம் தென்னாபிரிக்காவில் போத்தா அரசின் மிக மோசமான நிற ஒதுக்கல் சட்டத்தைவிடப் பயங்கரமானது என சர்வதேச யூரர் சபை, சர்வதேச மன்னிப்புச்சபை போன்றன எடுத்துக்காட்டி நீக்கும் படி கோரிய போதும் சிங்களத் தலைமைகள் இம்மியும் அசையவில்லை. இதன் மூலம் அரச பயங்கரவாதம் மேற்கொண்டசகல இனப்படுகொலைகளும் பயங்கரவாதத்திற்கு எதிரான நடவடிக்கைகளாகவே உலகின்முன் கொண்டுசெல்லப்பட்டன.



கிழக்கு மாகாணத்திலும் வடக்கிலும் நடந்த மிகப்பெரும் படுகொலைகளும் இவ்வாறே நியாயப்படுத்தப்பட்டன் அல்லது மூடிமறைக்கப்பட்டன. ஆலயங்களிலும் அகதி முகாம்களிலும் கூடியிருந்த தமிழர்கள் மீதும் சிகிச்சைக்காக நோயாளர்கள் அனுமதிக்கப்பட்டிருந்த மருத்துவமனைகள் மீதும் மாணவர்கள் கல்வி கற்றுக்கொண்டிருந்தபோது பாடசாலைகள் மீதும் நடாத்தப்பட்ட தாக்குதல்களில் உயிர்கள் பறிக்கப்பட்டபோதும் அந்தச் சட்டத்தின்மூலம் அங்கீகரிக்கப்பட்டன: இது பெண்கள், குழந்தைகள், மாணவர்கள், வயோதிபர்கள், நோயாளிகள் என்று வேறுபாடில்லாமல் தமிழர்கள் என்பதற்காக அனைத்துத் தரப்பினர் மீதும் பிரயோகிக்கப்பட்டது.

சிங்களத் தலைமைகள் தமது அரசியல் ஆதாயத்துக்காக அரசியல் நிகழ்ச்சி நிரலில் சேர்த்துக்கொண்ட தமிழினப் படுகொலைகள் மிகக் குரூரமானவையாக - மனிதாபிமானம் அற்றவையாக இருக்க வேண்டும் என்பதிலும் அக்கறை காட்டியே வந்துள்ளன. இதற்கு 1983, ஜீலை 11இல் ஜே.ஆர் லண்டன் டெலிக்கிராப் பத்திரிகைக்கு அளித்த பேட்டி நல்லதொரு சான்றாகும். **"நான் யாழ்ப்பாணத்து மக்களுடைய அபிப்பிராயங்களைப் பற்றிக் கவலைப்பட மாட்டேன். அவர்களது உயிர், உடல்களைப் பற்றியும் கவலைப்பட மாட்டேன்: எனது அரசாங்கம் எதைச் செய்யவேண்டு மென முடிவெடுத்துவிட்டதோ அதைச் செய்தே தீரும்"** என்று கூறியிருந்தார். சிங்களப் பேரினவாதத்தின் சிந்தனை இலங்கைத்தீவு முழுவதும் பௌத்த சிங்கள நாட்டிற்குரியது என்பதாகக் கட்டி வளர்க்கப்பட்டுவர, காலத்துக்குக் காலம் தமிழ்மக்களின் பாரம்பரிய நிலங்களில் சிங்களக் குடியேற்றங்கள் நிறுவப்பட்டன. குற்றவியல் சட்டங்களினால் குற்றவாளிகளாக இனங்காணப்பட்டவர்கள், ஆயுதப் பயிற்சியளிக்கப்பட்டு தமிழர் நிலங்களில் குடியேற்றப்பட்டனர்.

இச் சிங்களக் குடியேற்றமானது 1940இல் ஆரம்பிக்கப்பட்டபோது, அப்போதைய காணி, விவசாய அமைச்சரான டி.எஸ்.சேன நாயக்கா அரசமரக் கன்றொன்றை நாட்டிய பின் ஆற்றிய உரை கவனத்திற் கொள்ளத்தக்கது. "இன்று நாட்டப்படும் இந்த அரசமரம் வளர்ந்து பெரு விருட்சமாகும்போது இந்த மண்ணில் உங்களைத் (குடியேற்றப் பட்ட சிங்களவரை) தவிர வேறெவரும் குடியிருக்கக்கூடாது."

1987, பெப்ரவரி 30இல் கொக்கட்டிச்சோலையில் இடம்பெற்ற படுகொலையும் அதற்கென அளிக்கப்பட்ட ஒரு பயிற்சியின் அடிப்படையில் செய்யப்பட்டதே. பிரிட்டனின் கீனிமீனி (K.M.S) பயிற்சி படைகளுக்கு அளிக்கப்பட்டதாகவும் அதனை பரீட்சித்துப் பார்ப்பதற்காக பெற்ற பயிற்சியினை படையினர் சரியாகச் செய்கின்றார்களா என்று அறிவதற்காக இப்படுகொலைகள் நிகழ்த்தப்பட்டதாகவும் பயிற்சியளித்தவர்களே தெரிவித்திருக்கின்றார்கள். வரப்பட்ட தினமான 1956, ஜீன் 5ஆம் திகதி நடைபெற்றது. அம்பாறை கல்லோயாவில் குடியேற்றப்பட்ட சிங்களவர்கள் அக் கிராமத் தில் பூர்வீகவாசிகளான தமிழ்மக்கள் மீது மேற்கொண்ட இன அழிப்பின்போது 150 தமிழ் மக்கள் கொல்லப்பட்டனர். பலர் படுகாய மடைந்தனர். அன்றைய தினமே ஒடுக்கு முறையின் இன்னொரு வடிவமான பாலியல் வன்முறைச் சம்பவமும் ஆரம்பமானது. தமிழர்களுக்குத் தென்னிலங்கையில் மட்டுமல்ல, தமிழர் தாயகத்தில் மட்டுமல்ல சிறைச்சாலைகளிலும்கூட பாதுகாப்பு இல்லை என்பதையும் சிறிலங்கா அரசுகாலத்துக்குக் காலம் நிரூபித்து வந்தது.

வெலிக்கடைச் சிறை, பூசா, களுத்துறை, பெலவத்தை, பிந்துனுவெவ தடுப்பு முகாம்கள், திருகோணமலைச் சிறை போன்றவற்றில் நடைபெற்றதமிழர் படுகொலை தொடர்பாக எவருமே தண்டிக்கப்படவில்லை. வெலிக்கடைச் சிறையில் 1983, ஜீலை 25இல் 35 தமிழர் கொடூரமாகப் படுகொலை செய்யப்பட்ட பின்னர் மீண்டும் ஜீலை 27இல் அதே சிறையில் எஞ்சியோர் பதினெட்டுப்பேர் படுகொலை செய்யப்படக் கூடியதாக இருந்த தென்றால் தமிழர்களின் உயிர் தொடர்பாகச் சிறிலங்கா ஆட்சியாளர்கள் கொண்டிருந்த நிலைப்பாடுகள் எவ்வாறிருந்தன என்பதை உணரமுடியும். இவ்வாறு நீண்ட இந்த இன அழிப்பு முயற்சிகளினால் இதுவரை அறுபதினாயிரத்துக்கும் அதிகமான தமிழ்மக்கள் கொல்லப்பட்டனர். ஆயினும் இவற்றால் தமிழ்மக்களின் விடுதலைப்போராட்டம் தடைப்படவில்லை.

மாறாக அது முனைப்படைந்து கூர்மைபெற்றுள்ளது. இவ் விடுதலைப்போராட்டம் இன்று அரசியல், இராணுவ தளங்களில் மிகப் பலம் மிக்கதாக பரிணாமமடைந்துள்ளது. தேசிய விடுதலைப்போராட்டத்தின் தேவை வலியுறுத்தப்பட்டுவருகின்றது. இந்த நிலையில் இதனைப் புலமைசார் நிலையில் வலியுறுத்தி வருபவர்களும் ஊடகவியலாளர்களும் படுகொலை செய்யப்படும் துர்ப்பாக்கிய நிலையை சிங்களப் பேரின வாதம் அண்மைக் காலமாகத் தீவிரப்படுத்தியுள்ளது.

சட்டமேதை குமார் பொன்னம்பலம், ஊடகவியலாளர்களான மயில்வாகனம் நிமலராஜன், ஐயாத்துரை நடேசன், தர்மரட்ணம் சிவராம் போன்றவர்களுடைய படுகொலைகள் சிங்களப் பேரினவாதத்தின் அகோர முகத் தின் வெளிப்பாடுகளாகும். தமிழினப் படுகொலைகளுக்காக உலகின் மிகக் கொடூரமான முறைகளை எல்லாம் தனது படைகளுக்குப் பயிற்று வித்துச் செயற்படுத்திப் பார்க்கும் அரசியல் தலைமைத்துவங்கள் தொடர்ந்தும் இலங்கைத் தீவை ஆட்சிசெய்கின்றன. இதற்கென வெளிநாடுகளில் இருந்து வந்தவர்கள் பயிற்சியளித்துள்ளனர். இதனைச் சிறிலங்கா இராணுவ உயர் அதிகாரி ஒருவரே வெளிப்படையாக ஊடகங்களுக்குத் தெரிவித்திருக்கின்றார். சிறிலங்கா இராணுவத்தில் விசேடகுழுக்களின் உறுப்பினர்கள் என இனங்காணப்பட்ட 300-400வரையான ஆட்களுக்கு கட்டுப்பாடின்றிக்கொலைசெய்வதற்காகப்பயிற்சி அளிக்கப்பட்டதாக சண்டே லீடருக்குவழங்கிய தகவலில் தெரிவித்திருக்கின்றார்.

பொதுப்படையாகவே சிறிலங்காப் படையினர் எத்தகைய மனோபாவத்துடன் தயார்ப் படுத்தப்பட்டிருக்கின்றார்கள் என்பதை அவர்களுக்கு விசேட பயிற்சியை அளிக்க வந்த பிரித்தானிய எஸ்.ஏ.எஸ் படைப்பிரிவைச் சேர்ந்த அதிகாரியே எடுத்துரைத்துள்ளார். அவர்களுக்கு நல்லது கெட்டது என்று எதுவும் இல்லை. தமிழரைக்கொன்றொழிப்பதைத்தவிர வேறு எந்தச் சிந்தனையும் இல்லை. நாங்கள் பயிற்சியளித்தவர்களில் சிலர் மிகக் கொடூரம் புரிந்தவர்கள் என Immediate Action என்ற தனது நூலில் விபரித்திருக்கின்றார்.

1987, பெப்ரவரி 30இல் கொக்கட்டிச் சோலையில் இடம்பெற்ற படுகொலையும் அதற்கென அளிக்கப்பட்ட ஒரு பயிற்சியின் அடிப்படையில் செய்யப்பட்டதே. பிரிட்டனின் கீனிமீனி (k m s ) பயிற்சி படைகளுக்கு அளிக்கப்பட்டதாகவும் அதனை பரீட்சித்துப்பார்ப்பதற்காகபெற்ற பயிற்சியினை படையினர் சரியாகச் செய்கின்றார்களா என்று அறிவதற் காக இப்படுகொலைகள் நிகழ்த்தப்பட்ட தாகவும் பயிற்சியளித்தவர்களே தெரிவித்திருக்கின்றார்கள். தமிழ்மக்களையும் தமது பிரஜைகளே என வெளியுலகிற்குக் கூறிக்கொள்ளும் தன்னை ஒரு ஜனநாயக அரசாகக் காட்டிக் கொள்ளும் சிறிலங்கா தமிழினத்தை அழிப் பதற்காக எவ்வாறு தயார்ப்படுத்தல்களை மேற்கொண்டுள்ளது என்பதற்கு இவை சிறு எடுத்துக்காட்டுக்களே. சிறிலங்கா அரசினதும் படைத்துறையினதும் இருப்பும் வளர்ச்சியும் தமிழினப்படுகொலைகளையே நோக்கமாகக் கொண்டவை. இவையின்றி அவற்றால் தம்மைத் தக்க வைத்துக்கொள்ள இயலாது என்பதுதான் யதார்த்தமானது. கடந்த மூன்றரை வருடங்களாக நிலவும் சமாதானத்துக்கான சூழலிலும் இது புலப்படுத்தப்பட்டுக் கொண்டே இருக்கின்றது.

கிழக்கில் காஞ்சிரங்குடாவில் தமிழ் மக்கள் கொல்லப்பட்டமையும் மட்டக்களப்பு சந்திவெளியிலும் யாழ்ப்பாணம் திருநெல்வேலியிலும் மக்கள் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டமையும் சிறிலங்கா படைப் பாரம்பரியத்தின் வெளிப்பாடே ஆகும். இவ்வாறே படைகள் நேரடியாகப் படுகொலைகளை நிகழ்த்த முடியாது போயிருக்கும் சூழ்நிலைகளில் தனது புலனாய்வாளர்கள் ஊடாகத் தமிழ் மக்களை இலக்குவைத்து தாக்குதல்களை நடாத்திக்கொண்டிருக்கின்றன.

இதன் விளைவாக கிழக்கிலும் தென்னிலங்கையிலுமாக ஏராளமான அப்பாவித் தமிழர்கள் கொல்லப்பட்டு விட்டார்கள். தமிழ்மக்களது போராட்டம் உரிமைப் போராட்டமாகத்தான் ஆரம்ப காலகட்டத்தில் முன்னெடுக்கப்பட்டது. தமிழ்மக்கள் தங்களுடைய உரிமைகளை வென்றெடுப்பதற்காக சாத்வீகப் போராட்ட வடிவத்தையே பின்பற்றினார்கள்.

**சுழியோடி**
**11ஆம் பக்கம் பார்க்க...**



# பிராந்திய செய்திகள்



## மட்டக்களப்பில் இன்று காலை மீட்கப்பட்ட சடலம்

மட்டக்களப்பு கொக்குவில் பொலிஸ் பிரிவிலுள்ள திராய்மடு முருகன் கோவிலுக்கு அருகாமையில்



உள்ள பகுதியில் உள்ள வீதிக்கு அருகில் ஆண் ஒருவர் உயிரிழந்த நிலையில் அன்று (04) காலை சடலமாக மீட்கப்பட்டுள்ளதாக கொக்குவில் பொலிசார் தெரிவித்தனர். குறித்த பகுதியில் உயிரிழந்த நிலையில் சடலம் ஒன்று இருப்பதாக பொலிசாருக்கு கிடைத்த தகவலுக்கமைய குறித்த சடலம் மீட்கப்பட்டுள்ளது.

இதன்போது, பொலிஸாரால் சம்பவ இடத்தில் இருந்து மோட்டார் சைக்கிள் ஒன்று கைப்பற்றப்பட்டுள்ளது. உயிரிழந்த நபர் இதுவரை அடையாளம் காணப்படவில்லை என பொலிஸார் தெரிவித்துள்ளனர். சடலத்தை பிரேத பரிசோதனைக்காக வைத்தியசாலையில் ஒப்படைப்பதற்கு நீதிமன்ற அனுமதியை பெறுவதற்கான நடவடிக்கையினை மேற்கொண்டு வருவதாக பொலிசார் மேலும் தெரிவித்தனர்.

## டக்ளஸ் தேவானந்தா மீனவர்களிடம் பகிரங்கமாக மன்னிப்பு கோர வேண்டும்

யாழ்ப்பாணத்தில் போராட்டத்தில் ஈடுபட்டுவரும் மீனவர்களை அவமதிக்கும் வகையில் கருத்து வெளியிட்டிருந்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மீனவர்களிடம் பகிரங்கமாக மன்னிப்பு கோர வேண்டும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் வலியுறுத்தியுள்ளார். இலங்கை கடல்



எல்லைக்குள் இந்திய இழுவை படகுகளின் அத்துமீறல்களுக்கு நிரந்தரமான தீர்வு மற்றும் வடமராட்சி கிழக்கு கடலில் இடம்பெற்ற மீனவர்கள் உயிரிழப்புக்கு நீதி ஆகியவற்றை கோரி தொடங்கப்பட்ட போராட்டம் 4வது நாளாக இன்றும் முழு வீச்சுடன் இடம்பெற்று வருகின்றது.

இந்தநிலையில் இன்றைய தினம் பருத்தித்துறை - சுப்பர்மடம் பகுதியில் போராட்டத்தை முன்னெடுத்துள்ள மீனவர்களை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ சுமந்திரனும், இரா.சாணக்கியனும் சந்தித்து ஆதரவு தெரிவித்துள்ளனர்.

இதன்போது மீனவர்கள் மத்தியில் கருத்து வெளியிடும் போதே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் இவ்வாறு வலியுறுத்தியுள்ளார். இதன்போது கருத்து வெளியிட்ட அவர், "போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மீனவர்களுக்கு அபகீர்த்தியை ஏற்படுத்தும் வகையில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கருத்து வெளியிட்டிருந்தார். மீனவர்கள் மதுபோதையில் இருப்பதாக அவர் குறிப்பிட்டிருந்தார். இந்த கருத்து குறித்து அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மீனவர்கள் மத்தியில் பகிரங்கமாக மன்னிப்பு கோர வேண்டும். அத்துடன், மீனவர்களின் கோரிக்கையினை நிறைவேற்ற முடியாத அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உடனடியாக பதவி விலக வேண்டும்." எனக் குறிப்பிட்டுள்ளார்.

## பூஸ்டர் தடுப்பூசியை பெற்ற யாரும் உயிரிழக்கவில்லை!

ஜனவரி முதலாம் திகதி தொடக்கம் இதுவரையில் கொழும்பு மாநகரத்திற்குள் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளானவர்களில் பூஸ்டர் தடுப்பூசியை பெற்றுக்கொண்டவர்கள் எவரும் உயிரிழக்கவில்லை என்று கொழும்பு மாநகரசபை தெரிவித்துள்ளது.

மாநகர சபையின் பிரதம வைத்திய அதிகாரி ரூவான் விஜேயமுனி இதுகுறித்து நேற்று (03) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இந்த விடயத்தை குறிப்பிட்டார்.

இதுவரையில் தடுப்பூசி மருந்தை பெற்றுக்கொள்ளாதவர்கள் விரைவாக அதனை பெற்றுக்கொள்ளுமாறு இதன்போது தெரிவிக்கப்பட்டுள்ளது.

## O/L பரீட்சை பணிகள் நிறைவு!

2021 ஆம் ஆண்டு சாதாரண தரப் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் பொறுப்பேற்கும் பணி அன்றுடன் (03) நிறைவடைகின்றது.

இதற்கமைவாக சாதாரண தர பரீட்சைக்காக விண்ணப்பிப்பதற்கு பரீட்சை திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தின் மூலம் விண்ணப்பங்களை சமர்ப்பிக்க முடியும் என பரீட்சை திணைக்களம் அறிவித்துள்ளது.

## மீண்டும் ஒரு கொவிட் தொற்று அலை ஏற்படுமா?

மீண்டும் ஒரு கொவிட் தொற்று அலை ஏற்படக்கூடிய அளவுக்கு கொவிட் தொற்றாளர்கள் மற்றும் மரணங்கள் பதிவாகவில்லை என்று பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட வைத்தியர் ஹேமந்த ஹேரத் தெரிவித்துள்ளார்.

இருப்பினும், சுகாதார பாதுகாப்பு வழிமுறைகளை தொடர்ந்தும் பின்பற்றி கொவிட் தொற்று அலை ஏற்படாது பாதுகாத்துக் கொள்வது மிகவும் முக்கியமானது என்றும் அவர் தெரிவித்தார்.

## சவால்களுக்கு மத்தியில் தலைமைத்துவம் - ஜனாதிபதியின் விசேட உரை!

சவால்களை எதிர்கொண்டு தலைமைத்துவத்தை வழங்குவது தொடர்பில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அன்று (04) விசேட விளக்கத்தை மேற்கொண்டார். 74வது தேசிய சுதந்திர தின விழாவில் அன்று கலந்து கொண்டு உரையாற்றிய போது ஜனாதிபதி இதனை தெரிவித்தார். 74வது தேசிய சுதந்திர தின விழா நிகழ்வுகள் கொழும்பு சுதந்திர சதுக்கத்தில் நடைபெற்றது.

"சுதந்திரமான மற்றும் ஜனநாயக நாட்டின் குடிமக்கள் என்ற வகையில், நம் அனைவருக்கும் உரிமைகளும் பொறுப்புகளும் உள்ளன. பொறுப்புகளை மறந்துவிட்டு உரிமைகளைப் பற்றி மட்டும் பேசுவது பொருத்தமானதல்ல." "ஒரு நாட்டை ஒழுங்காக நடத்துவதற்கு நாட்டிலுள்ள அனைவரின் ஆதரவையும் எதிர்பார்க்க முடியாது என்பதை நாம் அறிவோம். மாற முடியாதவர்களை நினைத்து நாம் கைவிடத் தயாராக இல்லை. எதிர்காலத்தைப் பற்றிய நேர்மறையான கண்ணோட்டம் மட்டுமே நம்மை முன்னோக்கி நகர்த்த முடியும். "விமர்சனம் செய்வதை மட்டுமே பழக்கப்படுத்தியவர்களுக்கு எதிர்காலம் பற்றிய பார்வை இல்லை. சில சந்தர்ப்பங்களில் உள்ளூர் மற்றும் வெளிநாட்டு சக்திகள் எங்களுக்கு எதிராக ஒழுங்கமைக்கப்படுகிறது. "பிரச்சினைகளில் இருந்து தப்பித்து ஓட வேண்டும் என்று ஒரு தலைவரை மக்கள் எதிர்பார்க்க மாட்டார்கள். நாடு எதிர்கொள்ளும் எந்த சவாலையும் சமாளிக்கும் தலைமையை வழங்க நான் எப்போதும் தயாராக இருக்கிறேன். ஒளிமயமான எதிர்காலத்தை கனவு காண்பவர்களால் மாத்திரமே உலக மாற்றமடையும். "மற்றவர்களை மனதளவில் இழிவுபடுத்தும் எவரும் இந்த நேரத்தில் சமுதாயத்திற்கு செய்வது நன்மையல்ல. நாட்டில் நேர்மறையான சிந்தனை கட்டியெழுப்பப்பட வேண்டும்." பாடசாலை படிப்பை முடிக்கும் ஒவ்வொரு குழந்தையும் நாட்டின் பொருளாதாரத்திற்கு பங்களிக்கக்கூடிய கைவினைப்பொருளில் தேர்ச்சி பெற முயற்சிக்க வேண்டும்." "வியர்வை சிந்தி உழைக்கும் மக்கள் நாட்டின் பொருளாதாரத்திற்கு தீவிர பங்களிப்பை வழங்குகிறார்கள்." "வெளிநாட்டில் உள்ள இலங்கையர்கள் எமக்கு பெரும் சொத்தாக உள்ளனர். தேவைப்படும் போது அவர்கள் நாட்டுக்காக முன்வந்தனர்." "வெளிநாட்டில் வாழும் அனைத்து இலங்கையர்களையும் தங்கள் தாயகத்திற்கு முதலீடு செய்ய அழைக்கிறேன்." "இந்த நாட்டின் ஒவ்வொரு குடிமகனும் தன்னிச்சையாக செயல்படுமாறு நான் கேட்டுக்கொள்கிறேன். தரவுகளின் அடிப்படையில் முடிவுகளை எடுங்கள்." "நான் கொடுத்த வாக்குறுதி எப்போதும் காப்பாற்றப்படும் என்பதை மீண்டும் நினைவூட்டுகிறேன்." எக்காரணம் கொண்டும் இந்த நாட்டில் மீண்டும் தீவிரவாதம் தலைதூக்க அனுமதிக்க மாட்டோம். "எனது எஞ்சிய பதவிக் காலத்தில், நிலையான வளர்ச்சிக்கான எனது அனைத்து இலக்குகளையும் நான் நிர்ணயித்துள்ளேன். மிகவும் கடினமான நேரத்தில் நான் நாட்டைக் பொறுப்பேற்க வேண்டியிருந்தது."

இதேவேளை, நாட்டுக்கு முன்னுதாரணமாக செயற்படுமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அனைத்து அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் ஏனைய அரசியல்வாதிகளுக்கு அழைப்பு விடுத்துள்ளார்.

அவ்வாறானதொரு முன்னுதாரணத்தை அவர்கள் காட்டினால் நாட்டின் பெரும்பான்மையான மக்கள் அதனை பின்பற்றுவார்கள் என ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

## கடற்படையினருக்கு பதவி உயர்வு

74 ஆவது தேசிய சுதந்திர தினத்தை முன்னிட்டு விமானப் படையை சேர்ந்த 175 அதிகாரிகளுக்கும் மற்றும் 2,338 சிப்பாய்களுக்கும் பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது.

இந்நிலை உயர்வுகள் தேசிய சுதந்திர தினமான அன்று(04) முதல் அமுலுக்கு வருவதாக விமானப்படை பேச்சாளர் தெரிவித்தார்.



இதேவேளை, தாய் நாட்டுக்காக இராணுவத்தினரால் வழங்கப்பட்டுள்ள அர்ப்பணிப்பு சேவைகளுக்கு முன்னுரிமை அளிக்கும் வகையில் தேசத்தின் 74 வது தேசிய சுதந்திர தினத்தில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் அனுமதியுடன் பாதுகாப்புப் பதவி நிலை பிரதானியும் இராணுவத் தளபதியுமான ஜெனரல் ஷவேந்திர சில்வாவினால் 480 அதிகாரிகள் மற்றும் 8,034 சிப்பாய்களுக்கான நிலை உயர்வுகள் வழங்கப்பட்டுள்ளன.

அதன்படி, 7 சிரேஷ்ட பிரிகேடியர்கள் மேஜர் ஜெனரல் நிலைக்கும், 16 கேணல்கள் பிரிகேடியர் நிலைக்கும், 36 லெப்டினன் கேணல்கள் கேணல் நிலைக்கும், 50 மேஜர்கள் லெப்டினன் கேணல் நிலைக்கும் 207 கெப்டன்கள் மேஜர் நிலைக்கும், 94 லெப்டினன்கள் கெப்டன் நிலைக்கும், 70 இரண்டாம் லெப்டினன்கள் லெப்டினன் நிலைக்கும் நிலை உயர்த்தப்பட்டுள்ளனர். இந்நிலை உயர்வுகள் தேசிய சுதந்திர தினமான (04)அன்று வழங்கப்படுகின்றது.

ஜெனரல் சவேந்திர சில்வா 2019 ஒகஸ்ட் 18 ஆம் திகதி இராணுவத் தளபதியாக பதவியேற்றதன் பின்னர் அவர் பதவியேற்ற குறுகிய காலத்திற்குள் இலங்கை இராணுவத்தில் உள்ள அதிகாரிகள் மற்றும் சிப்பாய்களுக்கு நான்கு இலக்க நிலை உயர்வுகளை வழங்கியதன் மூலம் மீண்டும் வரலாற்றில் இடம்பிடித்துக் கொண்டார்.

73 ஆண்டுகால வரலாற்றில் முன்னெப்போதும் இல்லாத வகையில் 18 ஒகஸ்ட் 2019 க்குப் பிறகு இன்று வரை 4,341 அதிகாரிகள் மற்றும் 86,741 சிப்பாய்களுக்கு நிலை உயர்வுகள் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# சினிமா துளிகள்



## வலிமை புதிய தகவலால் ரசிகர்கள் உற்சாகம்!

போனி கபூர் தயாரிப்பில் நடிகர் அஜித் நடித்த வலிமை திரைப்படம் வருகிற பிப்ரவரி 24 ஆம் திகதி வெளியாகவுள்ளதாக தகவல் வெளியாகியிருந்தது. இதனை படக்குழு உறுதி செய்துள்ளது. இந்தப் படத்தை வினோத் இயக்கியுள்ளார்.



இந்தப் படம் தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், ஹிந்தி ஆகிய மொழிகளில் வெளியாகவுள்ளது. கடந்த டிசம்பர் மாதம் வெளியான அல்லு அர்ஜீனின் புஷ்பா திரைப்பபடம் நல்ல வரவேற்பைப் பெற்றது. குறிப்பாக ஹிந்தியில் மொழிமாற்றம் செய்யப்பட்டு வெளியான இத்திரைப்படம் வட மாநிலங்களில் பெரும் வெற்றிபெற்றது.

நடிகர் அஜித்தின் வலிமை திரைப்படமும் அனைத்து மொழிகளிலும் வெளியாவதால், புஷ்பா வெற்றியை முந்துமா என்ற எதிர்பார்ப்பு ரசிகர்களிடையே உருவாகியுள்ளது. இந்தப் படத்துக்கு யுவன் ஷங்கர் ராஜா இசையமைத்துள்ளார். இந்தப் படத்தின் பின்னணி இசையை ஜிப்ரான் மேற்கொண்டுள்ளதாக கூறப்படுகிறது.
இந்தப் படத்தில் தெலுங்கு நடிகர் கார்த்திகேயா வில்லனாக நடிக்க /ஹமா குரேஷி, சுமித்ரா, யோகி பாபு, புகழ் உள்ளிட்டோர் முக்கிய வேடங்களில் நடித்துள்ளனர். நீரவ் ஷா இந்தப் படத்துக்கு ஒளிப்பதிவு செய்துள்ளார்.

இதனையடுத்து நடிகர் அஜித், இயக்குநர் வினோத், தயாரிப்பாளர் போனி கபூர் கூட்டணி மூன்றாவது முறையாக ஒரு படத்தில் இணையவிருக்கின்றனர். இந்தப் படத்துக்கு அனிருத் இசையமைக்க, தபு, பிரகாஷ் ராஜ் உள்ளிட்டோர் முக்கிய வேடங்களில் நடிக்கவிருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது.

## ஆபாச புகைப்படம்! ஷாக்கான மாளவிகா மோகனன்

தமிழ் திரையுலகின் முன்னணி நடிகையாக வலம் வரும் மாளவிகா மோகனனின் ஆபாச படங்கள் சமூக வலைத்தளத்தில் வைரலாக பரவுகிறது.

நடிகர் விஜய் நடிப்பில் வெளியான 'மாஸ்டர்' படத்தில் கதாநாயகியாக நடித்தவர் மாளவிகா மோகனன். இவர் தொடர்சியாக அவருடைய வலைத்தளப் பக்கங்களில் கவர்ச்சியான மற்றும் கிளாமரான புகைப்படங்களை பதிவு செய்து வந்தார். இந்நிலையில் அவருடைய புகைப்படம் ஒன்றை மார்ப்பிங் செய்து ஆபாசமாக சித்தரித்து வெளியாகி இருப்பது பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

சமீபத்தில் மாளவிகா மோகனன் ஒரு புகைப்படத்தை சமூக வலைத்தளத்தில் பதிவிட்டிருந்தார். இதனை சிலர் ஆபாசமாக சித்தரித்து சமூக வலைத்தளத்தில் பதிவிட்டிருக்கிறார்கள். இதனை பார்த்து அதிர்ந்து போன மாளவிகா மோகனன். இதற்கு முற்றுப்புள்ளி வைக்கும் விதமாக. நிஜ புகைப்படத்தை ஒரு சிலர் போட்டோ ஷாப் மூலம் ஆபாசமாக மாற்றி வெளியிட்டு உள்ளனர். ஒரு சில ஊடகங்களும் அந்த புகைப்படத்தை பதிவு செய்து வருகின்றனர். இதுபோன்ற சித்தரிக்கப்பட்ட புகைப்படங்கள் வந்தால் புகார் அளிக்க உதவி செய்யவும் என்று மாளவிகா மோகனன் தெரிவித்துள்ளார்.






## அமீர்-பாவ்னி நாங்கள் நல்ல நண்பர்கள்

பிக்பாஸ் 5வது சீசனில் காதலர்கள் என்று கிசுகிசுக்கப்பட்டவர்கள் அமீர்-பாவ்னி. ஆனால் அவர்கள் இருவரும் நாங்கள் நல்ல நண்பர்கள் என்று தான் கூறி வருகிறார்கள்.

நிகழ்ச்சி முடித்த பிறகு பேட்டிகள் கொடுப்பது என இருவருமே பிஸி யாக இருக்கிறார்.
விரைவில் விஜய்யில் பிக்பாஸ் கொண்டாட்டம் திரையிடப்பட இருக்கிறது. அதில் அமீர்-பாவ்னி இருவரும் ஒன்றாக நடனம் ஆடியுள்ளார்கள்.

இந்த நேரத்தில் பாவ்னி மற்றும் அமீர் இருவருமே வெளியே ஒன்றாக சென்றுள்ளனர். அப்போது எடுக்கப்பட்ட புகைப்படம் இன்ஸ்டாவில் வலம் வருகிறது.

## பிக்பாஸ் அல்டிமேட் நிகழ்ச்சியில் DANGER ZONEல் இருப்பது இவர்களா?

பிக்பாஸ் அல்டிமேட் புத்தம் புதியதாக தொடங்கப்பட்டுள்ள ஒரு நிகழ்ச்சி. எல்லாம் நாம் பார்த்து பழகிய போட்டியாளர்கள் தான், இதனால் அவர்களுக்கான அறிமுகம் தேவையில்லை.

நிகழ்ச்சி ஆரம்பித்த நாள் முதல் ஒரே சண்டையாக தான் இருந்து வருகிறது. அதிலும் வனிதா சண்டை போடுவதை தனது முழு பணியாக செய்து வருகிறார். அவர் தான் வீட்டில் உள்ள ஒரு என்டர்டெயின்மெண்ட் அவரை நீக்கி விடாதீர்கள் என வருத்தப்படும் சில ரசிகர்களும் உள்ளார்கள்.

தற்போது நிகழ்ச்சி குறித்து என்ன தகவல் என்றால் வனிதா, சுரேஷ் சக்ரவர்த்தி, அபிநய் என 3 பேரும் டேஞ்சர் சோனில் இருப்பதாக கூறப்படுகிறது.
இதில் யார் வெளியேறுவார், யார் காப்பாற்றப்படுவார் என்பதை பொறுத்திருந்து காண்போம்.





## வதந்திக்கு பதில் கொடுத்த ஆபாச பட நடிகை!

ஆபாச பட நடிகை மியா கலீபா குறித்து சமூக வலைத்தளங்களில் பரவிய வதந்திகளுக்கு அவர் பதிலடி கொடுத்துள்ளார்.

பொதுவாகவே இணையத்தில் ரசிகர்கள் தங்களுக்குப் பிடிக்காத நடிகர் நடிகைகளை வைத்து டிரோல் செய்யும் கலாச்சாரம் பரவலாக இருந்து வருகிறது. இதில் அதிகம் பாதிக்கப்படுவது சினிமா பிரபலங்களே. சமீபத்தில் ஆபாச பட நடிகை மியா கலீபா இறந்து விட்டதாக ஒரு செய்தியை சில விஷமிகள் டிரோல் செய்து விட்டனர். இதனால் மியா கலீபாவின் ரசிகர்கள் பலரும் இரங்கல் தெரிவித்து தங்கள் துக்கத்தை வெளிப்படுத்தினர்.

இதனால் கடும் கோபத்தில் இருந்த மியா கலீபா நான் இன்னும் இறக்கவில்லை. உயிரோடு இருப்பதாகவே உணர்கிறேன் என்று புகைப்படத்தை பதிவிட்டு டிரோல் செய்தவர்களுக்கு பதிலடிக்கொடுத்திருக்கிறார். மியா கலீபாவின் முகநூலில் இவருடன் வாழ்ந்த நினைவுகளைப் பகிருங்கள் என்று எழுதப்பட்டிருந்ததால் நடந்த குழப்பம் என்று அவருடைய ரசிகர்கள் விளக்கியுள்ளனர்.



# பல்சுவை கதம்பம்



## அழகான தோற்றம் பெற கரட் சாப்பிடுங்க..!

நாம் சாப்பிட்ட பின் ஒரு கரட்டை மென்று சாப்பிட்டால் கெடுதல் விளைவிக்கக்குடிய கிருமிகள் அழிந்துவிடும்.

கரட்சாறுடன் பசலைக்கீரை சாறும், எலுமிச்சை சாறும் கலந்து குடித்தால் மலச்சிக்கல் நீங்கும். மேலும் கரட் சூப் வயிற்றுப்போக்கை குணப்படுத்தும்.

கரட்டை மென்று தின்ன வாய்நாற்றம் தீரும்.

கரட்டை அரைத்து அரைவேக்காடு முட்டையுடம், தேனும் கலந்து உண்டால் ஆண்மை சக்தி பேருகும்.

புற்றுநோய், எலும்புருக்கி, சிறுநீர்ப்பாதையில் அடைப்பு உள்ளவர்கள் கரட்சாறுடன் பாலும்தேனும் கலந்து குடித்தால் நல்ல பலன் கிடைக்கும்.

பழங்கள் மற்றும் காய்கறிகள் சாப்பிடுவதால் உடல் ஆரோக்கியம் அடைவதுடன் உடல் பொலிவடையும் என சமீபத்தில் நடத்தப்பட்ட ஆய்வொன்றின் மூலம் தெரியவந்துள்ளது.

பழங்கள், காய்கறிகள் அதிலும் கரட் மற்றும் பிளம்ஸ் சாப்பிட்டு வந்தால் ஆண், பெண் என்ற பாகுபாடின்றி அனைவரின் மேனியும் பொலிவு ஏற்பட்டு பளபளக்கும்.

குறிப்பாக உடல் எடை ஆரோக்கியமாவதுடன், முன்புபோல் இல்லாமல் அதிக வசீகரத்துடன் காணப்படுவார்கள்.

வெறும் 2 மாதங்கள் மட்டுமே பழங்கள், காய்கறிகளை அதிகம் உட்கொண்டால் இதன் பிரதிபலனை உடனே உணர முடியும்.

## வீட்டிலேயே உருளைக்கிழங்கு சிப்ஸ் செய்வது எப்படி?

**தேவையான பொருட்கள் :**

**உருளைக்கிழங்கு - 1/2 கிலோ**
**உப்பு - 1/2 டீஸ்பூன்**
**தனி மிளகாய்த்தூள் - 1/2 டீஸ்பூன்**
**எண்ணெய் - 150 கிராம்**

**செய்முறை :**

உருளைக்கிழங்கை நன்றாக கழுவி அதனை மெல்லியதாக சீவி வைத்துக் கொள்ளவும்.

ஒரு கப்பில் தேவைக்கேற்ப உப்பு, மிளகாய்த் தூள் ஆகியவற்றைக் கலந்து தனியாக வைத்து கொள்ளவும்.

வாணலியை அடுப்பில் வைத்து எண்ணெயை ஊற்றி சூடானதும் அதில் சீவிய உருளைக்கிழங்கைப் போட்டு பொரித்து எடுக்கவும்.


பொரித்த உருளைக்கிழங்கு சிப்ஸை ஒரு பாத்திரத்தில் போட்டு அதன் மேல் மிளகாய் தூள் கலவையைத் தூவி எல்லா சிப்ஸிலும் நன்றாகப் படும்படி குலுக்கி வைக்கவும்.

இதோ சுவையான மொறு மொறு சிப்ஸ் ரெடி!!! காற்று புகாத டப்பாவில் போட்டு 1 வாரம் வரை பயன்படுத்தலாம்.

**குறிப்பு :**

**உருளைக்கிழங்கை சீவி நீண்ட நேரம் வைக்கால் நிறம் மாறி போகும், ஆகவே சீவியதும் அதனை ஒரு துணி மேல் பரப்பி உடனே பொரித்து விட வேண்டும். துணி மேல் போடுவதால் உருளையில் ஈரம் இல்லாமல், நல்ல மொறு மொறுப்பாக இருக்கும்.**

**மிளகாய் தூள் பிடிக்காதவர்கள் மிளகு தூள், உப்பு சேர்த்தும் செய்யலாம்.**





## மாதுளம் பழமும், அதன் பயன்களும்

மாதுளம் பழம் சுவையில், இனிப்பாகவும் அதே சமயம் நமது உடலுக்கு எண்ணற்ற மருத்துவ குணங்கள் அடங்கிய மருந்தாகவும் பயன்படுகிறது.


மாதுளை என்பது அனைவராலும் விரும்பி உண்ணப்படும் கனியாக இருக்கிறது. இந்த மாதுளம் பழம் சுவையில், இனிப்பாகவும் அதே சமயம் நமது உடலுக்கு எண்ணற்ற மருத்துவ குணங்கள் அடங்கிய மருந்தாகவும் பயன்படுகிறது.

மாதுளையில் இனிப்பு, புளிப்பு, துவர்ப்பு ஆகிய மூன்று வகை சுவைகள் உள்ளன. இதில் இனிப்பு, புளிப்பு இரண்டு வகை மாதுளையும் சக்தியளிக்கும். மாதுளையின் பழம், பூ, பட்டை, ஆகியவை அனைத்தும் மருத்துவ குணங்கள் நிறைந்தது. உடலுக்குத் தீங்கு விளைவிக்கும் வைரஸ் கிருமிகளை மிகத் துரிதமாகவும், அதிக அளவிலும் அழித்து விடுகிறது. அதனால் நோய் நீங்கி ஆரோக்கியமும் சக்தியும் அளிப்பதில் மாதுளை சிறந்த பலனைத் தருகிறது. இனிப்பு மாதுளம் பழத்தைச் சாப்பிட்டால் இதயத்திற்கும், மூளைக்கும் மிகுதியான சக்தி கிடைக்கிறது. பித்தத்தைப் போக்குகிறது. இருமலை நிறுத்துகிறது.

மாதுளை ஜூஸை தொடர்ந்து 40 நாட்கள் அருந்தி வந்தால் பெண்களின் மாதவிடாய் பிரச்சினை நீங்கும். நினைவாற்றல் பெருகும். இது மட்டுமல்ல.. ரத்தத்தில் உள்ள ஹீமோகுளோபின் அளவு அதிகரித்து, உடல் ஆரோக்கியமாக இருக்கும்.

இதய நோய்கள், இதய பலவீனம் நிவர்த்தியாகும். ரத்தவிருத்தி ஏற்படும். சீதபேதிக்குச் சிறந்த நிவாரணம் அளிக்கிறது. நோயின் பாதிப்பால் பலவீனம் அடைந்தவர்கள் மாதுளம் பழத்தைச் சாப்பிட்டால் உடல் நலம் தேறும். உடல் எடை கூடும். தொண்டை, மார்பகங்கள், நுரையீரல், குடலுக்கு அதிகமான வலிமையை உண்டாக்குகிறது.

## உடலில் நீர்ச்சத்து அதிக அளவில் குறைவதை தடுக்கும் இளநீர் !!



இளநீரில் உடலுக்கு தேவையான பி காம்ப்ளக்ஸ் விட்டமின்களான ரிபோஃப்ளேவின், நியாசின், தையமின், பைரிடாக்சைன் மற்றும் ஃபோலேட் ஆகியவை இயற்கையிலேயே கிடைக்கிறது.

வயிற்றுக் போக்கு பிரச்சனை இருக்கும்போது உடலில் நீர்சத்து அதிக அளவில் குறைவதால் இழந்த நீர்சத்தை திரும்ப பெற இளநீர் அருந்துவது மிகவும் நல்லது.

இளநீரில் குறைந்த அளவே கொழுப்பு இருப்பதால் மற்றும் இளநீரை பருகும்போது வயிறும் நிறைந்து போவதால், தேவையற்ற உணவுகளை சாப்பிட முடியாமல் உடல் எடை குறைய உதவுகிறது.

இளநீரில் சர்க்கரை நோயாளிகளுக்கு தேவையான ஊட்டச்சத்துக்கள் இருப்பதாலும், இரத்தத்தில் உள்ள சர்க்கரையின் அளவை கட்டுப்பாட்டில் வைக்க உதவுவதாலும், நீரிழவு நோய் உள்ளவர்கள் இளநீர் பருகுவது மிகவும் நல்லது.

விஷ காய்ச்சல் மற்றும் ஹேர்ப்ஸ், இவை இரண்டுமே சில வைரஸ் கிருமிகளால் ஏற்படுகிறது. இளநீரில் ஆன்டி-பாக்டீரியல் மற்றும் நோயெதிர்ப்பு சக்தி அடங்கியிருப்பதால் வைரஸ் கிருமிகள் தாக்குதலில் இருந்து நம் உடலை பாதுகாக்கிறது.

இளநீரில் அதிக அளவு பொட்டாசியம் இருப்பதால் உயர் இரத்த அழுத்தம் மற்றும் வாதம் சம்பந்தமான நோய்களுக்கும் ல்ல மருந்தாக அமைகிறது.

பொட்டாசியம் மற்றும் மெக்னீசியம் போன்ற கனிமங்கள் இளநீரில் அதிகம் இருப்பதால் சிறுநீரகத்தில் கற்கள் உருவாவதை தடுக்கும்.

முகத்தில் ஏற்படும் பருக்கள், புள்ளிகள், சுருக்கங்கள் மற்றும் படை போன்ற இடங்களில் இளநீரை இரவில் படுக்கும் போது தடவிவிட்டு காலையில் கழுவ வேண்டும். இதனை தொடர்ச்சியாக மூன்று வாரங்கள் செய்தால் சரும பிரச்சனைகள் சரியாகும்.

## பருக்களை உடனடியாக போக்க உதவும் சில வழிகள்!

முகத்தில் சீழ் நிறைந்த பருக்கள் வருவதற்கு பல காரணங்கள் உள்ளன. அதில் சருமத்தில் அதிகளவு எண்ணெய் சுரப்பு, அதிகமான மேக்கப், தூசிகள் மற்றும் அழுக்குகளால் சருமத் துளைகள் அடைப்பது, மரபணு காரணங்கள், சருமத்தில் இறந்த செல்களின் தேக்கம் அதிகரித்தல், ஹார்மோன் மாற்றங்கள், அதிகமாக வெயிலில் சுற்றுவது போன்றவை குறிப்பிடத்தக்கவை.

ரோஸ் வாட்டர் சந்தனப் பவுடரை ரோஸ் வாட்டர் சேர்த்து பேஸ்ட் செய்து, முகத்தில் தடவி நன்கு காய்ந்த பின் கழுவ வேண்டும். இதனால் சருமத்தில் உள்ள அழுக்குகள் மற்றும் அதிகப்படியான எண்ணெய் பசை நீங்கி, பருக்களும் மறைந்துவிடும்.

தினமும் சீழ் நிறைந்த பருக்களின் மீது சிறிது தேனைத் தடவி மசாஜ் செய்து, 1 மணிநேரம் கழித்து குளிர்ந்த நீரில் கழுவ வேண்டும். இதனால் சருமத்துளைகளில் உள்ள அடைப்புக்கள் நீங்கி, சருமத்துளைகள் சுத்தமாகும்.

கற்றாழை ஜெல்லை தினமும் இரவில் படுக்கும் முன் முகத்தில் தடவி மசாஜ் செய்து, மறுநாள் காலையில் கழுவ வேண்டும். இப்படி ஒரு மாதம் தொடர்ந்து பின்பற்றினால், முகம் பருக்களின்றி பிரகாசமாக இருப்பதைக் காணலாம்.

விளக்கெண்ணெயை சிறிது வெதுவெதுப்பாக சூடேற்றி, முகத்தில் தடவி சிறிது நேரம் மசாஜ் செய்து, பின் குளிர்ந்த நீரில் கழுவ வேண்டும். ஒருவேளை விளக்கெண்ணெய் சற்று அடர்த்தியாக இருப்பது போல் இருந்தால், ஆலிவ் ஆயிலுடன் சேர்த்து கலந்து பயன்படுத்துங்கள்.

உருளைக்கிழங்கை வட்ட துண்டுகளாக்கி, ஃப்ரிட்ஜில் சிறிது நேரம் வைத்து, பின் அதை எடுத்து முகத்தை மசாஜ் செய்து, சிறிது நேரம் கழித்துக் கழுவ வேண்டும். இல்லாவிட்டால், உருளைக்கிழங்கு சாற்றினை முகத்தில் தடவி நன்கு காய்ந்த பின் கழுவ வேண்டும். இப்படி செய்வதன் மூலமும் பருக்கள் நீங்கி, முகம் அழகாக இருக்கும்.

வெந்தயக் கீரையை சிறிது எடுத்து அரைத்து, அத்துடன் தயிரை சிறிது சேர்த்து கலந்து, முகத்தில் தடவி நன்கு காய்ந்த பின் குளிர்ந்த நீரில் கழுவ வேண்டும்.

06ஆம் பக்க தொடர்ச்சி...

இந்தக் காலப்பகுதியில் இலங்கை அமெரிக்க உளவுப்பிரிவான சீ.ஐ.ஏ (Central Intelligence Agency). பிரித்தானிய உளவுப் பிரிவான ஆஐ5 (Military Intelligence, Section 5). பாகிஸ்தானின் உளவுஸ்தாபனமான ISI (Inter-Services Intelligence) மற்றும் இஸ்ரேலிய உளவுப் பிரிவான மொசாட் (Mossad) ஆகியவற்றின் தயவை நாடியிருந்தது. அவை "பயங்கரவாத எதிர்ப்பு"க்கான உதவி என்கிற பேரில் இலங்கைக்கு நேரடியாகவும் மறைமுகமாகவும் உதவின. ஆனால் லண்டனிலும். பிரித்தானியாவிலும் தமிழ் சமூகத்தின் பரப்புரை செல்வாக்கு பெற்றிந்ததன் காரணமாக அந்த உதவிகள் மட்டுப்படுத்தபட்டிருந்தன.

**மொசாட்டின் மோசடி**

இவற்றில் மொசாட்டின் பணி மிகப் பெரியது. "By way of Deception" (ஏமாற்றுவதன் மூலம்) என்கிற நூல் 1990இல் வெளியானது. 1990இல் உலகில் அதிக விற்பனையான நூலாக அந்த ஆண்டு அறிவிக்கப்பட்ட நூல் அது. இதை எழுதிய விக்டர் ஒஸ்ட்ரோவ்ஸ்கி இஸ்ரேலின் மொசாட் உளவு நிறுவனத்தில் உளவாளியாக பணிபுரிந்த கனேடியர். அந்த நூல் உலகளவில் அதிர்ச்சியையும் ஆச்சரியத்தையும் ஏற்படுத்திய நூல். 2004 இல் வெளியாகி உலகைக் கலக்கிய "ஒரு பொருளாதார அடியாளின் ஒப்புதல் வாக்குமூலம்" (Confessions of an Economic Hit Man) நூலும் ஏகாதிபத்தியத்தின் சதி ஏஜென்டாக பணியாற்றிய 'ஜோன் பெர்க்கின்ஸ்' எழுதி ஒரு தசாப்தமாக தமிழுலும் பிரபலமாக பேசப்படுவதுப்படுவது தான். ஆனால் விக்டர் ஒஸ்ட்ரோவ்ஸ்கி சொல்லும் கதை நேரடியாக இலங்கையுடன் தொடர்புபட்டது. அந்த நூலில் இலங்கை பற்றி வெளிவந்த பகுதியின் மொழிபெயர்ப்பை சரிநிகர் பத்திரிகை 1991இல் வெளியிட்டிருந்தது. ஒஸ்ட்ரோவ்ஸ்கி ஆரம்பத்தில் இரகசிய கொலைகளை செய்வதற்கு நியமிக்கப்பட்டபோதும் அதனை மறுத்து பின்னர் மொசாட்டின் பயிற்சியாளராகவும், களநிலை உத்தியோகத்தராகவும் 1982-1986 காலப்பகுதியில் பணியாற்றியாவர். ஆனால் 1986இல் மொசாட்டின் பணிகளை வெறுத்து வெளியேறி தப்பித்து வாழ்ந்தவர்.

அதில் பணியாற்றிய காலத்தில் இலங்கை அரசாங்கத்தை தம் வழிக்குக் கொணர செய்த பின்புலச் சதிகள். பின்னர் தமிழ் இயக்கங்களுக்கு பயிற்சியளித்த அதே இஸ்ரேல் இராணுவத் தளத்தில் (Kfar Sirkin) இலங்கைப் படையினருக்கும் அதே விதமான பயிற்சிகள் வழங்கப்பட்ட விதம். ஆளையாள் தெரியாதபடி பயிற்சிபெற்ற அவர்கள் நேரடியாக பரஸ்பரம் மோதிச் சாவதற்கான பயற்சி அளிக்கப்பட்ட அந்த களம் குறித்தெல்லாம் அந்த நூலில் விலாவாரியாக விளக்குகிறார். தமிழ் இளைஞர்களை கொமாண்டோ பயிற்சிக்காக அனுப்பிவைத்த இந்திய றோ (Research and Analysis Wing) உளவு நிறுவனத்திற்கோ அல்லது தமது இராணுவத்துக்கு கொமாண்டோ பயிற்சியளிப்பதற்காக அனுப்பிய இலங்கை அரசாங்கத்துக்கோ கூட இந்த விபரங்கள் எதுவும் தெரிந்திருக்கவில்லை.

இராணுவப் பயிற்சி மட்டுமன்றி. இலங்கையில் போர்பயிற்சி. போர்த் தளபாடங்களை விற்பது என பல பணிகளுக்கும் இலங்கை அரசாங்கத்திடமிருந்து பணத்தைக் கறப்பதற்காக ஜே.ஆருக்கு வழங்கிய குறுக்கு வழி ஆலோசனையும் இங்கு முக்கியமானது. அதாவது உலகவங்கி, சர்வதேச நாணய நிதியம் போன்றவற்றிடம் மகாவலி அபிவிருத்தித் திட்டத்திற்கென பெற்ற கடன்களையும் உதவிகளையும் பெற்று அவர்களுக்கு கள்ள கணக்கு காட்டுவது, உத்தேச செலவை விட குறைந்த செலவில் முடிப்பதற்கான இஸ்ரேலிய திட்டம், இஸ்ரேலிய நிபுணர் வரவழைப்பு என அத்தனையும் புட்டுபுட்டு வைக்கிறார். அதுமட்டுமன்றி இலங்கையில் நுழையுமுன்னர் ஜனாதிபதி ஜே.ஆரின் மருமகளை திட்டமிட்டு நட்புகொள்வது தொடங்கி தமது வேலை கச்சிதமாக முடிக்கும் வரை அந்த நூலில் தகவல்களை வெளியிட்டிருக்கிறார். ஜே.ஆரின் ஏற்பாட்டில் மாதுறு ஓயா பகுதியில் இருந்த முகாமில் மொசாட்டைச் சேர்ந்த 50 பேர் இலங்கை இராணுவத்தினருக்கு பகிரங்கமாக பயிற்சியளித்தார்கள். பிற்காலத்தில் ஏராளமான தகவல்கள் இது குறித்து வெளியாகியிருக்கின்றன. இலங்கையின் மீது இந்திய-அமெரிக்க இராஜதந்திர பலப்பரீட்சை தமிழ் மக்களின் அரசியல் நிகழ்ச்சிநிரலில் நேரடிப்பாதிப்பைஏற்படுத்தியது. அதுமட்டுமன்றி இலங்கையின் மீது புறச் சக்திகளின் தலையீடு பிரச்சினையின் மையத்திலிருந்து வேறு திசைக்கு இழுத்துச் சென்றது. அந்தப் புறச்சக்திகளின் ஆடுகளமாக இலங்கையும் இலங்கையின் உள்நாட்டுப் பிரச்சினையும் ஆனது. தமிழ் மக்களின் தலைவிதி மட்டுமல்ல இலங்கையின் ஒட்டுமொத்த தலைவிதியும் இலங்கைக்கு வெளியில் தீர்மானிக்கப்படுகின்ற நிலை தலைதூக்கியது. அடுத்த மூன்று தசாப்தங்களுக்கும் இனப்பிரச்சினையின் திசைவழியை அவர்கள் தான் தீர்மானிக்கப் போகிறார்கள் என்பதை தமிழர் தரப்பும் எதிர்பார்க்கவில்லை. சிங்களத் தரப்பும் கணிக்கவில்லை.

07 ஆம் பக்க தொடர்ச்சி...

தமிழ்மக்களது உரிமைப்போராட்டம் இராணுவ பலத்தின் மூலம் பல்வேறு சந்தர்ப்பங்களில் எதிர்கொள்ளப்பட்டது. சாத்வீகப் போராட்டங்கள் இராணுவ ஒடுக்குமுறையாலும் இனப்படுகொலைகளாலும் சிங்கள ஆட்சியாளர்களால் அடக்கப்பட்டன. இந்த நிலையில் இராணுவ ஒடுக்கு முறைகளையும், இனப்படுகொலைகளையும் எதிர்கொள்ளவே இளைஞர்கள் ஆயுதம் தாங்கினார்கள். இதனால் தமிழ்மக்களது உரிமைப் போராட்டங்கள் தேசிய விடுதலைப் போராட்டமாகப் பரிணமிக்கலாயின.

இந்த நிலையில் சிங்கள பௌத்த பேரினவாதம் இனப் படுகொலைகளைத் தீவிரப்படுத்தலாயிற்று. மறுபக்கத்தில் தமிழ்த் தேசிய விடுதலைப்போராட்டம் தமிழர் தாயகத்தை விடுவிக்கவும் அவர்களது உயிர். உடமைகளைப் பாதுகாக்கவும் விரிவாக்கம் பெற்றபோது அதுவொரு மக்கள் போராட்டமாக விரிவடையலாயிற்று. இந்தக் கட்டத்தில் விடுதலைப்புலிகளுக்கு அரசியல், இராணுவ பரிமாணங்களில் போராட்டத்தை முன்னெடுக்கவேண்டிய தேவை. நிலைமை ஏற்பட்டது. அதனால் விடுதலைப்புலிகள் ஒரு விடுதலை இராணுவமாகவும் அதேவேளையில் தமிழ்த்தேசியப் பாதுகாப்புப் படையாகவும் பல்வேறு தளங்களில் செயற்படலாயினர்.



# கஜேந்திரகுமார் பொன்னம்பலமும் தமிழ் தேசியத்தின் போலி முகத்திரையும்

**பணத்தை கொடுத்தேனும் 30 திகதி போராடத்திற்கு ஆட்களை வரவழைக்குமாறு கோத்தாவின் அதிரடி உத்தரவை ஏற்றுக்கொண்ட கஜேந்திரகுமார் எம்.பி 13 ஆம் திருத்த நிராகரிப்பு என்கின்ற கோத்தாவின் விருப்பை நிறைவேற்ற புறப்பட்ட கஜேந்திரகுமார் தரப்பிற்கு தமிழ்மக்களிடம் எதிர்ப்பு அதிகரித்துள்ள நிலையில் ஒரு நாள் தமிழ்மக்கள் வரவேண்டும் என்றால் பணத்தை கொடுத்து என்றாலும் தமிழ்மக்களை அழைக்குமாறு கோத்தபாயனின் உத்தரவை ஏற்றுக்கொண்டு புலம்பெயர்தேசத்தில் உள்ள கோத்தாவின் நண்பர்களிடம் கஜேந்திரகுமார் கையேந்துகின்ற நிலையில் உள்ளார்.**

**ஈழத்தமிழ்மக்களுக்கு உங்களின் சொந்தநிதியில் உதவிகள் செய்யமுடியாதா என்ற கேள்விக்கு தனது வட்டாரங்களிடம் கருத்து தெரிவித்த கஜேந்திரகுமார் எனது சொத்துக்கள் எல்லாமே எனது தாயிடமே உள்ளது என்றும் ஒரு நேர சாப்பாட்டு காசும் அம்மாவிடம் கேட்டுத்தான் நான் பெற்றுக்கொள்வேன் என்றும் கூறியதாக தகவல் அறிந்த வட்டாரங்கள் கூறுகின்றன. சொந்த செலவிற்கான பணத்தையே தாயிடம் இருந்து பெறும் ஆளுமையற்ற இந்த கஜேந்திரகுமாரா ஈழத்தமிழ்மக்களின் இன்னலை தீர்ப்பார் என்று படித்த மக்கள் முனகுவதாகவும் செய்திகள் அறிந்தவர்கள் கூறுகின்றார்கள்.**

**இலங்கை இந்திய ஒப்பந்த ஏற்பாட்டின்போது தமிழ்மக்களுக்கு அரசியல் ரீதியான பிரச்சனை இருக்கின்றது என்று சர்வதேசமும் இந்தியாவும் ஏற்றுக்கொண்டே 13 ஆம் திருத்த சட்டத்தை கொண்டுவந்தது.**

**இந்த 13 வது திருத்தச்சட்டம் இலங்கையின் அரசியல்யாப்பில் உள்ளவரை ஈழத்தமிழர்களுக்கு இலங்கையில் அரசியல் ரீதியான பிரச்சனை உண்டு என்பதே சர்வதேசத்தின் தீர்ப்பாகும் .ஆகவே இந்த 13 வது திருத்தத்தை தமிழ்மக்களும் எதிர்க்கின்றார்கள் என்று நிருபிக்கவேண்டிய தேவை சிங்கள அரசிற்கு உண்டு .அவ்வாறு நிருபித்தால் மட்டுமே இலங்கையில் அரசியல் ரீதியான பிரச்சனை தமிழ்மக்களுக்கு இல்லை என்றும் பொருளியல் ரீதியான பிரச்சனை மட்டுமே உண்டு என்றும் கோத்தபாயனும் மிலிந்தகொடவும் சம்பிக்கவும் கூறிய கருத்துக்கள் சர்வதேச மட்டத்தில் வலிமையடையும். சிங்கள மக்கள் ஏற்கனவே 13வது திருத்தத்தை ஏற்கவில்லை என்பது வெளிப்படையாக உள்ளபோது தமிழ்மக்களும் 13வது திருத்தத்தை நிராகரிக்கின்றார்கள் என்று காட்டுவதற்கு கோத்தபாயன் வீசிய அனுகுண்டை எடுத்துக்கொண்ட கஜேந்திரகுமார் தன்னிடம் உள்ளது தமிழ்மக்களுக்கான சமஷ்டி என்கின்ற போலி முத்திரையுடன் 13வது திருத்தத்தை நிராகரி என்று கூக்குரலிட்டு கோத்தபாயவின் கட்டளையை தலையில் சுமந்து செல்வதாக தகவல் அறிந்தவர்கள் கூறுகின்றார்கள்.**

**-ஊர்க்குருவி-**

## எண்ணம் போல் வாழ்க்கை என்றால் என்ன?

முன்னோர்களுடைய அனுபவங்களில் வந்த சிறந்த பொன் மொழிகளில் ஒன்று எண்ணம் போல் வாழ்க்கை. நம் எண்ண அலைகளுக்குப் பலம் உண்டு. எதைப் பற்றி அதிகம் நினைக்கிறோமோ அது தொடர்பான நிகழ்வுகளை. மனிதர்களைச் சந்திக்க வேண்டியது இருக்கும். நம் எண்ண அலைகளுக்கு ஏற்பச் சம்பவங்களும் தொடர்ந்து கொண்டு இருக்கும்.

**எதிர்மறை எண்ணங்கள்**

'எல்லாமே தவறாக நடக்கிறது, பிரச்சனை மேல பிரச்சனை' என்று சிலர் தொடர்ச்சியாகப் புலம்பிக்கொண்டே இருப்பார்கள்.
இயல்பாக நடக்கும் சம்பவங்களைத் தங்கள் பிரச்சனையுடன் தொடர்புபடுத்திக் கொள்வார்கள்.
இவர்களால் என்றுமே நிம்மதியாக இருக்க முடியாது. இருக்க முடியாது என்று கூறுவதை விட நிம்மதியாக இருக்கவே முனைய மாட்டார்கள்.
தங்களுக்குப் பிரச்சனை தொடர்ந்து கொண்டே இருப்பதாகத் தேவையற்ற கற்பனை செய்து கொள்வார்கள்.
எண்ணங்கள் தவறாக இருந்தால் செயல்களும். சம்பவங்களும் தவறாகவே நடக்கும்.

**நேர்மறை எண்ணங்கள்**

நேர்மறை எண்ணங்களைக் கொண்டவர்கள் எதையுமே பிரச்சனையாகக் கருத மாட்டார்கள். நடக்கும் சம்பவங்களைக் கடந்து சென்று விடுவார்கள்.
அடுத்தவர் விமர்சனங்களைப் பற்றிக் கவலைப்பட மாட்டார்கள்.
எந்தப்பிரச்சனை நடந்தாலும், எளிதாக எடுத்துக்கொள்வார்கள். யாரையும் வன்மமாக நினைக்க மாட்டார்கள்.
எந்த நிகழ்வுக்கும் பதட்டமாக மாட்டார்கள். ஒருவேளை கோபம். பதட்டம் இருந்தாலும். அதை ஏற்றுக்கொண்டு அடுத்ததுக்கு உடனே நகர்ந்து விடுவார்கள்.
வரும் பிரச்சனைகள் தானாகவே பனி போல விலகி விடும்.

**எண்ண அலைகள்** : - மேற்கூறிய இரண்டுமே தனிப்பட்ட நபரின் குணங்கள். ஆனால். எண்ணங்கள் வேறு. எண்ண அலைகளுக்கு எப்போதுமே பலம் அதிகம். நம் எண்ண அலைகள் எதிரில் உள்ளவரின் மனநிலையை மாற்றும் திறன் கொண்டது. எதிர்மறையான சிந்தனைகள் கொண்டு இருந்தால் தவறாகவும். நேர்மறை சிந்தனைகள் கொண்டு இருந்தால். சரியாகவும் நடக்கும். தவறாகவே யோசித்துக்கொண்டு இருந்தால். கெட்டதே நடக்கும். நல்லதையே நினைத்தால். நல்லதே நடக்கும். இதையே 'என்ன நினைக்கிறாயோ அதுவாகவே ஆகிறாய்' என்கிறார் புத்தர் நல்லதையே எப்போதும் நினைத்தால், பிரச்சனை செய்ய நினைப்பவர்களின் மனது கூட நம்மிடம் வரும் போது மாறி விடும். மேற்கூறியது 100% உண்மை. நேர்மறையான எண்ணங்களை. பதட்டம். கோபம் இல்லாத நிலையைத் தொடர ஆரம்பித்தது முதல் எனக்கு நல்லதே நடக்கிறது. யாரையுமே எதிரியாக நினைக்கத் தோன்றுவதில்லை. அனைவரும் நட்பாக. அன்பாகப் பழகுகிறார்கள். குறைந்தபட்சம் பிரச்சனை செய்வதில்லை. எனவே. நல்ல எண்ண அலைகளின் முக்கியத்துவத்தை முழுமையாக உணர்கிறேன். நம்புகிறேன். முன்னோர்கள் கூறியது முற்றிலும் சரி. 'இதுவும் கடந்து போகும்' என்பது எவ்வளவு உண்மையோ அதே அளவு உண்மை 'எண்ணம் போல் வாழ்க்கை'. எனவே. நல்ல எண்ணங்களை வளர்த்துக்கொள்ளுங்கள். நல்லதையே பெறுங்கள்.

# மூக்கடைப்பு நோய்(சைனஸ்)



வைத்தியர் கோ.பிரியா
BSMS, MSc (Yoga Therapy, Varma & Herbal Science)
ஆதி அகத்தியர் சித்த வைத்தியசாலை
அஸ்தம்பட்டி
சேலம்
தமிழ்நாடு.



நேர்காணல் - பைஷல் இஸ்மாயில்

**மூக்கடைப்பு நோய் (சைனஸ்) பிரச்சனை என்றால் என்ன?**

மூக்கைச் சுற்றி நான்கு ஜோடி காற்றுப் பைகள் உள்ளது. இதற்கு மூக்கடைப்பு, சைனஸ், பீனிசம், நீர்க்கோவை, மூக்கு நீர் பாய்தல், சளி என பல பெயர்களில் அழைக்கப்படுகின்றது. நாம் சுவாசிக்கும் காற்றை தேவையானளவு வெப்பத்தில் நுரையீரலுக்குள் அனுப்பும் முக்கியமான வேலையை இந்த சைனஸ் காற்றுப் பைகள் செய்கின்றன. அதாவது "மியூகஸ் மெம்பரேன்" எனும் சளிச் சவ்வு மூக்கினுள் இருக்கின்றது. இது சைனஸ் திரவத்தை ஈரப்படுத்திக்கொண்டே இருக்கும். இதன் ஊடாக வெளிக்காற்று வெப்பத்துடன் நுழைந்தாலும்,அதை தேவையான அளவு வெப்பத்தில் ஈரப்படுத்தி நுரையீரலுக்குள் அனுப்பிவிடும். இந்த சைனஸ் அறைகளின் திரவ வடிகால்கள் அடைபட்டு அங்கு திரவம் தேங்கும்போது மூக்கடைப்பு நோய் சைனஸ் (Sinusitis) பிரச்சினை ஏற்படுகிறது.

இன்று ஏராளமானோருக்கு சளி (சைனஸ்) பிரச்சனை உள்ளது. இப்பிரச்சனையால் ஏராளமான மக்கள் ஒவ்வொரு வருடமும் பாதிக்கப்பட்டு வருகிறனர். ஆனால் பலருக்கும் இருப்பது சளி என்று சரியாகத் தெரிவதில்லை. பொதுவாக சளிப் பிரச்சனையை, சாதாரண சளி என்று சரியாக கவனிக்காமல் விட்டுவிடுவார்கள். இதனால் சளி சுரப்பி அல்லது சுவாசப் பாதையில் அழற்சி மற்றும் வீக்கமடைந்து சுவாசிப்பதில் சிக்கல் நிலையும் ஏற்பட்டுவிடும். மேலும், உடல் ஆரோக்கியம் பெருமளவில் பாதிப்பிற்குள்ளாகுவதுடன், சில சமயங்களில் காது கேட்கும்திறன், பார்வைப் பிரச்சனைகள் போன்றவற்றை சந்திக்கவும் நேரிடலாம்.

ஒருவருக்கு சாதாரண சளி என்றால் ஒரு வாரத்தில் குணமாகிவிடும். ஒரு வாரம் கடந்தும் சளி சரியாகாவிட்டால், அவர்களுக்கு சைனஸ் சுரப்பியில் அழற்சி ஏற்பட்டிருக்க வாய்ப்புள்ளது என்பதை நாம் அறிந்திருப்பது மிக அவசியமாகும்.

**அதன் அறிகுறிகள் என்ன?**

அடிக்கடி தும்மல், மூக்கு ஒழுகுதல், மூக்கடைப்பு, தலைவலி போன்றவை சைனஸ் பாதிப்பின் பொதுவான அறிகுறிகளாகும். கண்ணுக்குக் கீழே, கன்னம், முன்நெற்றி ஆகிய இடங்களைத் தொட்டால் வலி ஏற்படுதல், தலையைக் குனிந்தால் தலைப்பாரம் அதிகரிக்கும், காய்ச்சல், தொண்டையில் சளி கட்டல், இரவு நேரங்களில் கடுமையான இருமல், உடற்சோர்வு, மஞ்சள் அல்லது பச்சை நிறத்தில் கட்டியான மூக்குச் சளி வெளியேறல், சளியில் துர்நாற்றம் வீசும், வாசனை தெரியாது, ருசியை உணர முடியாது, வாய் துர்நாற்றம், காது அடைப்பு, பல் வலி போன்ற அறிகுறிகள் தோன்றும்.

**இவைபற்றி தெளிவாக குறிப்பிட முடியுமா?**

**முகத்தில் வலி** - ஒருவருக்கு சைனஸ் பிரச்சனை இருந்தால் முகத்தில் வலியை சந்திக்க நேரிடும். அதுவும் மூக்கைச் சுற்றியுள்ள பகுதியில்தான் வலியை அனுபவிக்கக்கூடும். அத்தோடு மேல் தாடை மற்றும் தாடைகள் இணையும் பகுதிகளிலும் வலியை சந்திக்க நேரிடும். தேவையில்லாத அழுத்தம் அல்லது பாரம் முகத்தில் கொடுப்பது போன்ற உணர்வு எழும். ஒருவேளை சளி பிரச்சனைகளுக்கு மருந்து எடுத்தாலும் இந்த வலியில் இருந்து விடுபட முடியாது. இன்னும்சிலசமயங்களில் தலையை திருப்பினால் கூட வலி மற்றும் அழுத்தத்தை அனுபவிக்கக்கூடும்.

**மஞ்சள் நிற சளி வெளியேற்றம்** - சாதாரண சளி பிடித்திருந்தால் மூக்கிலிருந்து நிறமற்ற சளி வெளியேறும். அதுவே சைனஸ் பிரச்சனையாக இருப்பின் மூக்கில் இருந்து சளி மஞ்சள் நிறத்திலோ அல்லது பச்சை நிறத்திலேயோ வெளியேறும். இதேபோன்று வாயின் வழியாகவும் சளி வெளியேறும். இதற்குக் காரணம் சைனஸ் வைரஸாகும். சுவாசிக்கும் போது நாசித் துளைகளில் சற்று வலியையும் சந்திக்கக்கூடும்.

**கடுமையான இருமல்** - நீண்ட நேரம் கடுமையாக இருமல் இருந்தால் சைனஸ் தொற்று ஏற்பட்டுள்ளது என்று அர்த்தம். குறிப்பாக இரவு நேரத்தில் இருமல் வருவதோடு, தூங்கும் நிலையும் பாதிக்கும். அதுவும் ஒருவர் மல்லாக்க படுக்கும்போது நாசித்துளையில் உள்ள சளி அப்படியே மீண்டும் தொண்டைக்கு சென்றுவிடும். இதனால் இரவு நேரத்தில் கடுமையான வறட்டு இருமலை சந்திக்க நேரிடுகிறது. இம்மாதிரியான நிலையில் தலையை சற்று உயரமாக வைத்துக் கொண்டு ஒரு பக்கமாக தூங்கவேண்டும்.

**வாய் துர்நாற்றம்** - ஒருவருக்கு சைனஸ் தொற்றுக்கள் இருந்தால் அவரது வாய் கடுமையான துர்நாற்றத்துடன் இருக்கும். பொதுவாக வாய் துர்நாற்றத்திற்கான பாக்டீரியாக்கள் உள்நாகில் வளர்ச்சி பெறுகிறது. இதனால் வாயினுள் துர்நாற்றம் வீசுகிறது. சைனஸ் இருக்கும் போது மூக்கைச்சுற்றிபாக்டீரியாக்கள்நிறைந்தசளி தேங்குவதால் கடுமையான துர்நாற்றத்தை உண்டாக்குகிறது. இதற்கு என்னதான் வாயை சுத்தமாக வைத்துக்கொள்ள பற்களைத் துலக்கினாலும் அந்தத் துர்நாற்றம் நீங்காது.

**காது அடைப்பு** - காதுகளுக்கும், சைனஸ் பிரச்சனைக்கும் தொடர்புள்ளது. சைனஸ் பிரச்சனை உள்ளவர்களுக்கு காதுப் பிரச்சனைகள் வரும் அபாயம் அதிகரிக்கும். அதுவும் காது மடல் இருந்து வலி ஆரம்பித்து, பின் காதுகளுக்குள் வலி தீவிரமாகத் தொடங்கும்.

**பல் வலி** - சைனஸ் பிரச்சனைக்கும், பல் வலிக்கும் என்ன சம்பந்தம் உள்ளது என்று நீங்கள் கேட்கலாம். ஆனால் சைனஸ் இருந்தால், அடிக்கடி பல் வலியை சந்திக்கக்கூடும். சைனஸ் சுரப்பியில் அதிக அழுத்தம் ஏற்படும்போது, தாடையின் மேல் பகுதியில் அதிக அழுத்தம் கொடுக்கப்படும். இதனாலேயே பல் வலி ஏற்படக் காரணமாக அமைகின்றது. இவ்வாறான நிலைமைகள் ஏற்பட்டால், வைத்தியரைச் சந்தித்து அதற்கான மருத்துவ ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்வதன் மூலம் சைனஸினால் ஏற்படும் பிரச்சினைகளில் இருந்து விடுபட முடியும்.

சைனஸ் பிரச்சனைகளில் இருந்து விடுபட ஏராளமான இயற்கை வைத்தியங்கள் உள்ளது. அவற்றில் சில எளிய இயற்கை வைத்தியங்களை நாமே செய்துகொள்ளவதன் மூலம் சைனஸ் பிரச்சனைகளில் இருந்து விடுபடலாம். அதற்கு முன்னர் சைனஸ் பற்றிய தெளிவும், அதனால் ஏற்படுகின்ற அறிகுறிகள் பற்றியும் நாம் அறிந்திருப்பது மிக மிக அவசியமாகும்.

**மூக்கடைப்பு நோய் எதனால் ஏற்படுகிறது?**

ஆரோக்கியக் குறைவு, சுற்றுச்சூழல் மாசு, ஒவ்வாமை இந்த மூன்றும்தான் சைனஸ் பிரச்சினைக்கு முக்கியக் காரணங்களாகும். குறிப்பாக பாக்டீரியா, வைரஸ், பூஞ்சைத் தொற்றுகள் மூலமாகச் சளி பிடிக்கும்போது சைனஸ் பிரச்சனை ஏற்படுகின்றது. மேலும்இ மாசடைந்த காற்றில் கலந்துவரும் தொற்றுக்கிருமிகள் சைனஸ் அறைக்குள் புகுந்துவிடும்போது, முக்கினுள் இருக்கும் "சளி சவ்வு" வீங்கி அழற்சி ஏற்படும். இதனால் அளவுக்கு அதிகமாக நிணநீர் திரவம் சுரந்து மூக்கு வழியாக வெளியேறும்.

காய்ச்சல், தூசு, புகை, வாசனைத் திரவியம் காரணமாக ஒவ்வாமை ஏற்பட்டால், மிகவும் குளிர்ச்சியான உணவுப் பொருட்களை சாப்பிட்டால்,பனியில் நடந்தால், மழையில் நீண்ட நேரம் நனைந்தால், சைனஸ் அறையில் அழற்சி அதிகரிக்கும்போதும், மூக்கில் சதை வளரும்போதும் நீர் வெளியேற முடியாதளவுக்கு மூக்கு அடைத்துக்கொள்ளும்.

**மூக்கடைப்பு நோய் ஏற்படாமலிருக்க என்ன செய்யவேண்டும்?**

சுயசுத்தம், சுற்றுப்புறச் சுகாதாரம் பேணுவதன் மூலம் கிருமித் தொற்றிலிருந்து பாதுகாத்துக்கொள்ளலாம். சமச்சீரான உணவுகளை எடுத்தல்இ காய்ச்சலை ஏற்படுத்தக்கூடிய விடயங்களில் இருந்து விடுபடல், காய்சல் உள்ளவர்களுடன் இருப்பதை தவிர்த்தல், ஒவ்வாமை உணவுப் பொருளைத் எடுக்காமல் இருத்தல், தூசு, புகைக்கு ஒவ்வாமை உள்ளவர்கள் வாகனத்தில் செல்லும்போது முகக்கவசம் அணிந்து கொள்ளல், தேவையான அளவுக்கு நீர் குடித்தல், ஐஸ், ஐஸ்கிரீம் போன்ற குளிர்ச்சியான உணவுப் பதார்த்தங்களைத் தவிர்த்தல் வேண்டும்.

மிக முக்கியமாக, குளிர்பானங்களைக் குடிக்கவே கூடாது, பனியில் அலையக் கூடாது, புகைபிடிக்கக் கூடாது, புகையுள்ள இடங்களில் வசிக்கக் கூடாது, மூக்குப்பொடி போடக் கூடாது, அசுத்தமான நீர் நிலைகளில் குளிக்கக் கூடாது, மூக்கைப் பலமாகச் சிந்தக் கூடாது, விரல்களால் அடிக்கடி மூக்கைக் குடையக் கூடாது, மூக்கடைப்பைப் போக்கும் இன்ஹேலரை அடிக்கடி பயன்படுத்துதல் போன்ற செயற்பாடுகளில் இருந்து கட்டாயமாக தவிர்ந்திருப்பது மிக முக்கியமானதாகும்.

**இதுதொடர்பில் நீங்கள் கூறும் அறிவுரைகள் என்ன?**

இந்தப் பிரச்சினைக்கு ஒவ்வாமைதான் மிக முக்கிய காரணியாக இருப்பதால், ஒவ்வாமையை ஏற்படுத்தும் விடயங்களில் இருந்து தவிர்ந்து நடத்தல் வேண்டும். சைனஸ் பாதிப்பு ஏற்பட்டால் கொதிக்க வைத்த சுடுநீரில் ஒரு துணியை நனைத்து அதிகப்படியான நீரைப் பிழிந்து அந்தத் துணியால் நெற்றி, மூக்கு, கண்கள் போன்ற இடங்களில் ஒத்தடம் கொடுக்கவேண்டும். இவ்வாறு 15 நிமிடத்திற்கு ஒருமுறை என ஒரு நாளைக்கு மூன்று தடவை செய்தால், மூக்கு பகுதியில் இரத்த ஓட்டம் அதிகரித்து சைனஸ் சுரப்பியில் உள்ள அடைப்புக்கள் திறக்கப்படும்.

நன்கு கொதிக்க வைத்த நீருடன் சிறிது வேப்பிலை அல்லது வெந்தயத்தைப் போட்டு ஆவி பிடிக்கவும். இவ்வாறு செய்வதன் மூலம் சைனஸால் ஏற்படும் தலைவலி, மூக்கடைப்பு போன்ற பிரச்சனைகளில் இருந்து உடனடியாக விடுபடலாம். நீரில் வேப்பிலை, வெந்தயம் போன்றவற்றை சேர்ப்பதால் அதிலுள்ள அன்டி பக்றீரியா, சைனஸ் சுரப்பிகளில் உள்ள தொற்றுக்கள் போன்றவற்றை அழிக்க உதவுகின்றது. அதுமாத்தரிமல்லாமல் சளி இளகி எளிதில் வெளியே வந்துவிடும்.

வெள்ளைப் பூண்டில் அன்டி பக்றீரியல் மற்றும் பூஞ்சை எதிர்ப்புத் தன்மைகள் உள்ளது. எனவே சைனஸ் பிரச்சனை உள்ள ஒருவர் வெள்ளைப் பூண்டு பற்களை நீரிலிட்டு கொதிக்க வைத்து அந்நீரைக் குடிக்கலாம். இதனால் உடனடி நிவாரணம் கிடைக்கும். தேசி இலைகளை நீரில் போட்டு கொதிக்க வைத்து அந்நீரில் ஆவி பிடிக்க வேண்டும். இதனால் அதில் உள்ள மருத்துவப் பயன்கள் சைனஸ் சுரப்பிகளில் உள்ள தொற்றுக்களை அழித்து, சைனஸ் பிரச்சனையில் இருந்து விடுவிக்கும். தேசி இலைகளைப் போட்டு கொதிக்க வைத்த நீரால் தினமும் 2 முறை வாயைக் கொப்பளித்தாலும் சைனஸில் இருந்து விடுபடலாம்.

குறிப்பாக காலையிலும், இரவிலும் நீராவி பிடிப்பது நல்லது. இதனால் மூக்கில் உள்ள சளி இளகிச் சுலபமாக வெளியேறிவிடும். தொற்றுக் கிருமிகள் இருப்பதாகத் தெரிந்தால் வைத்தியரின் ஆலோசனைகளுக்கமைவாக தகுந்த மருந்துகளை எடுத்துக்கொள்வது சிறந்தது.

# முஸ்லீம் சமூகம் சம்பந்தமாக பாராளுமன்ற உறுப்பினர்கள் பேசலாம் ஆனால் வன்முறையை தூண்டிவிடக்கூடாது – ஹரீஸ் எம்.பி

**முஸ்லீம் காங்கிரசினுடைய பிரதித்தலைவரும், கிழக்கு மாகாண பாராளுமன்ற உறுப்பினருமாகிய ஹரீஸ் அவர்கள் தினப்புயல் பத்திரிகைக்கு வழங்கிய சிறப்பு நேர்காணல்**



**கேள்வி :- இன்றைய சமகால அரசியல் பரப்பில், தமிழ் மக்களுக்கான தீர்வு விடயங்கள், கல்முனை பிரச்சினை, கிழக்கு விவகாரங்கள் குறித்துப் பேசப்படுகின்றது. இன்றைய அரசாங்கம் பொருளாதார ரீதியாக இக்கட்டான நிலைக்குச் சென்றுள்ளது. தற்போதைய அரசின் செயற்பாடுகள் குறித்து உங்களது நிலைப்பாடு என்ன?**

பதில் :- இப்போதைய அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் கொவிட் நிலைமை காரணமாக அவர்களுடைய வழமையான மக்கள் நலனுக்குரிய திட்டங்கள் செய்ய முடியாத தேவைகளைக் கூட, மாகாண சபையைக் கூட நடாத்த முடியாத அளவிற்கு அரசாங்கம் இருக்கிறது. அரசின் சில கொள்கைத் தீர்மானங்கள் மக்களுக்குள் சர்ச்சைகளை ஏற்படுத்தியிருக்கிறது. பசளைப் பிரச்சினை, அத்தியாவசியப் பொருட்களுக்கான விலையேற்றம் அரசாங்கத்திற்கு பெரும் சவாலான விடயங்களாக மாறியிருக்கின்றது. அரசு இதனை எவ்வாறு கையாளப்போகின்றது என்பது சம்பந்தமாக தெளிவான நிலைப்பாட்டை மக்களுக்கு இன்னமும் தெளிவுபடுத்தவில்லை.

**கேள்வி :- தமிழ் – முஸ்லீம் – சிங்கள மக்கள் மத்தியில் அரசு குழப்பங்களை ஏற்படுத்தியிருக்கிறது. கலகொட ஞானசாரதேரர் அவர்கள் முஸ்லீம் மக்களின் வணக்கத்துக்குரிய அல்லாஹ்வை இழிவுபடுத்திப்பேசியிருக்கிறார். சர்ச்சையான கருத்துக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. இந்தச் சம்பவம் தொடர்பாக உங்களது கருத்து என்ன?**

பதில் :- ஆமாம். உண்மையில் அவர் கூறிய கருத்தினை நாங்கள் கண்டித்திருக்கின்றோம். இது வெறுமனே பாராளுமன்றத்திற்குள்ளும், பொலிசாரின் சட்டநடவடிக்கைகள் வெறுமனே மக்களைத் திருப்திப்படுத்துவதற்காக மாத்திரம் அமையுமே தவிர, முஸ்லீம்கள், தமிழ் மக்கள், கிறிஸ்தவ மக்களுக்கு எதிராக வன்முறையினைத் தூண்டுகின்ற பேச்சுக்களைப் பேசக்கூடாது என்பதில் கண்டிப்பாக இருக்கின்றவர்கள் நாங்கள். அந்த வகையில் யாருக்கும் நாங்கள் பயப்படாமல் யாருடைய அழுத்தத்திற்கும் அடிபணியாமல் எங்களுடைய பாராளுமன்ற உறுப்பினர்கள் கிட்டத்தட்ட ஏழு பேர் நாங்கள் பேசி முடிவெடுத்து அவரை சட்டத்தின் முன் நிறுத்தவேண்டும் என்பதற்காக இது சம்பந்தமாக எங்களுடைய நாட்டினுடைய உலமாக்கள்,

புத்திஜீவிகள், அறிஞர்களின் ஆலோசனையின் பேரில் நாங்கள் சிஐடியின் தலைமையகத்தில் பொலிஸ் தலைமையகத்தில் அவருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கவேண்டும் என்பதை முறைப்பாடு செய்திருக்கின்றோம். இது பகிரங்கமாக நடந்த விடயம். இதனை இன்று சில ஊடகங்கள் முஸ்லீம் பாராளுமன்ற உறுப்பினர்கள் இந்த விடயம் தொடர்பாக நடவடிக்கை எடுக்கவில்லை என்ற அடிப்படையில் கருத்துக்களைக் கூற முற்படுகின்றனர். அறிக்கைகள், நேர்காணல்களை விட, நாங்கள் செய்த இந்த நடவடிக்கை தான் அவரை சட்டத்தின் முன் நிறுத்துவதற்கான ஆக்கபூர்வமான நடவடிக்கையாக இருந்தது. எனினும் நாங்கள் பொலிஸ் மா அதிபரைச் சந்தித்து இந்த சம்பவத்தின் பின்னணியிலான நடவடிக்கைகளின் முன்னேற்றம் குறித்துப் பேச இருக்கின்றோம்.

**கேள்வி : பாராளுமன்றத்திலே சாணக்கியன் அவர்கள் குரல் கொடுக்க பொழுது நீங்கள் அதற்கு எதிரான ஒரு கருத்தை தெரிவித்திருந்தீர்கள். சாணக்கியன் முஸ்லிம் மக்களுக்கு குரல் கொடுத்தது பிழை என்று கூற வரவில்லை. இருந்தாலும் அவர் தமிழ் மக்களுக்கான இனப்படுகொலை சம்மந்தமான பேச்சுவார்த்தைகள் இடம்பெற்றிருக்கின்ற பொழுது ஆனால் ஒரு புறத்திலே இந்த முஸ்லிம் மக்களையும் சிங்கள மக்களையும் மூட்டிவிடுவதற்கு அரச நிகழ்ச்சி நிரலிலே சாணக்கியன் அவர்கள் இவ்வாறான கருத்தை வெளியிட்டார்என்றும்ஒருகருத்துநிழவுகின்றது. மறுபக்கத்திலே அவர் முஸ்லிம்களுக்காக குரல் கொடுத்தார் முஸ்லீம்களின் இறைவனை அவமதித்ததன் நிமித்தம் அதற்கு எதிராக செயற்பட்டார் என்று கருத்தும் முஸ்லிம் மக்களிடையே நிழவுகின்றது. நீங்கள் அதிலே ஒரு விடயத்தை குறிப்பிட்டிருந்தீர்கள் அதாவது சாணக்கியன் அவர்களை நீங்கள் தனிப்பட்ட ரீதியில் தாக்கலாம் அது வேறு விடயம் அரசியலிலும் பாராளுமன்றத்திலும் அதற்கு வெளியிலும் நிகழ்கின்றது. அதனை வந்து நீங்கள் கூறக்கூடாது என்று நீங்கள் ஒரு கருத்தை கூறியிருந்தீர்கள். வந்து எரிதார்கள் என்று நீங்கள் யாரை குறிப்பிட்டிருந்தீர்கள், தமிழர்களையா அல்லது முஸ்லிம்களையா சிங்களவர்களையா?**

பதில் : முதலாவது சாணக்கியனோ அல்லது ஏனைய பாராளுமன்ற உறுப்பினர்கள் இந்த ஞானசார தேரரின் கருத்துக்கு எதிராக பேசிய விடயத்தை அவ்வாறு பேசக்கூடாது என்று நான் எந்த காலத்திலும் கூறவில்லை. என்னுடைய பாராளுமன்ற உரையில் தெளிவாக கூறியிருக்கின்றேன். முஸ்லிம் சமூகம் சம்மந்தமாக எந்த பாராளுமன்ற உறுப்பினருக்கும் பேசுவதற்கு உரிமை இருக்கின்றது பேசக்கூடாது என்று நான் சொல்ல வரவில்லை. அதற்கான தகுதி உரிமை அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் இருக்கின்றது. அதே நேரம் நான் கண்டித்து பேசிய விடயம் என்னவென்றால் இந்த விடயத்தை பேசிவிட்டு முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் தங்களுடைய ஊர்களுக்கு வந்தால் தாக்குதல் நடத்த வேண்டும் என்று சொன்ன விடயம் பாரிய ஆபத்தான வன்முறையை தூண்டும் விடயங்கள். அந்த விடயங்களை தான் அவர் அப்படி பேசுவதற்கு அவருக்கு தகுதி இல்லை பேசக்கூடாது என்று சொல்வதற்கு எனக்கு உரிமை இருக்கின்றது.

குறிப்பாக நான் தேசிய பற்று பாராளுமன்ற உறுப்பினர் அல்ல. எனது நண்பர்களும் தேசிய பற்று பாராளுமன்ற உறுப்பினர்களாக இருக்கவில்லை. எனவே அந்த பாமர மக்களால் தெரிவு செய்யப்பட்டு தற்பொழுது தான் ஒரு வருடம் கடந்திருக்கின்றது. மக்களோடு இருக்கின்ற எங்களை அதுவும் நாங்கள் பிரத்தியேகமான தேசிய முஸ்லிம் இனம் இன்னொரு தமிழ் தேசியத்தின் ஒரு பாராளுமன்ற உறுப்பினர் எங்களது மக்களுக்கு அவர் பணிப்புரை விடுக்கின்றார் வந்தால் தாக்குங்கள் என்று. இதை மாறி நான் அல்லது எனது சக பாராளுமன்ற உறுப்பினர்களோ கஜேந்திரகுமாரையோ செல்வம் அடைக்கலநாதனையோ சாணக்கியனையோ நோக்கி தமிழ் மக்கள் கல் எரிய வேண்டும் என்று சொன்னால் இன்று தமிழ் பிரதேசங்களில் என்னுடைய கொடும்பாவிகள் எரிக்கப்பட்டுள்ளன.

ஏனென்றால் அரசியல் அந்தந்த சமூகங்கள் அந்தந்த மக்கள் பிரதிநிதிகளை நான் வெறுமனே சாதாரணமான போராளிகள் அல்ல. ஒரு 20 வருடங்கள் பாராளுமன்றத்திலே 4 முறை இராஜாங்க அமைச்சராக பிரதி அமைச்சராக மாநாகர முதல்வராக இருந்த ஒருவர். அப்படிப்பட்ட ஒரு அரசியல் முஸ்லிம் உயரிய தலைமையை கொச்சையாக செய்வதற்கு பக்குவமற்ற உரை அது. இதில் எனக்கு கவலை அவ்வாறான ஒருவரை உண்மையில் எங்களுடைய ஏனைய முஸ்லிம் தலைமை தாங்குகின்ற தலைமைகள் கண்டிக்க தவறிவிட்டது.

அவரை அந்த இடத்தில் அதற்கு பின்பாவது சாணக்கியன் அவர்கள் செய்தது பிழை என்று சொல்லி கண்டித்திருக்க வேண்டும். அதுவும் உயரிய பாராளுமன்ற சபைக்கு என்று ஒழுங்கு விதிகள் இருக்கின்றது. அதனை மீறி அவர் அந்த செயலை செய்ததை எங்களுடைய முஸ்லிம் தலைமைகளோ அல்லது தமிழ் தலைமைகளோ கண்டித்திருக்க வேண்டும். நான் பொறுத்திருந்து பார்த்தேன் யாரும் கண்டிக்காத சூழலிலே நான் பாராளுமன்ற உரையின் மூலம் சாணக்கியன் செய்தது தவறு என்று கூறினேன். அவருக்கு சபையின் ஒழுங்கு விதிகள் சபையின் மரவுகள் தெரியாது.

**கேள்வி : நீங்கள் சொன்ன விடயங்கள் அனைத்தும் சரி இதில் நான் கேட்பது என்னவென்றால் நீங்கள் வந்தேரிகள் என்று யாரை குறிப்பிட்டிருந்தீர்கள்?**

பதில் : வந்தேரிகள் என்று நான் சொன்ன விடயம் என்னவென்றால் இதில் உள்ள ஆபத்து என்னவென்றால் நான் என்னுடைய சமூகத்திற்காக பல தியாகங்களை செய்த ஒருவன். இந்த முஸ்லிம் அரசியலில் நாங்கள் சிறுவர் போராளியாக சேர்ந்தவர்கள் கொள்கைக்காக. நாங்கள் சிறுவர் போராளிகளாக தலைவர் அஷ்ரப்பின் காலத்தில் இந்த இயக்கத்தில் சேர்ந்த பொழுது அந்த கட்டத்தில் எங்களுடைய பிரதேசத்தில் முஸ்லிம் அமைச்சர்கள் பாராளுமன்றத்தில் கோலோச்சிய காலம். என்னுடைய தந்தை ஒரு வர்த்தகபிரமுகர்மற்றவர்கள்தேவைக்காகவோ எங்களுடைய தேவைக்காகவோ அல்லாது கொள்கைக்காக எப்படி தமிழ் இளைஞர்கள் விடுதலை போராட்டத்தில் இணைந்தார்களோ அதைப்போன்று இணைந்த ஒருவர்.

தயது செய்து என்னைப்போன்று சாணக்கியனை ஒப்பிடாதீர்கள். சாணக்கியன் தனது சொந்த பாட்டனாரின் அரசியல் கொள்கைளை தூக்கி எரிந்துவிட்டு ஒட்டுமொத்த வடகிழக்கு தமிழ் சமூகமும் கொள்கை ரீதியாக ஒன்று விடுதலைப்புலிகளின் அல்லது தமிழரசுக்கட்சியில் அல்லது ஈபிஆர்எல்எப் என்று செய்த பொழுது அவர் 26 27 வயதிருக்கின்ற பொழுது இந்த நாட்டில் இருக்கின்ற சிறிலங்கா சுதந்திரகட்சியின் மட்டக்களப்பு அமைப்பாளராக அல்லது பாராளுமன்ற வேட்பாளராக மாறியிருந்தார். அவர் சின்ன குழந்தை அல்ல. எனக்கு இந்த கட்சியில் சேர்கின்ற பொழுது கொள்கை தெரியாது தமிழ் மக்களுடைய போராட்ட வரலாறு தெரியாது எனது பாட்டனாரின் அரசியல் கொள்கை தெரியாது என்று அவர் சொல்ல முடியாது அவர் அவுஸ்திரேலியா சென்று படித்து கண்டியில் உயர் பாடசாலையில் படித்த நல்ல அறிவுடைய மனிதர்.

எனவே அவர் வரலாறுகள் தெரியாது பிழையான தீர்மானத்தை எடுத்ததாக சொல்ல முடியாது. அவர் அனைத்தும் தெரிந்து தான் தன்னுடைய நலன்களுக்காக தன்னுடைய ஒரு நிகழ்ச்சி நிரலிலே தான் தமிழ் மக்களினுடைய அரசியல் நிகழ்ச்சி நிரல் வேறு. சாணக்கியனுடைய நிகழ்ச்சி நிரல் என்பது உள்ளுக்குள்ளே புதைந்துகிடக்கின்றது. தமிழ் சமூகமும் முஸ்லிம் சமூகமும் வெகுவிரைவில் காண்பார்கள். அந்த நிகழ்ச்சிநிரலில்தான் அவர் ஆரம்பத்தில் சிறிலங்கா சுதந்திரக்கட்சியில் சேர்ந்து அவருடைய வர்த்தக நலன்கள் நான் அவருடைய தனிப்பட்ட வியாபாரம் வர்த்தக நலன்கள் சம்மந்தமாக காணிகள் பெற்ற விடயங்கள் பல உரிமைப்பத்திரங்கள் என்று பல விடயங்கள் வேட்பாளராக இருந்தபொழுது அவர்களிடமிருந்து இரகசியமாக பெற்றிருக்கின்றார் என்று சொல்லப்படுகின்றது. இவைகள் அனைத்தையும் பெறுவதற்காக அந்த முகாமில் இருந்தால் பாராளுமன்ற உறுப்பினராக முடியாது தலைவராக முடியாது ஒரு தமிழின தலைவராக முடியாது ஏன் தற்பொழுது முஸ்லிம்களுக்கு தலைவராக வேண்டும் என்ற ஒரு பேராசையும் இருக்கின்றது. இப்படியொரு நிகழ்ச்சி நிரலுக்காக தமிழ் தேசிய கூட்டமைப்பில் வந்து பேசினார். அது அவருடைய விடயம் ஆனால் நான் சொல்லும் விடயம் அவர் ஒரு குழந்தையல்ல சிறிலங்கா சுதந்திர கட்சியுடன் சேர்ந்து பிள்ளையானுடன் சேர்ந்து அனைத்தையும் செய்துவிட்டு தற்பொழுது தமிழ் தேசியம் தொடர்பாகவும் தமிழ் மக்களின் உரிமைப்போராட்டம் பற்றியும் பேசிவருவதற்கு நான் கஜேந்திரகுமார் சம்மந்தமாக அல்லது செல்வம் அடைக்கலநாதன் சம்மந்தமாக அவர்கள் நேர்மையாக அந்த விடயங்களை கையாள்கின்றார்கள் என்று சொல்லுவேனே தவிர சாணக்கியன் சம்மந்தமாக நான் எந்தவொரு உத்தரவாதத்தையும் உங்களுக்கு வழங்க முடியாது. அப்படியான தமிழ் மக்களுக்கே நேர்மையாக இருக்காத ஒருவர் இன்று முஸ்லிம் சமூகத்திற்காக பேசினால் பரவாயில்லை முஸ்லிம் சமூகத்திற்காக வழிநடத்த முனைகின்றார்.

என்னவென்றால் முஸ்லிம் மக்களை நொக்கி சொல்கின்றார் இந்த இந்த அமைச்சர்களுக்கு கல் எரியுங்கள் என்று. அதுவொரு வழிநடத்தல் தானே அந்த சொற்பதத்தை ஏற்றுக்கொள்கின்றீர்களா. அந்த வழிநடத்தல் கூடாது ஏனென்றால் இதே விடயத்தை இவருடைய மூத்த அப்பா இராசமாணிக்கம் குறிப்பாக 1970 களில் செய்த விடயம் தமிழ் இளைஞர்களை நோக்கி அன்றிருந்த அரசியல் பிரமுகர்கள் பாராளுமன்ற உறுப்பினர்கள் என்று அவர்களை சுடுங்கள் என்றும் தாக்குங்கள் என்றும் கூறிய முதலாவது அரசியல் படுகொலை நடைபெற்றது.

அதே போன்று அந்த இளைஞர்களை ஆயுதம் ஏந்தி தமிழ் மக்களுடைய அரசியல் பாதையிலே பாரிய தோல்வி அதில் கருத்து கூற வரவலில்லை. ஆனால் பாரிய அழிவு நடந்தது உண்மை அதை நீங்கள் ஏற்றுக்கொள்ளுங்கள். பல்லாயிரக்கணக்கான அப்பாவி தமிழ் மக்களின் உயிர்கள் சொத்துக்கள் இந்த யுத்தத்தினால் அழிக்கப்பட்டன. எனவே அந்த நிலைமை முஸ்லிம் சமூகத்தின் சஹறான் என்று ஒரு பேயன் ஏற்கனவே 2019 இல் ஈஸ்டர் தாக்குதல் நடத்தியதன் காரணமாக இன்று ஒட்டுமொத்த முஸ்லிம் சமூகமும் பெரும்பான்மை இனமாக மக்களை சந்தேகிக்கும் ஒரு சூழல் இருக்கும் பொழுது சாணக்கியன் போன்றோர் முஸ்லிம் சமூகத்தை வழிநடத்தி இன்று எம்.பி மார்களை பகீரங்கமாக தாக்க சொல்லுகின்றவர் நாளை குருநாகல் பிரதேசத்திற்கு சென்று ஒரு இளைஞர் குழுவை சந்தித்திருக்கின்றார். அங்கு என்ன பேசினார் என்று தெரியாது. இந்தந்த முஸ்லிம் எம்பிமார்களுக்கு எதிராக அல்லது இதை விட நீங்கள் வேறு தீவிரமான வன்முறைகளை பாவிக்க வேண்டும் என்று சொன்னால் யாருக்கு தெரியும் அது எங்களுக்கு தெரியுமா? முஸ்லிம் சமூகத்திற்கு தெரியுமா.

ஏனென்றால் இதுவொரு ஆபத்தான கலாச்சாரத்தை இந்த நாட்டுக்குள் முஸ்லிம் சமூகத்திற்குள் கொண்டுவந்துவிடும் என்பதற்காக ஒரு எச்சரிக்கை உணர்வோடு நான் சொன்னேன் இவ்வாறான வந்தேரித்தனமாக இந்த விடயத்தை கையாள்வதை அனுமதிக்க கூடாது .இதனை சிரேஷ்ட தலைவர்கள் ரவூப் ஹக்கீம் ரிஷாட் பதியூதின் போன்றோர்கள் இதை கவனத்தில் எடுக்க வேண்டும் என்று பாராளுமன்றத்தில் கூறியிருக்கின்றேன்.

**தொடரும்...**

# விளையாட்டு செய்திகள்

## 24 ஆவது குளிர்கால ஒலிம்பிக் போட்டிகள்

24 ஆவது குளிர்கால ஒலிம்பிக் போட்டிகள் சீனாவின் பெய்ஜிங் நகரில் (04.02.2022)வெள்ளிக்கிழமை அதிகாரப்பூர்வமாகத் தொடங்குகிறது.

பெய்ஜிங்கில் உள்ள தேசிய மைதானத்தில் நடைபெறும் நிகழ்ச்சியில் ஜனாதிபதி ஷி ஜின்பிங் கலந்துகொண்டு போட்டிகளை தொடங்கி வைப்பார் என எதிர்பார்க்கப்படுகிறது. ஒரு சில விளையாட்டுகளின் முதல்கட்ட சுற்றுகள் கடந்த 2 ஆம் திகதியே தொடங்கிவிட்டாலும், ஒலிம்பிக் தீபமேற்றிய பிறகே, ஒலிம்பிக்ஸ் அதிகாரப்பூர்வமாகத் தொடங்கியதாக அறிவிக்கப்படுகிறது.



கடந்த ஆண்டு அக்டோபர் 18 ஆம் திகதி, ஒலிம்பிக்ஸின் பிறப்பிடமான கிரீஸில் தொடங்கிய ஒலிம்பிக் ஜோதி ஓட்டம், வெள்ளிக்கிழமை போட்டியின் தொடக்க நிகழ்ச்சி நடைபெறும் மைதானத்தில் ஒலிம்பிக் தீபத்தை ஏற்றுவதுடன் நிறைவடைகிறது. கொரோனா தொற்று அச்சம் காரணமாக பெய்ஜிங் நகரில் ஒலிம்பிக் ஜோதி ஓட்டத்தின் கால அளவு குறைக்கப்பட்டுள்ளது.

கொரோனா தொற்று பாதிப்பு சூழலில் டோக்கியோ ஒலிம்பிக் கடந்த ஆண்டு வெற்றிகரமாக நடத்தி முடிக்கப்பட்ட நிலையில், அதே போல் நடத்தி முடிக்கப்படும் நோக்கத்துடன் தொடங்குகிறது இந்த குளிர்கால ஒலிம்பிக். உலகெங்கும் கொரோனா பாதிப்பு மீண்டும் தீவிரமாகியிருக்கும் நிலையில் இந்தப் போட்டியை ஒத்திவைப்பதற்கு கோரிக்கைகளும், பரிந்துரைகளும் முன்வைக்கப்பட்டன.

அவற்றைக் கடந்த வகையில் உரிய பாதுகாப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளுடன் போட்டியை நடத்துவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. மிகக் கடுமையான கட்டுப்பாடுகளுடன் கூடிய 'பயோ பபுள்' பாதுகாப்பு வளையம் அமைக்கப்பட்டுள்ளதுடன், போட்டியாளர்கள் உள்பட ஒலிம்பிக்குடன் தொடர்புடைய அனைவருக்கும் அவ்வப்போது கொரோனா பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

எனினும், போட்டியில் பங்கேற்க வந்துள்ள வீரர், வீராங்கனைகள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினருக்கும் கொரோனா பாதிப்பு ஏற்பட்டு, அவர்கள் தனிமைப்படுத்தப்பட்டு சிகிச்சையில் இருக்கின்றனர்.

இதனிடையே, மனித உரிமை மீறல் நடவடிக்கைகளில் சீனா ஈடுபடுவதாகக் குற்றம்சாட்டி அமெரிக்கா, இந்தியா உள்ளிட்ட பல்வேறு நாடுகளும் ராஜ்ஜீய ரீதியிலாக இந்த ஒலிம்பிக் போட்டியில் பங்கேற்பதை தவிர்த்துள்ளன. எனினும், அந்த நாடுகளின் சார்பில் போட்டியாளர்கள் களம் காண்கின்றனர்.

இந்த குளிர்கால ஒலிம்பிக் போட்டியில் இந்தியாவின் சார்பில் ஒரேயொரு வீரர் மட்டும் பங்கேற்கிறார். பனிச்சறுக்கு வீரரான ஆரிஃப் கான், 'ஸ்லாலம்', 'ஜயன்ட் ஸ்லாலம்' ஆகிய இரு பிரிவுகளில் களம் காண்கிறார். அவரோடு 6 பேர் கொண்ட இந்திய குழு பெய்ஜிங் சென்றுள்ளது. இதில் குழுவின் மேலாளரான முகமது அப்பாஸ் வனிக்கு முதலில் கொரோனா பாதிப்பு ஏற்பட்டதாக கூறப்பட்ட நிலையில், தற்போது 2 பரிசோதனைகளின் முடிவில் அவருக்கு தொற்று பாதிப்பு இல்லை எனத் தெரியவந்துள்ளது.

தொடக்கம் - பிப்ரவரி 4
நிறைவு - பிப்ரவரி 20
விளையாட்டுகள் - 15 விளையாட்டுகள் ஃ 109 போட்டிகள்
பங்கேற்பு - 91 நாடுகள்
போட்டியாளர்கள் (சுமார்) - 2,871
மகளிர் - 1,290

## IPL ஏலம் - ஷாருக் கான் தனது விலையை உயர்த்தினார்!

ஐபிஎல் ஏலப் பட்டியலில் இடம்பெற்றுள்ள தமிழக வீரர் ஷாருக் கான் தனது அடிப்படை விலையை உயர்த்தியுள்ளார். மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான டி20 தொடரில் இந்திய அணிக்கான மாற்று வீரர்களாக தமிழகத்தைச் சேர்ந்த ஷாருக் கானும் சாய் கிஷோரும் தேர்வாகியுள்ளார்கள்.

சையத் முஷ்டாக் அலி கிண்ண, விஜய் ஹசாரே போட்டிகளில் கடைசிக்கட்டங்களில் 26 வயது ஷாருக் கான் அதிரடியாக விளையாடியதால் இந்திய அணிக்குத் தேர்வாகியுள்ளார். சையத் முஷ்டாக் அலி டி20 கிண்ண இறுதிச்சுற்றில் கடைசி 4 ஓவர்களில் தமிழக அணி வெற்றி பெற 55 ரன்கள் தேவைப்பட்டன. அப்போதுதான் ஷாருக் கான் களமிறங்கியிருந்தார். அதனால் அணியைக் கரை சேர்க்க வேண்டிய மொத்தப் பொறுப்பும் அவரிடம் இருந்தது. கடைசி 7 பந்துகளில் 22 ஓட்டங்கள் தேவைப்பட்டன. பிறகு கடைசிப் பந்தில் வெற்றிக்கு 5 ஓட்டங்கள் தேவைப்பட்டன.

பரபரப்பான அந்தத் தருணத்தில் அற்புதமான சிக்ஸர் அடித்து தமிழக அணிக்கு வெற்றியை வழங்கினார் அதிரடி வீரர் ஷாருக் கான். அந்த ஆட்டத்தில் 15 பந்துகளில் 3 சிக்ஸர்கள், 1 பவுண்டரியுடன் ஆட்டமிழக்காமல் 33 ஓட்டங்கள் எடுத்தார்.

மாற்று வீரர்களாக இந்திய அணிக்குத் தேர்வாகியுள்ள ஷாருக் கானும் சாய் கிஷோரும் ஐபிஎல் ஏலத்தில் அதிகத் தொகைக்குத் தேர்வாக வாய்ப்புள்ளதாகக் கூறப்படுகிறது.

அதிலும் ஷாருக் கான், ஐபிஎல் போட்டியிலும் தனது திறமையை ஓரளவு நிரூபித்துள்ளார். இதனால் இந்த வருட ஐபிஎல் போட்டியில் அவர் மீதான எதிர்பார்ப்பு அதிகமாகியுள்ளது.

ஆரம்பத்தில் ஏலத்துக்கான அடிப்படை விலை - ரூ. 20 லட்சம் என நிர்ணயம் செய்திருந்தார் ஷாருக்கான். தற்போது இந்திய அணிக்குத் தேர்வாகியிருப்பதாலும் தன் மீதான அதிக எதிர்பார்ப்பின் காரணமாகவும் அடிப்படை விலையை ரூ. 40 லட்சமாக உயர்த்தியுள்ளார்.

2021 ஐபிஎல் ஏலத்தில் ஷாருக்கானை ரூ. 5.25 கோடிக்குத் தேர்வு செய்தது பஞ்சாப் அணி. 11 ஆட்டங்களில் 10 சிக்ஸர்கள் உள்பட 153 ஓட்டங்கள் எடுத்தார். ஸ்டிரைக் ரேட் - 134.21.

## இந்திய கிரிக்கெட் அணி வீரர்களுக்கு கொரோனா!

மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான தொடரில் விளையாடவுள்ள இந்திய கிரிக்கெட் வீரர்கள் ஷிகர் தவான், ருதுராஜ் கெய்க்வாட், ஷ்ரேயஸ் ஐயர் உள்ளிட்டோர் மற்றும் உதவியாளர்களுக்கு கொரோனா நோய்த் தொற்று இருப்பது அன்று (புதன்கிழமை) உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதுபற்றி பிசிசிஐ அதிகாரி ஒருவர் பிடிஐ செய்தி நிறுவனத்திடம் கூறியதாவது:

ருதுராஜ் கெய்க்வாட், ஷ்ரேயஸ் ஐயர் மற்றும் ஷிகர் தவான் ஆகிய மூன்று வீரர்களுக்கு கொரோனா தொற்று இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. எனினும், உதவியாளர்கள் சிலருக்கும் நோய்த் தொற்று இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. அவர்கள் இரண்டு முதல் நான்கு பேர் வரை இருப்பார்கள்.

இந்தியா, மேற்கிந்தியத் தீவுகள் இடையிலான ஒருநாள் தொடர் பிப்ரவரி 6 ஆம் திகதி தொடங்குகிறது. வீரர்கள் மூவருக்கு தொற்று பாதிப்பு இருப்பது உறுதி செய்யப்பட்டதை அடுத்து, அவர்கள் மூவரும் ஒருவார காலம் தனிமையில் இருந்து தொற்று பாதிப்பு இல்லை என்பது உறுதி செய்யப்பட்ட பிறகு அணியுடன் இணைவார்கள்.

இதன்மூலம், தயார்நிலை வீரர்களாக சேர்க்கப்பட்டுள்ள ஷாருக்கான், சாய் கிஷோர் மற்றும் ரிஷி தவான் ஆகியோர் அணியில் சேர்க்கப்படுவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. ரோஹித் சர்மாவுடன் தொடக்க ஆட்டக்காரராக களமிறக்குவதற்கு வெங்கடேஷ் ஐயரைப் பரிந்துரைப்பார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.



# உலக பார்வை



## ஐரோப்பாவிற்கு மேலதிக அமெரிக்க படையினர்

ஐரோப்பாவிற்கு மேலதிக படைகளை இந்த வாரத்தில் அனுப்புவதற்கு அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் உத்தேசித்துள்ளதாக பென்டகன் தெரிவித்துள்ளது.

உக்ரைனை ரஷ்யா ஆக்கிரமிக்கும் என்ற அச்சம் வலுப்பெற்ற நிலையில் இந்த நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

Bragg படைத்தளம் மற்றும் வடக்கு கரோலினாவில் இருந்து போலந்து மற்றும் ஜெர்மனிக்கு சுமார் 2,000 படையினர் அனுப்பப்படவுள்ளனர்.

அத்துடன், ஜெர்மனியில் ஏற்கனவே நிலைநிறுத்தப்பட்டுள்ள 1000 படையினர் ரோமானியாவுக்கு அனுப்பப்படவுள்ளதாக பென்டகன் அறிவித்துள்ளது.

உக்ரைன் எல்லையில் ஒரு இலட்சம் படையினரை நிலைநிறுத்தியுள்ள ரஷ்யா, அமெரிக்காவின் இந்த நடவடிக்கை அழிவுக்குரியது என குறிப்பிட்டுள்ளது.

## உலக சாதனை படைத்த மின்னல் பதிவு : ஐ.நா.சபை

கடந்த 2020 ஆண்டு ஏப்ரல் மாதம் 29ஆம் திகதி அமெரிக்காவின் தென் பகுதி வானில் வெளிப்பட்ட ஒரு மின்னலின் பதிவு புதிய உலக சாதனை படைத்திருப்பதாக ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது. அமெரிக்காவின் மிசிசிப்பி, லூசியானா மற்றும் டெக்சாஸ் முழுவதும் மொத்தம் 770 கிலோமீற்றர் தூரம் இந்த மின்னல் தெரிந்ததாகவும் ஐ.நா.வின் உலக வானிலை அமைப்பு ஓர் அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளது.

இது இங்கிலாந்தின் லண்டன் நகரிலிருந்து ஜெர்மனியின் ஹம்பர்க் நகரம் வரை உள்ள தூரத்துக்குச் சமமானது என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. கடந்த 2018 ஒக்டோபர் 31ஆம் திகதியன்று தெற்கு பிரேஸில் பகுதியில் பதிவான ஒரு மின்னலின் தூரத்தை விட 60 கிலோமீற்றர் அதிகமாக அமெரிக்க மின்னல் பதிவாகி உள்ளது.

இது இயற்கை நிகழ்வுகளின் அசாதாரண பதிவுகள் என ஐ.நா.வானிலை மற்றும் கால நிலை அதிகாரி ராண்டால் செர்வெனி தெரிவித்துள்ளார். மின்னலின் நீளம் மற்றும் கால அளவைக் கண்டறியப் பயன்படுத்தப்படும் தொழில்நுட்பம் அண்மைய ஆண்டுகளில் வியத்தகு முறையில் மேம்பட்டுள்ள தாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## ஐ.எஸ். தலைவர் பலி - அமெரிக்கா அறிவிப்பு!

சிரியாவில் அமெரிக்க சிறப்புப் படையினர் நடத்திய அதிரடித் தாக்குதலில் இஸ்லாமிய தேச (ஐ.எஸ்.) பயங்கரவாத அமைப்பின் தலைவர் அபு இப்ராஹிம் அல்-ஹஷிமி அல்-குரேஷி பலியானார். இதுகுறித்து ஜனாதிபதி ஜோ பைடன் வியாழக்கிழமை கூறியதாவது: ஐ.எஸ். பயங்கரவாத அமைப்பின் தலைவர் அபு இப்ராஹிம் அல்-ஹஷிமியை குறிவைத்து சிரியாவின் வடமேற்கே அமைந்துள்ள இத்லிப் மாகாணத்தில் அமெரிக்க சிறப்புப் படையினர் புதன்கிழமை நள்ளிரவில் அதிரடித் தாக்குதல் நடத்தினர். இந்த நடவடிக்கையில் அவர் உயிரிழந்தார் என்று ஜோ பைடன் அறிவித்தார். அமெரிக்க படையினரின் தாக்குதல் நடவடிக்கையின்போது ஐ.எஸ். அமைப்பின் முன்னாள் தலைவர் அபு பக்கர் அல்-பாக்தாதியை போலவே அபு இப்ராஹிம் அல்-ஹஷிமியும் வெடிகுண்டை வெடிக்கச் செய்து பெண்கள், குழந்தைகள் உள்ளிட்ட குடும்பத்தினரைக் கொன்று தானும் தற்கொலை செய்து கொண்டதாக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இந்த சம்பவத்தில் 6 சிறுவர்கள், 4 பெண்கள் உள்பட 13 பேர் உயிரிழந்ததாக தகவல்கள் தெரிவிக்கின்றன. சிரியாவிலும், ஈராக்கிலும் கடந்த 2014 ஆம் ஆண்டில் அதிரடியாக முன்னேறி கணிசமான பகுதிகளைக் கைப்பற்றிய ஐ.எஸ். பயங்கரவாதிகள், அங்கு இஸ்லாமிய பேரரசை அமைப்பதாக அறிவித்தனர். ஈராக்கின் மொசூல் உள்ளிட்ட பல்வேறு நகரங்களிலும் சிஞ்சார் மலைப் பகுதியிலும் அவர்கள் படையினரையும் பொதுமக்களையும் கொடூரமாக கொலை செய்தது உலகம் முழுவதும் அதிர்ச்சி அலையை ஏற்படுத்தியது. அதனைத் தொடர்ந்து சிரியாவிலும், ஈராக்கிலும் ஐ.எஸ். பயங்கரவாதிகளை ஒடுக்குவதற்காக அமெரிக்கா ராணுவ நடவடிக்கை மேற்கொண்டது. அமெரிக்காவின் உதவியுடன் மிகுந்த போராட்டத்துக்குப் பிறகு ஐ.எஸ். பயங்கரவாதிகளிடமிருந்த பகுதிகளை ஈராக் படையினர் மீட்டனர்.

சிரியாவிலும் ரஷ்ய உதவியுடன் அந்த நாட்டுப் படையினர் ஐ.எஸ். பயங்கரவாதிகளை விரட்டியடித்தனர். இதற்கிடையே, ஐ.எஸ். அமைப்பை உருவாக்கிய அபு பக்கர் அல்-பாக்தாதியை சிரியாவின் இத்லிப் மாகாணத்தில் அமெரிக்க படையினர் கடந்த 2019 ஆம் ஆண்டு சுற்றிவளைத்த போது, அவர் குடும்பத்தினருடன் தற்கொலை செய்துகொண்டார். அதனைத் தொடர்ந்து, அந்த பயங்கரவாத அமைப்பின் தலைவராக அபு இப்ராஹிம் அல்-ஹஷிமி அல்-குரேஷி பொறுப்பேற்றுக் கொண்டார். தற்போது அமெரிக்காவின் தாக்குதல் நடவடிக்கையின்போது அவரும் குடும்பத்தினரைக் கொன்று தற்கொலை செய்துகொண்டுள்ளார். இந்த பிராந்தியத்தில் ஐ.எஸ். பயங்கரவாதிகள் மீண்டும் தலையெடுக்க தீவிர முயற்சி மேற்கொண்டு வந்த சூழலில் அமைப்பின் தலைவர் பலியாகியிருப்பது குறிப்பிடத்தக்கது.



## அமெரிக்கா மீது ரஷ்ய ஜனாதிபதி குற்றச்சாட்டு

உக்ரைனுடனான போருக்கு அமெரிக்கா தம்மை தள்ள முயற்சிப்பதாக ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டின் குற்றஞ்சுமத்தியுள்ளார். ரஷ்யா மீது மேலதிக தடைகளை விதிப்பதற்காக மோதலை ஒரு காரணியாக பயன்படுத்துவதே அமெரிக்காவின் இலக்கு என அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஐரோப்பாவின் நேட்டோ கூட்டணி தொடர்பில் ரஷ்யாவின் அதிருப்தி நிலைப்பாட்டையும் அமெரிக்கா புறக்கணித்து வருவதாக அவர் கூறியுள்ளார். உக்ரைன் எல்லைகளில் ரஷ்ய படையினரின் குவிப்பு தொடர்பில் பதற்றம் அதிகரித்துள்ளது. எவ்வாறாயினும், ரஷ்யா ஆக்கிரமிப்பு நடவடிக்கைக்கு திட்டமிட்டுள்ளதாக மேற்குலக நாடுகள் முன்வைக்கும் குற்றச்சாட்டை ரஷ்யா தொடர்ச்சியாக மறுத்து வருகின்றது. உக்ரைனின் தெற்கு க்ரைமியா தீவகத்தை தம்முடன் ரஷ்யா இணைத்துக்கொண்டு 8 வருடங்கள் கடந்துள்ள நிலையில் அதிகளவு படையினரை நிலைநிறுத்தியுள்ளது.

ரஷ்ய ஆதரவு கிளர்ச்சியாளர்களின் கட்டுப்பாட்டிலுள்ள கிழக்கு பிராந்தியத்துடன் சமாதானத்தை நிலைநாட்டுவதற்காக சர்வதேச ஒப்பந்தமொன்றை அமுல்படுத்த உக்ரைன் அரசாங்கம் தவறியுள்ளதாக மொஸ்கோ குற்றஞ்சுமத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.



## மசகு எண்ணெய் விலை அதிகரிப்பு ஒரு பீப்பாய் 91 டொலர்

உலக சந்தையில் மசகு எண்ணெய் பீப்பாய் ஒன்றின் விலை எதிர்பாராதவிதமாக உயர்ந்துள்ள தாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. கடந்த வாரம் ஒரு பீப்பாய் மசகு எண்ணெய் விலை 81 முதல் 83 அமெரிக்க டொலர் வரை இருந்தது. ஆனால் தற்போது ஒரு பீப்பாய் மசகு எண்ணெய் விலை 91 அமெரிக்க டொலராக உயர்ந்துள்ளது.

உலகச் சந்தையில் மசகு எண்ணெய் விலை இந்த மாதத்துக்குள் குறையும் என எதிர்பார்க் கப்படுகிறது. ஆனால் விலை உயர்ந்தே இருக்கும் என்று பொருளாதார நிபுணர்கள் கூறுகின் றனர். இந்த நிலைமையால் பொருளாதார நெருக்கடியிலுள்ள நாடுகள் மேலும் சிக்கலுக் குள்ளாகும் எனவும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

## டாங்கி கவசத்தையும் ஊடுருவி பார்க்கும் தொழில்நுட்பத்தை உருவாக்கியுள்ள இந்திய நிறுவனம் !!

மும்பையை மையமாக கொண்டு இயங்கி வரும் அஜினாலென்ஸ் எனும் தனியார் பாதுகாப்பு துறை நிறுவனம் டாங்கி கவசத்தை தாண்டி பாரக்கும் தொழில்நுட்பத்தை உருவாக்கி உள்ளது. AjnaESAS என பெயரிடபட்டுள்ள இந்த அமைப்பானது 360 டிகிரி கோணத்திலும் வீரர்கள் டாங்கியை விட்டு வெளியே வராமலேயே இரவிலும் பகலிலும் வெளியே நடப்பதை பார்க்க உதவும். அதாவது அதிக திறன் வாய்ந்த இரவு மற்றும் பகலில் படம்பிடிக்கும் கேமிராக்களை பயன்படுத்தி வெளியே நடப்பதை டாங்கியின் உள்புறம் இருந்து கொண்டே சுற்றிலும் பார்க்க முடியும்.

அஜினாலென்ஸ் நிறுவனம் இதுபற்றி வெளியிட்டு உள்ள தகவலின்படி இந்த AjnaESAS அமைப்பின் சோதனைகள் வெற்றிகரமாக நிறைவு பெற்றுள்ளதாகவும் விரைவில் இந்திய டாங்கிகளில் இது பொருத்தப்படும் எனவும் கூறியுள்ளது















# இலங்கை திருநாட்டின் 74 வது தேசிய சுதந்திர தினம்

நாட்டிற்கான பொறுப்புகளை நிறைவேற்றுவதன் மூலம் தமக்கு கிடைத்த சுதந்திரத்தை அனைவரும் பயனடையச் செய்ய முடியும் என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். சுதந்திரமான, ஜனநாயக நாடு என்ற வகையில் அனைவருக்கும் உரிமைகள் மற்றும் பொறுப்புகள் உள்ளன என்பதை காட்டும் ஜனாதிபதி, பொறுப்புகளை மறந்துவிட்டு உரிமைகள் பற்றி மாத்திரம் பேசுவது ஏற்புடையதல்ல எனவும் தெரிவித்துள்ளார். கொழும்பு சுதந்திர சதுக்கத்தில் அன்று (04) முற்பகல் இடம்பெற்ற 74 ஆவது தேசிய சுதந்திர தின நிகழ்வில் நாட்டு மக்களுக்கு உரையாற்றும் போதே ஜனாதிபதி இதனைக் குறிப்பிட்டுள்ளார்.



நிகழ்வுகள் 2022.02.04 அன்று எடுக்கப்பட்ட புகைப்படங்கள்

இப்பத்திரிகை இலக்கம் 154ஏ, தேக்கவத்தையில் அமைந்துள்ள தென்றல் அச்சகத்தில் அச்சிட்டு, தினப்புயல் நிறுவனத்தால் 06.02.2022 அன்று வெளியிடப்பட்டது.